விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
(3948)
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 14 திங்கட்கிழமை (28.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 160

# பிராந்திய விமான நிலையமாக பலாலியை மாற்றக் கோரவும்!

## தமிழ் அரசியல்வாதிகளிடம் சுரேஷ் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்) பலாலி விமான நிலையத்தை ஒரு பிராந்திய விமான நிலையமாக மாற்றுமாறு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இன்று சந்திக்கும் போது கோரிக்கை விடுக்க வேண்டுமென சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார். (03ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் இலங்கையர் பலி

(சென்னை)

தமிழ்நாடு - தூத்துக்குடியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான 13 பேரில் இலங்கையர் ஒருவரும் உள்ளடங்குவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக ஊடகங்கள் இந்த தகவலை வெளியிட்டுள்ளன. இதன் போது, உயிரிழந்தவர் 24

## மீனவர் மூவரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

குறிகட்டுவான் பகுதியில் இருந்து நயினாதீவு பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மூவரைக் காணவில்லை என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. 24

## இலங்கை அரசைக் கண்டிக்க வேண்டும்

### ஜி.கே.வாசன் வலியுறுத்து

(இராமேஸ்வரம்)

தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இந்திய மத்திய அரசு இலங்கை அரசைக் கண்டிக்க வேண்டுமென தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் 24

## அபிவிருத்தி தொடர்பில் ஆராய பிரதமர் ரணில் யாழ். வருகை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் ஆராய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

கொட்டும் மழையில் விசேட உலங்கு வானூர்தியில் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் பிரதமர் யாழ்ப்பாணம் வந்தடைந்தார். நேற்று பிற்பகல் 2.00 24

## 79,80களில் இலங்கையுடனான உறவுகள் ஆவணங்களை அழித்தது பிரித்தானியா

(கொழும்பு)

பிரித்தானிய அரசாங்கம், இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கிய உதவிகள் தொடர்பான விவரங்கள் அடங்கிய சுமார் 200 ஆவணங்களை (கோப்புகள்) பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொது நலவாய செயலகம் அழித்துள்ளதாக, தி கார்டியன் ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு கட்டியெழுப்பப்பட்ட காலப்பகுதியில், அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு, பிரித்தானியாவின் எம்.ஐ 5 (இராணுவ புலனாய்வு பிரிவு - 5) மற்றும் எஸ்.ஏ.எஸ் (விசேட வான் சேவை) ஆகிய அமைப்புகள், நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டமை உள்ளிட்ட தகவல்கள் குறித்த கோப்புகளில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தன.

அழிக்கப்பட்ட அந்த கோப்புகளில் இலங்கையில் புலிகள் அமைப்பு கட்டியெழுப்பப்பட்ட காலப்பகுதியில், இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் 24

## மூன்றாவது முறை சம்பியனானது சென்னை




## அடுத்த மாதம் முதல் பாரிய ஆர்ப்பாட்டங்கள்

### கூட்டு எதிர்க்கட்சி

(கொழும்பு)

மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிகளினால் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு எதிராக நாடு முழுவதும் 24

## சில அரசியல் கட்சிகள் அரசாங்கத்தின் கைக் கூலிகள்

### என்கிறார் மகிந்த

(கொழும்பு)

சில அரசியல் கட்சிகள் அரசாங்கத்தின் கைக்கூலிகளாக செயற்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வலஸ்முல்ல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே 24

## கிளிநொச்சியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் வைத்து 1.6 கிலோக் கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். 23

## ஜே.வி.பி முன்வைத்த 20ஆவது திருத்தம் வரவேற்புக்குரியது!

### ஜயம்பதி கருத்து

(கொழும்பு)

ஜே.வி.வி. சமர்ப்பித்துள்ள அரசமைப்பின் 20ஆவது திருத்த யோசனைகளை எதிர்க்க வேண்டிய தேவையில்லையென அரசமைப்பு நிபுணரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதை நோக்கமாக கொண்டு ஜே.வி.பி முன்வைத்துள்ள யோசனை 23

துரித தபால்கள் பொதிகள் சேவை
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
(4222)
UK -550/=
Germany -650/=
France -700/=
Canada -850/=
Australia -800/=
திருமுருகன் கொம் நெற்
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா.
Hotline -0777554528

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அலோசியஸிடம் பணம் வாங்கவில்லை இது பழிவாங்கும் செயற்பாடு

## தயாசிறி சீற்றம்

(கொழும்பு)

அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து 10 இலட்சம் ரூபாவினை பெற்றுக் கொண்டதாக தெரிவிப்பது, தம்மை பழிவாங்கும் செயற்பாடென முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணை முறி விநியோகம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட அர்ஜுன் அலோசியஸிடம் தயாசிறி பணத்தை பெற்றுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவில் வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கத்தில் இருக்கும் வரை இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாத நிலையில், தற்போது அரசாங்கத்திலிருந்து விலகியதால் பழிவாங்கும் வகையில் இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானதென தெரிவித்த தயாசிறி, அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து 118 பேர் பணம் பெற்றுள்ளதாகவும் அரசாங்கம் அவர்களின் பெயர்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணிலுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரித்து வாக்களித்ததால், தயாசிறி உள்ளிட்ட 6 அமைச்சர்கள் உள்ளடங்கலாக 16 பேர் பதவி துறந்து அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளனர்.

இந்நிலையில், இக்குற்றச்சாட்டு எழுந்துள்ளதோடு, தயாசிறியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கடந்த வாரம் குற்றப்புலனாய்வு பிரிவில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியிருந்தார். தயாசிறி சார்பாக அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரே பணத்திற்கான காசோலையை பெற்றுக்கொண்டதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பிரகாரம் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு)

உ

தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து

தில்லையம்பதி ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயில்

வசந்த வைகாசி மஹோற்சவ பெருவிழா-2018

இரத உற்சவ சிறப்பு மலர்-28.05.2018





ஊர் கூடி வடம் பிடித்து தேர் இழுப்போம்

ஆக்கம்:அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்
பாடியவர்:கலைமாமணி, ரி.எம்.செளந்தரராஜன்
இராகம்-காமாஸ்
தாளம்-ஆதி
ஊர் கூடி வடம்பிடித்தே உளம் உருகச்-சித்திரத்
தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி
(ஊர் கூடி)

அனுபல்லவி
வாரகி வைஷ்ணவி வளம் திகழ் கோண்டாவில்
சீர்மேவு தில்லைப்பதி சிவகாம்சுந்தரி
(ஊர் கூடி)

சரணம்
தேரின் திருத்தொங்கல் வாகுமாலை சூட
நாதஸ்வர கானம் நாதத் தவில் ஒலிக்க
பேரின்ப பக்தர் வழிபெருகிக் கண்ணீர் சொரிய
ஊரின் புறக் கோண்டாவில் உல்லாசி பவனி வந்தாள்
(ஊர் கூடி)

புன்னகை புரிந்தாருள் பொலிவுறத் தந்தனன்
அன்னவள் வரதமும் அபயமும் காட்டினாள்
என்னகுறை எமக்கு எங்கள் தாய் இருக்கும் போது
இன்னமுத்தத் தாயன்பால் என்றும் எமைக் காத்திடுவாள்
(ஊர் கூடி)

"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"
பரிபாலன சபை, தேர்த்திருவிழா உபயகாரர்கள்

உ
ஓம் சக்தி



கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு
செல்வநாகபூசணி அம்பாள் திருக்கோயில்
தீ மிதிப்பு திருவிழா

வைகாசி விசாக திருநாளில் 28.05.2018 திங்கட்கிழமை (இன்று)
விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 14ம் நாள்

நிகழ்ச்சி

- காலை 9 மணிக்கு பூசை தொடர்ந்து பொங்கல் ஆரம்பம், தீ மூட்டுதல் நடைபெறும்.
- மாலை 5 மணிக்கு பூசை தொடர்ந்து அம்பாள் வெளிவந்து தீ மிதித்தல் நடைபெறும். பின் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று பூசை நடைபெறும்.
- நாளை 29.05.2018 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு பொங்கல், அம்பாள் வீதி உலா வருதல் நடைபெறும்.

அம்பாள் அடியார்களும், ஆலய தர்மகர்த்தாவும்.

(4221)

2ஆம் ஆண்டு நினைவு தினம் 6ஆம் ஆண்டு



அமரர்
தனலஷ்மி நாகரத்தினம்

மண்ணில் 17.07.1944
விண்ணில் 20.05.2016



அமரர்
திருநாவுகரசு நாகரத்தினம்
(சாந்தி அச்சக உரிமையாளர்)

மண்ணில் 31.03.1936
விண்ணில் 07.10.2012

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும்
வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வங்களே!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது...

(4223)

நாகரத்தினம் குடும்பத்தினர்

தயா அச்சகம் தயா வெளியீடு 575, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (077 3965214)

# பலாலியை பிராந்திய விமான நிலையமாக மாற்ற பிரதமரிடம் கோரிக்கை விடுங்கள்

## தமிழ் அரசியல்வாதிகளிடம் சுரேஷ் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தை ஒரு பிராந்திய விமான நிலையமாக மாற்றுமாறு, வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் கோரிக்கைவிட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வலம்புரிக்கு மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில், இன்று கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் பங்கேற்று இம்மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயவுள்ளார்.



வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் சில வீதிகள் அமைக்கப்பட்டுள்ளதோடு வேறு சில அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால், நாங்கள் முக்கியமாக எதிர்பார்ப்பது பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்துவதன் ஊடாக இங்கு ஓரளவுக்கு வேலைவாய்ப்புக்கள் ஏற்படும் என்பதாகும்.

அதுமட்டுமின்றி, வடக்கில் வியாபார நடவடிக்கைகளிலும் முன்னேற்றங்கள் ஏற்படும். அரச உத்தியோகங்களை மட்டும் நம்பியிருக்காமல் எமது மக்களுக்குப் பல்வேறுபட்ட துறைகளிலும் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

ஒட்டுமொத்தமாக இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு ஊக்குவிப்பாக இருக்கும். எனவே, இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் பிரதமரிடம், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் இவ்விடயத்தை முதன்மைப்படுத்தி கோரிக்கைவிட வேண்டும்.

பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக மாற்றுவதற்கு ஏற்கனவே இந்தியா உதவிகளைச் செய்வதாக உறுதியளித்திருந்தது.

எனவே, பிரதமர் முயற்சி செய்வாராக இருந்தால் இந்தியாவின் உதவியுடன் பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக மாற்ற முடியும். அவ்வாறு மாற்றுவதன் மூலம் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் பல அபிவிருத்திகள் ஏற்படும்.

குறிப்பாக போக்குவரத்து, சுற்றுலாத்துறை அபிவிருத்திகள் ஏற்படும். இதேபோன்று காங்கேசன்துறை துறைமுகத்தை இந்தியாவின் உதவியுடன் அபிவிருத்தி செய்வதன் மூலம் வடக்கிற்கான வர்த்தகத் தொடர்புகள் அதிகரிக்கும் இது ஒட்டுமொத்த இலங்கைக்கும் பாரிய நன்மைகளைக் கொண்டு வரும்.

ஆகவே, யாழ்ப்பாண அபிவிருத்தி மாவட்ட அபிவிருத்தி என்று மட்டுப்படுத்தாது வடக்கு மக்களின் வேலைவாய்ப்புக்களை அடிப்படையாக வைத்து ஒருமுழுமையான அபிவிருத்தியை தூரநோக்காகக் கொண்டு உடனடியாக செய்யப்பட வேண்டிய வேலைகள் இவை என்பதை இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் பிரதமரிடம் முதலமைச்சர், பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டும் என்பதே எமது கட்சியின் ஒரு பொதுவான கருத்தாகும்.

மேலும், அரச படைகளின் தேவைகளுக்கு வடக்கில் காணிகள் சுவீகரிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் வடக்கில் நிலவும் அரச உயரதிகாரிகளின் வெற்றிடங்களுக்கு தமிழர்களையே நியமிக்க வேண்டும் எனவும் எமது தமிழ் அரசியல்வாதிகள் பிரதமரிடம் கோரிக்கை விட வேண்டும் என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### நிதிமோசடி விசாரணைப் பிரிவால்

# கடமையைச் செய்ய அஞ்சும் அரச உத்தியோகத்தர்கள்

## அரச ஆலோசகர் பாஸ்கரலிங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்கள் கடமைகளை செய்ய அஞ்சுவதாக அரசாங்கத்தின் பிரதான ஆலோசகர்களில் ஒருவரான ஆர்.பாஸ்கரலிங்கம் தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்துவார்கள் என்ற அச்சம் காரணமாக அநேகமாக அதிகாரிகள் தங்களது பணிகளை உரிய முறையில் ஆற்றுவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற அரசாங்க பொருளாதார குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் விசாரணைகளினால் அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் பாஸ்கரலிங்கம் தெரிவித்துள்ளார். (இ-7)

## விபத்தில் சிக்கிய முதியவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிள் மோதிய விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த மாதம் 28 ஆம் திகதி இரவு 7 மணியளவில் வீதியோரமாக நின்று கொண்டிருந்த வயோதிபரை வாகன விளக்கு இல்லாமல்வந்த மோட்டார் சைக்கிள் மோதியது.

இதில் படுகாயமடைந்த வயோதிபர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று அதிகாலை 5 மணியளவில் உயிரிழந்தார்.

சாவகச்சேரி மடத்தடியைச் சேர்ந்த வெற்றிவேல் வீரய்யா (வயது- 64) என்பவரே உயிரிழந்தவராவார். (இ-7)

## இன்புளுவன்சா வைரஸ் காய்ச்சலால் மேலும் இரு குழந்தைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சலினால் கடந்த இரு தினங்களில் இரு குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஜயம்பதி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலையும் கடந்த 25 ஆம் திகதி இரவும் இந்த மரணங்கள் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆறு மாதங்கள் மற்றும் ஒன்றரை வயது ஆகிய இரு குழந்தைகளே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் இந்த வைரஸ் காரணமாக இது வரை 10 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும் அவ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## அமெரிக்க செனட்டின் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் நால்வர் இலங்கையில்

(கொழும்பு)

அமெரிக்க செனட் சபையின் உறுப்பினர்கள் குழுவொன்று இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளது.

செனட் சபையின் பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் நால்வரே இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளுடன், முக்கிய பேச்சுக்களை நடத்துவர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா- இலங்கை இடையிலான பாதுகாப்பு உறவுகள் வலுவடைந்து வரும் நிலையில், அமெரிக்க செனட்டின் பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் கொழும்பு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கண்டிக்கலவர பிரதான சூத்திரதாரிக்கு சிறைச்சாலையில் வைத்து தாக்குதல்

(கொழும்பு)

கண்டி கலவரத்தின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் மகாசேன பலகாய அமைப்பின் தலைவர் அமித் வீரசிங்க சிறைச்சாலையில் வைத்து தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலை வைத்திசாலையின் மருந்து விநியோகம் செய்யும் நபர் ஒருவர் அமித் வீரசிங்கவுக்கு தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதில் பாதிக்கப்பட்ட மகாசேன பலகாய அமைப்பின் தலைவர் அமித் வீரசிங்க அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சிறைச்சாலை பேச்சாளர் உபுல் தெனிய கருத்து தெரிவிக்கையில்,

அநுராதபுரம் சிறைச்சாலை வைத்திசாலையின் மருந்து விநியோகம் செய்யும் நபருக்கும், அமித் வீரசிங்கவுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த கருத்து மோதல் முற்றியதில் அமித் வீரசிங்க தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலை நடத்திய நபர் வாரியபொல சிறைச்சாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளார் என தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற கலவரத்தின் சூத்திரதாரி என கூறப்படும் மகாசேன பலகாய அமைப்பின் தலைவர் அமித் வீரசிங்க கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவருடன் சேர்த்து 40க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டதுடன், அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். எனினும் அமித் வீரசிங்க மட்டும் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கோத்தபாயவைக் கண்டு அனைவரும் அஞ்சுகின்றனர்

## பிரதியமைச்சர் ரஞ்சன் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு அனைவரும் அஞ்சுகின்றனர் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ஆட்சிக்கு வந்தால் சிக்கல் என அனைவரும் அஞ்சுகின்றார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்களுக்கு அனைவரும் பயம் எனவும், குண்டை கட்டிக் கொண்டு வருபவருக்கு அனைவரும் பயம் எனவும் அவ்வாறே கோத்தபாய விற்கும் அனைவரும் பயம் எனவும் தெரிவித்துள்ளார் வெள்ளை வான் குற்றச் செயல்களுடன் கோத்தபாய வுக்கு தொடர்பு உண்டு என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா நேரடியாகவே குற்றம் சுமத்தியுள்ளதாக ரஞ்சன் ராமநாயக்க



மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## வோட்சன் காட்டடி தர்பார்

# வான்கடேயில் ஹைதராபாத்துக்கு மரண அடி

# 3வது முறையாக மகுடம் தரித்தது நம்ம சென்னை



ஐ.பி.எல்., 'ரி20' தொடரில் சென்னை அணி கிண்ணம் வென்றது. ஹைதராபாத் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் வோட்சன் சதம் விளாசி அசத்த 8 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

11ஆவது ஐ.பி.எல்., 'ரி20' தொடரின் இறுதிப் போட்டி நேற்று இரவு மும்பை வான்கடே மைதானத்தில் நடந்தது.

இதில் சென்னை, ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் தோனி பந்துவீச்சை தேர்வு செய்தார்.

சென்னை அணியில் ஹர்பஜனுக்குப் பதில் கரண் சர்மா வாய்ப்பு பெற்றார். ஹைதராபாத் அணியில் சகா (காயம்), கலீல் அகமட் நீக்கப்பட்டு கோஸ்வாமி, சந்தீப் சர்மா இடம்பிடித்தனர்.

**யூசுப் விளாசல்**

ஹைதராபாத் அணிக்கு கோஸ்வாமி (5) ஏமாற்றினார். ஜடேஜா பந்தில் தவான (26) ஆட்டமிழந்தார். கரண் சர்மா 'சுழலில்' அணித் தலைவர் வில்லியம்சன் (47) ஆட்டமிழந்தார். சகிப் 23 ஓட்டங்கள் எடுத்தார். யூசுப் பதான் 'மின்னல்' வேகத்தில் ஓட்டம் குவித்தார். இவருக்கு கார்லோஸ் பிராத்வைட் பங்களிப்பு கிடைக்க, ஓட்டஎண்ணிக்கை விரைவாக உயர்ந்தது. தாகூர் பந்தில் பிராத்வைட் (21) சிக்கினார்.

20 ஓவர்களில் ஹைதராபாத் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்கள் எடுத்தது. யூசுப் (45) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் சென்னை அணி சார்பில் அதிகபட்சமாக லுங்கிடி, கரண் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.




**வோட்சன் மிரட்டல்**

எட்டிவிடக்கூடிய இலக்கை விரட்டிய சென்னை அணிக்கு டு பிளசி (10) சொதப்பினார். பின் இணைந்த வோட்சன், ரெய்னா அபாரமாக விளையாடினார். சந்தீப் வீசிய 13ஆவது ஓவரில் மிரட்டிய வோட்சன் 3 சிக்சர், இரண்டு பவுண்டரி விளாசினார். பிராத்வைட் பந்தில் ரெய்னா (32) ஆட்டமிழந்தார். தொடர்ந்து அசத்திய வோட்சன், ஐ.பி.எல்., அரங்கில் 4ஆவது சதத்தை பதிவு செய்தார். ராயுடு ஒரு பவுண்டரி அடிக்க,

சென்னை அணி 18.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

வோட்சன் (117), ராயுடு (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சென்னையின் வோட்சன் தெரிவானார்.

**3** சென்னை அணி மூன்றாவது முறையாக (2010, 11, 18) கிண்ணம் கைப்பற்றியது. இதன்மூலம், ஐ.பி.எல்., தொடரில் அதிக பட்டம் வென்ற அணிகளின் வரிசையில் மும்பையுடன் (3) முதலிடத்தை பகிர்ந்து கொண்டது.

**2** இந்த 'சீசனில்' சென்னையின் வோட்சன் அடித்த இரண்டாவது சதம் இதுவாகும். இதற்கு முன் ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் சதம் விளாசி இருந்தார். ஒட்டுமொத்தமாக, இந்த 'சீசனில்' பதிவான 5ஆவது சதம் இது.

**ரூ. 20 கோடி பரிசு**

ஐ.பி.எல்., இறுதியில் வெற்றி பெற்ற சென்னைக்கு சம்பியன் கிண்ணத்துடன் ரூ. 20 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இரண்டாவது இடம்பிடித்த ஹைதராபாத்துக்கு ரூ. 12.5 கோடி பரிசு அளிக்கப்பட்டது

## பாகிஸ்தான் இளம் வேகப் புயல்கள் அசத்தல்

# லோர்ட்ஸில் நொறுங்கியது இங்கிலாந்து



அமீர், அப்பாஸ், ஹசன் அலி என்ற பாகிஸ்தானின் இளம் வேகப் புயல்களிடம் தமது துடுப்பாட்ட வித்தையை முற்றாக இழந்த இங்கிலாந்து அணி லோர்ட்ஸ் டெஸ்டில் 9 விக்கெட்டுக்களால் மோசமான தோல்வியைச் சந்தித்தது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மோதிய முதல் டெஸ்ட், லண்டனில் உள்ள லோர்ட்ஸில் கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட், ஆடுகளத்தை தவறாக கணித்து முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

ஹசன் அலி, அப்பாஸின் வேகப் புயல்களின் பந்துவீச்சுக்கு முகம்கொடுக்க முடியாத இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 184 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

துடுப்பாட்டத்தில் குக் தனி வீராக சிறப்பாக ஆடி 70 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தார்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 363 ஓட்டங்கள் எடுத்தது.

நேற்று முன்தினம் மூன்றாம் நாள் முடிவில், 2 ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணி, அன்றைய ஆட்டநேர நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களை எடுத்திருந்தது. பட்லர் (66), பெஸ் (55) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில், இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த இங்கிலாந்து அணிக்கு பாகிஸ்தான் வேகங்கள் தொல்லை கொடுத்தன. மொஹமட் அப்பாஸ் பந்தில் பட்லர் (67), ஸ்ருவேர்ட் பிரோட் (0) ஆட்டமிழந்தனர். மொஹமட் அமிர் வேகத்தில் மார்க் வூட் (4), டொமினிக் பெஸ் (57) வெளியேறினர்.

இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி 242 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் மொஹமட் அமிர், மொஹமட் அப்பாஸ் தலா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**எளிய இலக்கு**

இரண்டாவது இன்னிங்சில் 64 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு அசார் அலி (4) ஏமாற்றினார். பின் இணைந்த இமாம் உல் ஹக், ஹரிஸ் சொகைல் ஜோடி இங்கிலாந்து பந்துவீச்சை எளிதாக சமாளித்தது. பெஸ் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹரிஸ் சொகைல் வெற்றியை உறுதி செய்தார்.

இரண்டாவது இன்னிங்சில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டுக்கு 66 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இமாம் (18), சொகைல் (39) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் அண்டர்சன், வீழ்த்தப்பட்ட ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் அப்பாஸ் தெரிவானார்.

இவ் வெற்றியின்மூலம், 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி, 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாவது டெஸ்ட் வரும் ஜூன் முதலாம் திகதி ஹெடிங்லே லீட்ஸில் ஆரம்பமாகிறது.

## 'ஃபிபா' கால்பந்து கவுண்ட்டவுன் 17

# சொந்த மண்ணில் ஜொலித்த மே. ஜேர்மனி

பத்தாவது உலக கிண்ண கால்பந்து தொடர், 1974ல் மேற்கு ஜேர்மனியில் நடந்தது.

மூன்று முறை சம்பியன் பட்டம் வென்ற பிரேசில் அணிக்கு 'ஜூல்ஸ் ரிம்மட்' கிண்ணம் சொந்தமானதால், புதிய கிண்ணத்தை 'ஃபிபா' அறிமுகம் செய்தது. இதை இத்தாலியை சேர்ந்த சிற்பி சில்வியோ கஜானிகா உருவாக்கினார்.

'ஃபிபா' புதிய விதிமுறைபடி, அனைத்து போட்டிகளுமே 'ரவுண்ட் - ரொபின்' முறையில் நடந்தன.

தகுதிச் சுற்றில் மொத்தம் 98 அணிகள் பங்கேற்றன. பிரேசில், நெதர்லாந்து, கிழக்கு ஜேர்மனி, ஆர்ஜென்டினா, மேற்கு ஜேர்மனி, போலந்து, சுவீடன், யுகோஸ்லோவியா அணிகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறின.

**முள்லர் அசத்தல்**

இரண்டாவது சுற்றின் முடிவில் அதிக புள்ளிகளை பெற்ற நெதர்லாந்து, மேற்கு ஜேர்மனி அணிகள் இறுதிக்கு முன்னேறின.



இறுதியில், நெதர்லாந்து முதல் கோலை அடித்தது. பின் சுதாகரித்து ஆடிய மேற்கு ஜேர்மனிக்கு பிரைட்னர், முல்லர் தலா ஒரு கோல் அடிக்க, 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

**பிரேசில் ஏமாற்றம்**

பீலே ஓய்வு பெற்றதால், இம்முறை பிரேசில் அணி திணறியது. போலந்திடம் தோற்று நான்காவது இடம் பெற்றது.

**'பிரீ கிக்'**

உலக கிண்ண கால்பந்து வரலாற்றில், 'ரெட் கார்ட்' காட்டப்பட்டு முதன் முதலாக வெளியேற்றப்பட்ட வீரர் சிலியை சேர்ந்த கார்லஸ் கேஸ்ஜெலி. 1974ல் மேற்கு ஜேர்மனி அணிக்கு எதிரான முதல் சுற்று ஆட்டத்தில் முரட்டுத்தனமாக ஆடியதால் வெளியேற்றப்பட்டார்.

# இலங்கையில் தீவிரமடையும் அனர்த்த நிலைமை! நேரடியாகக் களத்தில் இறங்கினார் ஜனாதிபதி



(கொழும்பு)

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களை பார்ப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண நடவடிக்கைகளை நேரடியாக கண்காணிக்க ஜனாதிபதி நேற்றுமுன்தினம் மாலை சிலாபம் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போதுவெள்ளநிலைமை காரணமாக தாழ் இறங்கிய மெதகொட பாலத்தை ஜனாதிபதி பார்வையிட்டார்.

அனர்த்த நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நாத்தாண்டிய ஸ்ரீ புஷ்பாராம விகாரைக்கு சென்ற ஜனாதிபதி அங்குள்ள மக்களின் குறைநிறைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

மஹாவெவ பிரதேச செயலக அலுவலகத்தில், பிரதேச அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளை சந்தித்த ஜனாதிபதி, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகள் குறித்து கலந்துரையாடினார்.

இதேவேளை கடந்த எட்டு நாட்களுக்கு மேலாக தொடரும் அடைமழை காரணமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 20 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இரண்டு பேர் காணாமல் போயுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)

# வாகனங்களின் விலைகள் இரட்டிப்பாகக்கூடிய அபாயம்

(கொழும்பு)

வாகனங்களுக்கான புதிய வரி முறையினால், வாகனங்களின் விலைகள் இரட்டிப்பாகலாமென வாகன வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் ஜிஹான் பிலபிட்டிய எச்சரித்துள்ளார்.

கடந்த காலங்களில், வாகனங்களின் இயந்திரம் கொள் வளவை பொருத்தே அதற்கான வரி அறவிடப்பட்டது.

ஆனால் தற்போது அதில் மாற்றங்கள் ஏற்பட்டு படிப்படியாக வரி அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாகன விலைகளின் அடிப்படையில் வாகனத்துக்கு வரி கள் அறவிடப்பட வேண்டும் எனவும் ஜப்பான், கொரியா மற்றும் இந்திய வாகனங் களின் விலைகள் அதிகரித்து வருகின்ற நிலையில், இலங்கை ரூபாவின் பெறுமதி குறைந்து கொண்டு வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# பொருட்களின் விலையேற்றத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் கண்டனப் போராட்டம்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் விலை உயர்வு, வரிச்சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம் நாளை 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை. போயா தினத்தன்று மு.ப. 10 மணிக்கு யாழ். பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

இக் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்குமுகமாக அக்கட்சியின் வடபிராந்திய செயலாளர் கா. கதிர்காமநாதன் விடுத்துள்ள அறிக்கையில் இன்றைய மைத்திரி-ரணில் தலைமையிலான கூட்டாட்சியானது, ராஜபக்ஷ சகோதரர்களின் பாசிச சர்வாதிகார ஆட்சியை 2015இல் அகற்றி, நல்லாட்சி என்ற நாமத்துடன் பதவிக்கு வந்தது. ஜனநாயகத்தை மீட்போம், அபிவிருத் திகளை முன்னெடுப்போம், பத்து இலட்சம் பேருக்கு வேலை வழங்குவோம், மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்போம், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவோம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு கொண்டுவருவோம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம், ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்தி, அவற்றில் ஈடுபட்டோருக்குத் தராதரம் பார்க்காது தண்டனை வழங்குவோம் என்றவாறான வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. இக்கூட்டாட்சிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையகத் தமிழ்க் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் ஆதரவு வழங்கி தமக்குரிய பதவிகளையும் வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொண்டன. ஆனால், இன்றைய நிலைதான் என்ன? என்பதே சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

மக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலைகள் நாளாந்தம் உயர்த்தப்பட்டு வந்து இன்று உச்சமாகி நிற்கின்றன. அரிசி, சீனி, தேங்காய், மல்லி, மிளகாய், பருப்பு வகை உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலைகள் நூறு, இருநூறு என ஏறிக்கொண்டே செல்கின்றன. அன்றாடப் பாவனைப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் கூடவே, எரிவாயு 12.5 கி.கி 1,540 ரூபாவில் இருந்து 1,785 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 20 ரூபாவாலும், டீசல் 9 ரூபாவாலும், மண்ணெண்ணெய் 57 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக பேருந்துக் கட்டணம் 12.5 சதவீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் ஆட்டோக்கள் உள்ளடங்கலாக ஏனைய வாகனங்களுடான போக்கு வரத்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் நாட்டின் ஏகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள் பெரும் வாழ்க்கைச் செலவுச் சுமையால் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொள்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

7 ஆம் ஆண்டு நினைவினிலே

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1983 - 06 - 27 | 2011 - 05 - 16 |



அமரர்.

இரத்தினம் இதயராசா

திதி.பூர்வபக்க சதுர்த்தசி

மெல்ல நகரும் நம் வாழ்வில்
களிமிலா உன் வாழ்வு ஓர் அத்தியாயம்
துள்ளித் திரிந்த "ரோபோ" தம்பி நீ!-கால
வெள்ளம் வந்து உனை அள்ளிச் சென்றதோ!
உள்ளிருக்கும் என்றும் உன் நினைவலைகள்...

மானா வளவு
கரணவாய்,
கரவெட்டி.

(சி-2731)

குடும்பத்தினர்


## இராசி பலன்

**மீனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் கூடும்.

**மேடம்:** விருப்பங்கள் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், சேமிப்பை ஈடுகட்ட முற்படுவீர்கள்.

**மிதுனம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திக்கும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** வீண் பழிகள் அகலும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், தந்தை வழி உறவில் அனுகூலமுண்டு, பயணங்கள் கைகூடும்.

**கடகம்:** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், பிறர் உதவியுண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், கௌரவமான நாள்.

**சிம்மம்:** நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | சூரி. புத | சுக் |
| | இராசி பலன் | | ராகு |
| கேது. செவ் | | | |
| சனி | | சந். குரு | |

சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி
மாலை 5.45 மணிக்கு
விருச்-சந்

**28.05.2018**
வைகாசி 14, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 7.26 மணிவரை
விசாகம் முற்பகல் 11.48 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
அக்கினி நாள் முடிவு, வைகாசி
விசாகம்

வளவன்

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், பாக்கிகள் வசூலாகலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பயணத்தால் பலன் கிடைக்கும், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

# உரிமைகளைப் பெற போராடிய இனத்திற்காக ஆகுதியான உயிர்களை நினைவு கூர்ந்து மனமுருகி மேற்கொண்டதே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## சரவணபவன் எம்.பி.சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி என்பது அர்ப்பணிப்புடன் தங்களின் உரிமைகளைப்பெறப்போராடிய ஓர்இனம் அந்த புனித வேள்வியில் ஆகுதியான உயிர்களை நினைவு கூர்ந்து மன முருகி மேற்கொள்ளும் ஒரு புனிதமான நினைவேந்தல் ஆகும்.

இது பற்றி கீழ்த்தரமான முறையிலோ கண்டனம் செய்தவர்கள் தவறான அர்த்தங்களைக் கொடுப்பவர்கள் என அனைவருமே மனித குலவிரோதிகள் என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்ளவிரும்புகின்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு வடக்கில் இடம்பெற்றதையடுத்து தெற்கில் எழுந்துள்ள எதிர்ப்புக் குரல்களுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறுதிப் போரில் இரக்கமற்ற முறையில் இலங்கையின் ஆயுதப் படையினரால் கொல்லப்பட்ட எமது உறவுகளை நினைவு கூர்ந்து மே 18 ஆம் திகதியன்று பல்லாயிரக்கணக்கான எம்து மக்கள் முள்ளிவாய்க்கால் மண்ணில் கூடி அஞ்சலி நிகழ்வை மேற்கொண்டனர். அங்கு அரசியல்வாதிகளின் ஆவேசமான உரைகள் நடத்தப்படவில்லை. பழிவாங்கப் போவதாகச் சவால் விடப்படவில்லை. அநீதிக்கெதிராக மக்களை ஆயுதம் ஏந்தும்படி அறைகூவல் விடுக்கப்படவில்லை.

ஆனால் அந்த நினைவேந்தல் நிகழ்வு தென்னிலங்கையில் ஏற்படுத்திய எதிரொலி இனவெறியில் தோய்த்தெடுக்கப்பட்டு எடுத்தாளப்பட்டு வருகிறது. இனவாதத்தை மூலதனமாகக்கொண்டு மீண்டும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றக் கனவு காணும் மகிந்த ராஜபக்ஷ அணியினர் மீண்டும் போர் ஆரம்பிக்கப்போகிறதெனவும், நாடு பிளவுபடப் போகிறதெனவும் ஓங்கிய குரலில் ஒப்பாரி வைக்க ஆரம்பித்துவிட்டனர். நினைவேந்தல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த வட மாகாண சபையைக் கலைக்க வேண்டுமெனவும், வட மாகாண முதலமைச்சரைக் கைது செய்ய வேண்டுமெனவும் அரசாங்கத்துக்கு அழுத்தம்கொடுக்கின்றனர். சட்டம் ஒழுங்கு அமைச்சரோ மாகாண சபைக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்க விடும்படி கேட்டுக் கொண்டமைக்காக மாகாண சபையின் கல்வி அமைச்சர் மேல்நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறியுள்ளார்.

இதன் மூலம், அவர்கள் தமிழ் மக்களுக்குச் சொல்லும் செய்தி, தமிழ் மக்கள் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரவோ, அஞ்சலி செலுத்தவோ உரிமையில்லை என்பதாகும்.

உயிரிழந்தவர்களுக்கான நினைவேந்தல் நாட்டைப் பிளவுபடுத்திவிடுமெனவும், மீண்டும் போரை ஆரம்பித்துவிடுமெனவும் சிங்கள மக்களை அச்சமூட்டி அரசியல் செய்யுமளவுக்கு கீழ்த்தரமான வழிமுறைகளைக் கையாண்டு வருகிறார்.

அந்த இன அழிப்புப்போரின் வீரநாயகனாக வலம் வந்த முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த நினைவேந்தல் நிகழ்வை நாட்டையே அழிவை நோக்கிக் கொண்டு போகுமளவுக்கு அபாயகரமானதெனச் சித்திரித்துள்ளார். பல்வேறு ஊழல், மோசடி, கொலை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தன்னைக் கைது செய்யாமலிருக்க நீதிமன்ற அனுமதி பெற்று உலா வரும் இவர், தனது உண்மை உருவத்தை மறைக்க கீழ்த்தரமான இனவாதத்தைக் கையிலெடுப்பதும், படையினரைக் காக்கும் ஆபத்பாந்தவனாகக் காட்டிக் கொள்வதும் ஆச்சரியப்படக்கூடிய விடயங்களல்ல.

விடுதலைப் புலிகள் விடுவிக்கப்படுகின்றனர் எனவும், உயிர் நீத்த புலிகளை நினைவு கூரவும், தூபி அமைக்கவும் அனுமதியளிக்கப்படுகிறதெனவும் படையினர் கைது செய்யப்படுகின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

போரில் கொல்லப்பட்ட பொது மக்கள் கூட அவர்களுக்குப் புலியாகத் தெரிகிறது. புலிகளோ அல்லது பொது மக்களோ அவர்கள் எங்கள் உறவுகள், எங்கள் இரத்தங்கள். அவர்களை நினைவு கூர எங்களுக்கு உரிமையில்லையா? அழுவதற்குக் கூட உரிமையற்ற அடிமைகளா நாங்கள்? புலிகளெல்லாம் விடுவிக்கப்படுகின்றனரென்றால் அரசியல் கைதிகளாக விசாரணையின்றி, விடுதலையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் யார்? படையினரால் கைது செய்யப்பட்டும், படையினரிடமும் ஒப்படைக்கப்பட்டும், காணாமல் ஆக்கச் செய்யப்பட்டவர்கள் எங்கே? வெள்ளை வான்களில் கடத்தப்பட்டவர்கள், திருமலை இரகசிய முகாம்களில் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டவர்கள் எங்கே? எப்போது விடுவிக்கப்பட்டனர்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் அதிகாரத்தில் இருந்த போது நடைபெற்ற இத்தகைய மனிதகுல விரோத நடவடிக்கைகளுக்கு அவரால் விளக்கமளிக்க முடியுமா?

எனவே போரில் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவேந்தல் என்பது வெள்ளை வானில் கடத்திச் செல்வது, காணாமல் போகச் செய்வது, கடத்திக்கொண்டுபோய்கொன்று புதைப்பது, இனப் படுகொலைகளை நியாயப்படுத்துவது என அவர் நினைக்கிறாரா?

முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி என்பது அர்ப்பணிப்புடன் தங்களின் உரிமைகளைப் பெற போராடிய ஓர் இனம் அந்த புனித வேள்வியில் ஆகுதியான உயிர் களை நினைவு கூர்ந்து மனமுருகி மேற்கொள்ளும் ஒரு புனித மான நினைவேந்தல் ஆகும். இது பற்றி கீழ்த் தரமான முறையிலோ கண்டனம் செய்தவர்கள் தவறான அர்த்தங்களைக் கொடுப்பவர்கள் என அனைவருமே மனித குல விரோதிகள் என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். (இ)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வடக்கு மருதடிவீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்றுதிங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெற்று எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ)

## யாழில் தமிழ் இராணுவம் தளபதி தர்ஷன அழைப்பு

இராணுவத்தில்இணைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளையோர்கள் ஆர்வத்துடன் முன்வர வேண்டும் என்று இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி அழைப்பு விடுத்துள்ளார்.

இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தலைமையகத்தால் இராணுவம் சாராத வேலைகளுக்கு இளையோர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர். இவ்வேலைகளுக்கு விண்ணப்பித்த இளையோர்களை நெல்லியடியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தித்து பேசியபோதே இவர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

இராணுவத்தில் உள்ள இராணுவம் சாராத வேலைகளுக்கு உடனடியாக 50 இளையோர்களை ஆட்சேர்ப்பு செய்கின்றோம். இவர்களுக்கு வருகின்ற மூன்று வார காலங்களுக்கு இடையில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கின்றோம். இருப்பினும் 100 பேருக்கு நியமனம் வழங்குவது குறித்து நான் சாதகமாக பரிசீலிக்கின்றேன். இராணுவத்தில் உள்ள இராணுவம் சாராத ஊழியர்களும் அனைத்து வகையிலும் இராணுவ வீரர்களை போலவே கௌரவமாக எம்மால் நடத்தப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் கணிசமான தமிழ் இளையோர்கள் இராணுவத்தில் உள்ள இராணுவம் சாராத வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களிடம் நேரடியாக வினவி இவர்களை நாம் நடத்துகின்ற விதம் குறித்து நீங்களாகவே அறிந்து கொள்ளலாம்.

அதே நேரத்தில் இராணுவத்தில் கணிசமான அளவில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ் இளையோர்கள் இணைதல் வேண்டும். இது சிங்கள இராணுவம் அல்ல. எல்லா இனத்தவர்களுக்குமான இராணுவம் ஆகும். 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட இளையோர்கள் இராணுவத்தில் இணைய முடியும்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளையோர்கள் இராணுவத்தில் இணைகின்ற பட்சத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே பணியாற்ற முடியும். தினமும் கடமையை நிறைவு செய்து வீட்டுக்கு சென்று வர முடியும். யாழ்ப்பாணத்தில் தமிழ் இளையோர்கள் கணிசமான அளவில் இராணுவத்தில் இணைவதன் மூலம் தமிழ் இராணுவத்தை இங்கு உருவாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நடைபாதை வியாபாரத்திற்குத்தடை வயிற்றில் அடிப்பது போன்றதாகும்

### நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

(நல்லூர்)

நடைபாதை வியாபாரம் என்பது போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதோடும், வீதி விபத்துக்களுக்கும், வாகன நெரிசல்களுக்கும் வழிவகை செய்கிறது என்பதை ஏற்றுக்கொண்டாலும் நடைபாதை வியாபாரத்தை ஒட்டுமொத்தமாக தடை செய்வதென்பது எமது உள்ளூர் வாசிகளின் வயிற்றில் அடிப்பது போலாகும் என நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன் சுட்டிக்காட்டினார்.

நல்லூர் பிரதேச சபையின் இரண்டாவது அமர்வில் நடைபாதை வியாபாரத் தடை பிரேரணை மீதான விவாதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய சூழ்நிலைகளில் எமது பிரதேசங்களில் வேறு மாவட்டத்தை சேர்ந்தவர்களும், வேற்றின சகோதர மக்களும் இங்கு நடைபாதை வியாபரம் செய்து பணம் பார்க்கிறார்கள். ஆனால் எமது சபைக்குட்பட்ட பிரதே சத்தில் வரி செலுத்தி வாழும் குடிமகன்களின் நடை பாதை யோர வியாபாரத்தை எமது அலுவலர்கள், அதிகாரிகள் உடனடியாக அகற்ற பணிக்கிறார்கள்.

ஆனால் வெளியூர் வியாபாரிகளை அவ்வளவு அதட்டி உடனடியாக அவர்களால் அகற்ற முடியாததை எனக்கு கிடைத்த முறைப்பாடுகளில் இருந்து அறியக்கூடியதாகவும் கண்கூடாகக் காணக் கூடியதாகவும் இருந்தது.


நடைபாதை வியாபாரம் என்பது போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதோடும், வீதி விபத்துக்களுக்கும், வாகன நெரிசல்களுக்கும் வழிவகை செய்கிறது என்பதை ஏற்றுக்கொண்டாலும் நடைபாதை வியாபாரத்தை முழுமையாக தடைசெய்வதனால் பணம் இல்லாத , அதிக முதலீடு இல்லாத சிறிய எம் பிரதேச உற்பதியளர்களின் முயற்சியாண்மை பாதிக்கப்படும்,

சில தினங்களுக்கு முன்பு வீதியோரத்தில் மாற்றுத் திறனாளிகளினால் உற்ப த்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருளை அவர்களே நடைபாதையில் விற்பனை செய்வதனை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறான சிறிய சிறிய உற்பத்திகள்ளை மேற்கொண்டு சந்தைப்படுத்தும்(ஓலை பாய், கத்திகள், கருப்பட்டி, நீத்துபெட்டி, கடதாசி பாக், வேறு கிராமிய உற்பத்திகள்) எமது உற்பத்தியாளர்கள் இத்தடையினால் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வாறான தடைக்காரணிகளால் அவர்களின் சுயமுயற்சியாண்மை பாதிக்கப்படுவதோடு எமது நிலத்துக்கேயுரித்தான சில பாரம்பரிய உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதனை மறைமுகமாக தடுப்பதாக அல்லது அவர்களை சிரமத்தின் மத்தியில் அம் முயற்சியாண்மையை கைவிட வழிவகுக்க ஏதுவாக அமைந்து விடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நீண்டகாலமாக புனரமைக்கப்படாத வரணி மாசேரி- முள்ளாவெளி வீதி



(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட வரணி மாசேரியூடாகச் சென்று பருத்தித்துறை கொடிகாமம் வீதியுடன் இணைகின்ற முள்ளாவெளி வீதியானது 40 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

5 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இவ்வீதியானது கிராம அபிவிருத்திக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்படுகின்ற அரைமில்லியன் ரூபாவில் அரை கிலோ மீற்றர் தூரம் கடந்த வருடம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மிகுதி தூரம் அப்படியே காணப்படுகின்றது. மக்கள் தமது தேவைகளுக்காக வடமராட்சி-தென்மராட்சி பிரதேசங்களுக்கு செல்வதற்காக இவ்வீதியையே அதிகம் பயன்படுத்துகின்றனர். அதுமட்டுமன்றி பாடசாலை, பனை-தென்னைவள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம், கோவில், கடைகள் போன்றனவும் இவ்வீதியில் அமைந்துள்ளன. மழை காலங்களில் நீர் தேங்கி நிற்பதோடு சேறும் சகதியுமாக இவ்வீதி காணப்படுகின்றது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். அதுமட்டுமன்றி மாற்றுப்பாதையின் ஊடாக நீண்ட தூரம் சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர். இவ் வீதியை புனரமைத்துத் தருமாறு பல முறை அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். எனவே மழைகாலம் தொடங்குவதற்கு முன்பாக இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் அரசியல்வாதிகள் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-103)



யாழ்ப்பாணம் - இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 15 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.
எதிர்வரும் 09 ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும் 10 ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளன.
(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் விபத்துக்குள்ளான பாரிய விமானம்!

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஶ்ரீலங்கன் விமானத்துடன் நீர் கொண்டு செல்லும் பவுசர் ஒன்று மோதியுள்ளது.

ஶ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான A-320 எயார் பஸ் ரகத்திற்கு சொந்தமான விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விமானம் இந்தியாவில் இருந்து பயண நடவடிக்கைகளை நிறைவு செய்துவிட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

பின்னர் இந்த விமானத்திற்கு நீர் கொண்டு சென்ற பவுசர் ஒன்று அந்த விமானத்தின் பின் பக்கத்தில் மோதியுள்ளது. இதனால் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக விமான நிலைய பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த நீர் பவுசரை செலுத்திய ஶ்ரீலங்கன் விமான சேவை சாரதி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். சாரதி தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-7)

## மூவரைக் காப்பாற்ற முற்பட்டவேளை

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்

(கொழும்பு)

மாதம்பே, கல்முருவ பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கிய மூவரை காப்பாற்ற முற்பட்டு வெள்ள நீரில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

29 வயதுடைய மேற்படி பொலிஸ் உத்தியோகத்தரான (88587) தசநாயக்க பதிருன்னகலாகே டிலான் சம்பத் என்பவர் மாதம்பே பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றுபவர் எனத் தெரிய வந்துள்ளது. (இ-7)

அகவை 57 காணும்
ஆறு.திருமுருகனுக்கு
அகமகிழ் வாழ்த்துக்கள்

வாசகர் வாசகத்திற்கு வாகாய் அரண்மனை வடித்து
வண்ணமுற அதன் வரிகளினைப் பொறித்து
ஏதிலிகளுக்கு எல்லாம் அளித்து முதியோர்க்கு என்றும்
கதியாம் சாலைகள் அமைத்து, விஷேட
தேவையுடையோரை விஷேடமாய்க் கவனிக்க
வழிவகுத்து, நன்றியுள்ள வாயில்லா சீவனுக்கும்
வாழ்வளித்து திருமூலர் சொன்னது போல்
சிவபூமியாக்கிவரும் சிவபூமி அமைப்பாளர்,
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்
தலைவர் அதி வணக்கத்திற்குரிய
ஆறு.திருமுருகன் ஐயா அவர்களை பல்லாண்டு
பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு வாழ
வாழ்த்துகின்றோம், வணங்குகின்றோம்.
குறிஞ்சாக் குளி முத்துமாரி அம்பாள் பெருவருளும்
தில்லைக் கூத்தன் திருவருளும்
தெல்லிப்பழையாள் தருமருளும் இவர் வாழ்வு சிறக்க
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.



அடியார்க்கு அமுதூட்டும்
அண்ணலார்
க.கு.சிவபாலன்
காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயம்

# பல்கலை. சட்டமூலத்தை தோற்கடிக்க நடவடிக்கை



(கொழும்பு)

சைட்டம் மாணவர்களுக்கு நியாயம் வழங்குவதாக தெரிவித்து, அரசாங்கம் கொண்டுவரவுள்ள கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை தோற்கடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றிய உறுப்பினர்களுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில், அந்த கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் நலின் டி ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

இந் நிலையில் குறித்த சட்டமூலத்தை தோற்கடிக்க, பல அரசியல் கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்ளப் போவதாக, அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் இணைப்பாளர் லஹிரு வீரசேகர ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

01. 1. சிலந்தியை
2. எட்டு
3. ஆம்
4. கால், கண்
5. ஆச்சரியம்
6. நாம்
7. செயற்கை

02. 1. வெள்ளிக்கிழமை
2. மு.ப.9.00 மணிக்கு
3. விபுலானந்தர் மண்டபத்தில்

03. 1. கைப்புண்ணைப் பார்ப்பதற்கு கண்ணாடி வேண்டுமா?
2. வழிப்போக்கன் காட்டு வழியாக கால் வலிக்க நடந்தான்
3. தெரு ஓரமாக வியாபாரி செருப்பு விற்பனை செய்தான்

04. 1. இகழ்ச்சி
2. இளநீர்
3. தலையணை

05. 1. துணிவு
2. வெறுப்பு
3. வன்சொல்
4. இறக்குமதி

06. 1. நூற்றாண்டு
2. பாற்செம்பு

07. 1. வான்+ ஒலி
2. வடக்கு+ மாகாணம்

08. 1. ஒளி
2. அழி
3. பாணம்
4. ஊரி

09. 1. ஆகா! எவ்வளவு பெரிய பூ
2. பெரியவரே உங்களுக்கு என்ன வேண்டும்?
3. கடற்கரையில் சிறிய கற்கள், ஊரிகள், சிப்பிகள் ஆகியவற்றைச் சேகரித்தேன்

10. 1. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
2. இலங்கை மத்திய வங்கி
3. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

11. 1. உதவி செய்தல்
2. பூரிப்படைதல்
3. முன்னேற்றம்

12. 1. ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலைக்குப் போனார்கள்
2. சிற்பம், ஓவியம், கட்டிட அமைப்பு என்பன ஒரு கலையாகும்

13. 1. பொருத்தமான வசனம் அமைக்க

14. 1. கொக்கு
2. தின்றது
3. வெள்ளை
4. கொத்தி
5. சிறிய

15. 1. அத்திபூத்தாற்போல
2. எலும்பும் தோலும்
3. மெல்ல மெல்ல
4. கடகட

16. 1. உறுமும், ஊளையிட்டது
2. கன்று
3. கத்தும், குரைத்தது
4. குட்டி, குஞ்சை

17. 1) 2 2) 2

18. 1. ஊதாரி
2. நாத்திகன்
3. பொன்விழா

19. பொருத்தமான வாக்கியங்கள் எழுதுக.



ஐக்கிய இராச்சியத்தின் நிதி அனுசரணையுடன் முழங்காவில் பகுதியில் உள்ள அறநெறி பாடசாலை மண்டபத்தில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு துவிச்சகர வண்டி வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தார். சிறப்பு விருந்தினராக பூநகரி பிரதேச இந்து கலாசார உத்தியோகத்தர் கிரிசா பத்மராசாவும் கலந்து கொண்டிருந்தார். (படங்கள்: பூநகரிச் செய்தியாளர்)

# தமிழர்களின் நிலப்பரப்பை அரசு கபளீகரம் செய்வதற்கு முத்தாய்ப்பு நடவடிக்கை

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு



(பூநகரி)

தமிழர்களின் பாரம்பரிய பூமிகளையும் வாழ்விடங்களையும் வளம் நிறைந்த நிலப்பரப்புக்களையும் கபளீகரம் செய்வதற்கு கழுகுகள் எம்மை சுற்றி வட்ட மடித்துக் கொண்டிருக்கின்றன. வன்னி பிராந்தியத்தில் "தமிழர்களின் பெரிய நிலப்பரப்பை கொண்ட தமிழர்களின் குடியிருப்புக்கள் கேள்விக்குறியாக்கப்படுவதற்கான முத்தாய்ப்பு நடவடிக்கைகள் பாதுகாப்பு எனும் தலைப்பின் கீழ் இரகசியமாகவும் தூரநோக்குடனும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதை எந்தளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்பது கேள்விக்குறியாகவுள்ளது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி குமுழமுனைச் சந்தி பல்லவராயன்கட்டில் அமைந்துள்ள அறம் செய் அறக்கட்டளை நிலைய அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் வவுனியா. மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில்,

நாட்டில் குறிப்பாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் நடைபெற்ற கடுமையான யுத்தத்தின் விளைவாக இப் பகுதிகளில் வாழ்ந்து வந்த பூர்வீகக் குடிகளின் அமைதி யான வாழ்க்கை முறைகள் முழுமையாக சீர்குலைக்கப்பட்டு தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களின் ஜீவனோபாய வழிமுறைகள் அனைத்தும் அழிக்கப்பட்டு வீடு வாசல்கள் தரைமட்டமாக்கப்பட்ட நிலையில் குடிசை வீடுகளில் தொழில் முயற்சிகளின்றி, உறவுகளை இழந்து அல்லலுற்றுக் கொண்டிருக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஓரளவிற்காவது உயர்த்துவதற்காக நாம் அல்லும் பகலும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

மிகப் பெரிய நிலப்பரப்பைக் கொண்ட வன்னிப் பிராந்தியத்தில் தமிழர்களின் குடியிருப்புக்கள் கேள்விக்குறியாக் கப்படுவதற்கான முத்தாய்ப்பு நடவடிக்கைகள், பாதுகாப்பு எனும் தலைப்பின் கீழ் இரகசியமாகவும், தூரநோக்குடனும் முன்னெடுக்கப்பட்டு வருவது எம்மால் உணரக்கூடியதாக உள்ளது.

ஆனால் அதனை எந்த அளவுக்கு எம்மால் கட்டுப்படுத்த முடியும் என்பது கேள்விக் குறியாக உள்ளது.

இந்த இரகசிய நிகழ்வுகளை கட்டுப்படுத்துவதற்கும் தடுத்து நிறுத்துவதற்கும் நாம் எம்மால் முடிந்த வரையில அல்லும் பகலும் முயன்று வருகின்றோம். எமது முயற்சிகளுக்கு அவ்வப்பகுதிகளில் உள்ள மக்களின் உதவி ஒத்தாசைகள் அவசியம் தேவைப்படுகின்றன.

தமிழர்களின் பாரம்பரிய நினைவுச் சின்னங்களையும் கல்வெட்டுக்களையும் அகழ்ந்து விட்டு பேரினவாத மக்களின் கலாசாரச்சின்னங்களை வேண்டுமென்றே புதைத்துவைப்பதன் மூலம் சில காலங்களின் பின்பு இது தமிழர்களின் வாழ்விடங்கள் அல்ல, பெரும்பான்மை மக்கள் வாழ்ந்த பிரதேசம் என்று கூறும் இவ்வாறான கபட நாடகங்கள் இரவோடு இரவாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. கோயில் விக்கிரகங்கள் களவாடப்படுகின்றன.

எனவே அன்பார்ந்த மக்களே! நீங்கள் அரசாங்கத்தின் ஒவ்வொரு அசைவுகளையும் நடவடிக்கைகளையும் கவனமாக உற்று நோக்க படவேண்டும். (2-84)




# வவுனியா வர்த்தக சங்கத்தினரை சந்தித்தார் வர்த்தக கைத்தொழில் அமைச்சர்



(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண சபை மகளிர் மற்றும் சிறுவர் விவகார வர்த்தகக் கைத்தொழில் அமைச்சர் அனந்தி சசிதரன் வவுனியா வர்த்தக சங்கத்தினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் தி.க.இராஜலிங்கம் தலைமையில் வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வர்த்தக சங்கக் கட்டடத்தில் இக்கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன் போது வர்த்தக சங்கத்தினால் வவுனியா பழைய பேருந்து நிலையத்தை மூடியதன் காரணமாக வவுனியா வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சருக்கு தெரிவிக்கப் பட்டது. அத்துடன் வவுனியா வர்த்தக சங்கம் பொது அமைப்புக்கள், அரச,தனியார் பேருந்து சங்கங்கள்என்பன இணைந்து வடக்கு மாகாண முதலமைச்சருடன் கலந்துரையாடி தீர்வைப் பெறுவதற்கான ஓர் ஒழுங்கை செய்து தருமாறும் கேட்டிருந்தனர்.

அத்துடன் வவுனியாவில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் வவுனியா நகரில் உள்ளூர் விளை பொருள் உற்பத்தியாளர் சங்கத்திற்கு பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகள் ஒதுக்கப்பட வேண்டும். ஏனைய கடைகளை வவுனியாவில் வாழ்கின்ற மூவின மக்களின் சனத்தொகையின் படி விகிதாசார அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையத்தின் அருகில் அமையவுள்ள கடைத்தொகுதியின் அருகாமையில் 80 பேஜ் காணி வர்த்தக சங்கத்திற்கு ஒதுக்கித்தருமாறும் வர்த்தக சங்கத்தினரால் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது.

வர்த்தக சங்கத்தின்வேண்டுகோளிற்கு இணங்க முதலமைச்சருடன் கலந்துரையாடி தீர்வினை பெற்றுத்தருவதாக வடக்குமாகாண சபை மகளிர் மற்றும் சிறுவர் விவகார வர்த்தக கைத்தொழில் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார். இதன் போது வர்த்தக சங்கத்தினால் அமைச்சருக்கு நினைவுச்சின்னமும் மகஜரும் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் தி.க.இராஜலிங்கம், செயலாளர் கோ.ஶ்ரீஸ்கந்தராஜா மற்றும் வர்த்தக சங்க நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

## தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த அவர், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையால் தினந்தோறும் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு காயம் மற்றும் உயிரிழப்புக்கள் இடம்பெறுகின்றது.

எனவே இவ்விடயம்தொடர்பில் கால்நடை வளர்ப்போர் சமூக பொறுப்புடன்நடந்துகொள்ளவேண்டும்.தவறின் பிரதேசசபை சட்ட விதிகளுக்கமைய கட்டாக்காலிகளாக பிரதான வீதிகள்,நகர்ப் பகுதிகள் மற்றும் ஏனைய வீதிகளில் நடமாடுகின்ற கால்நடைகளைக் கட்டுப்படுத்த சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்என அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# வேணாவில் ஆரம்ப சுகாதார நிலையத்தை இவ்வாண்டில் புனரமைக்க நடவடிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின்புதுக்குடியிருப்புவேணாவில் ஆரம்ப சுகாதார நிலையத்தை இவ்வாண்டில் புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வேணாவில் கிராமத்தில் 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்தப் பிரதேசத்தில் யுத்த காலத்தில் சேதமடைந்து காணப்படும் ஆரம்ப சுகாதார நிலையத்தை புனரமைத்துத்தருமாறு பல தடவைகள கோரிக்கை விடுத்தபோதும் அதனைப் புனரமைத்துத்தரவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இங்குள்ள கர்ப்பவதிகள்,குழந்தைகள் சிகிச்சைகளைப் பெறுவதற்கு வேறு பிரதேசங்களுக்குச்செல்ல வேண்டியிருப்பதாகவும் வேணாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் வெள்ளைச்சாமி கணேஸ் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டில் இதனைப் புனரமைப்பதற்கு பிரதேச செயலகத்தினால் எட்டு மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்ற நிலையில், அதனைப் புனரமைப்பதா? அல்லது புதிதாக நிர்மாணிப்பதா? என்பதில் ஏற்பட்ட இழுபறி நிலையினால் குறித்த நிதி வேறு அபிவிருத்தி வேலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த நிதி திரும்பிச் செல்லவில்லை எனவும் இந்தாண்டில் அதற்கான நிதியைப்பெற்று குறித்த ஆரம்ப சுகாதார நிலையத்தினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேற்படி பிராந்திய சேவைகள் பணிமனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# மீள்குடியேற்ற அமைச்சின் 50 மில்லியன் ரூபாவில்

## 565 கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள்



(பனிக்கன்குளம்)

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களுக்கு வாழ்வாதார பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களில் 565 பயனாளிகளுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் 50 மில்லியன் ரூபா பெறுமதியான உதவித்திட்டங்களே அன்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்பிரகாரம் கரைதுற்றப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 335 பயனாளிகளுக்கும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 60 பயனாளிகளுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 30 பயனாளிகளுக்கும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 20 பயனாளிகளுக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 40 பயனாளிகளுக்கும் வெலிஓயா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 80 பயனாளிகளுக்குமாக மொத்தமாக 565 பயனாளிகளுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் 50 மில்லியன் ரூபா பெறுமதியான உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதில் 41 பயனாளிகளுக்கு வள்ளங்களும் ஏனையவர்களுக்கு தலா 5 வலைத் தொகுதிகள் வீதமும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ,பாராளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவசக்தி ஆனந்தன்,வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன்,வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், ஆ புவனேஸ்வரன் மற்றும் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு உதவித்திட்டங்களை வழங்கி வைத்தனர். (2-281)

# நுளம்பு வலைகள் வழங்கல்





(பனிக்கன்குளம்)

இளவாலை வருந்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் "உயர்த்தும் கரங்கள்" எனும் செயற்றிட்டத்தின் கீழ் இளவாலை நாதோலை பகுதியில் வசித்துவரும் 5 வயதிற்கும் குறைவான பிள்ளைகளைக் கொண்ட, 15 குடும்பங்களுக்கு, தற்போது ஏற்பட்ட மழையினால் நுளம்பு பெருகும் ஆபத்தை அடுத்து டெங்கு/மலேரியா நோய்கள் வரமுன் காக்கும் திட்டமாக நுளம்புவலைகள் அண்மையில் வழங்கப்பட்டன.(2-281)

# தேசிய சட்ட வாரத்தை முன்னிட்டு

# மன்னாரில் இலவச சட்ட ஆலோசனை முகாம் சட்டத்தரணிகளால் முன்னெடுப்பு





(பனிக்கன்குளம்)

தேசிய சட்ட வாரத்தை முன்னிட்டு மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகளினால் இலவச சட்ட ஆலோசனை முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு இடம் பெற்றது.

அதனைத்தொடர்நது மக்களுக்கு சட்ட ஆலோசனை முகாம் நடைபெற்றது.

குறித்த சட்ட ஆலோசனை முகாமில் காணிப்பிரச்சினைகள், பணக்கொடுக்கல், வாங்கல் தொடர்பான பிரச்சினைகள், குடும்ப வன்முறைகள் தொடர்பான பிரச்சினைகள், காணாமல் ஆக்கப்பட்டோர், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தொடர்பான விளக்கங்கள், பிறப்பு, இறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் தொடர்பான சட்ட ஆவணங்கள்,விபத்து இழப்பீடு தொடர்பானவை, குற்றவியல் சட்டங்கள் போன்றவை தொடர்பாக மக்களுக்கு தேவைக்கு ஏற்ப சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இடம் பெற்ற குறித்த சட்ட ஆலோசனை முகாமில் மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள் கலந்து கொண்டு மக்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கி வைத்தனர்.

இதில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)




# பூநகரி பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்திட்ட அபிவிருத்தி வேலைகள் விரைவில் பூர்த்தியாகும்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப்பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகத்திட்ட அபிவிருத்தி வேலைகள் பூர்த்தியடைந்து வருவதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் மாவட்ட அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரிப்பிரதேசத்தின் கொல்லக்குறிச்சி, செட்டிய குறிச்சி, ஞானிமடம், மட்டுவில் நாடு கிழக்கு, மட்டுவில் நாடு மேற்கு, பள்ளிக்குடா ஆகிய பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகத்திட்டத்தை மேற்கொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது, பரந்தன் பிரதேசத்திலிருந்து குழாய் மூலம் வாடியடியில் அமைக்கப்படுகின்ற பிரதான நீர்த்தாங்கிக்கு நீரைக்கொண்டு செல்வதற்கான குழாய்கள் பொருத்தும் பணிகள் 90 வீதம் பூர்த்தியடைந்திருப்பதாகவும் வாடியடியில் அமைக்கப்படுகின்ற நீரத்தாங்கியின் கட்டுமானப் பணிகள் 80 வீதத்திற்கு மேல் பூர்த்தியடைந்துள்ளதாகவும் இதேவேளை குழாய் மூலம் கொண்டு செல்லும் நீரை தேக்குவதற்கான தொட்டி அமைக்கும் பணிகள் 20 வீதத்திற்கு மேல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றின் கட்டுமானப் பணிகள் இவ்வருடத்தில் பூர்த்தியாக்கப்பட்டு நீர் விநியோகம் மேற்கொள்ள முடியும் என்றும் மேற்படி அலுவலகம் தெரிவித்துள்ளது.(2-315)

# சட்டவிரோத மதுபான உற்பத்தி,விற்பனைகள் சிறுவர் துஷ்பிரயோகங்கள், வன்முறைகள் அதிகம்

## மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவிபுரம் பிரதேசத்தில் அதிகரித்துக்காணப்படுகின்ற சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனைகள்.போதைப்பொருள் என்பனவற்றால் சிறுவர் துஷ்பிரயோகங்கள்.குடும்ப வன்முறைகள் என்பன அதிகரித்துக் காணப்படுவதாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி விற்பனைகள், கஞ்சாப்பயன்பாடு என்பன அதிகளவில் காணப்படுவதுடன், இதனால் இக்கிராமத்தில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளால் சிறுவர் துஷ்பிரயோகங்கள், இளவயது கர்ப்பம் தரித்தல்,இளவயதுத்திருமணங்கள், குடும்ப வன்முறைகள் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன.

ஆதலால் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் பொலிஸார் மற்றும் இராணுவத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.

இதனால் இவற்றைக்கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பிரதேச செயலாளர், உதவிப்பிரதேச செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்கள்,கிராம அலுவலர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் ஒன்றுகூடி குழுவொன்றை நியமித்து இதன் மூலம் இச்செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென மேற்படி மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ் விடயம் தொடர்பில் அண்மையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தினால் சுட்டிக்காட்டப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (2-315)

# தமிழரை இடை நிறுத்திய வங்கியை வடக்கு-கிழக்கில் தடை செய்க

## நாடாளுமன்றில் சிறிதரன் கோரிக்கை



(கொழும்பு)
தமிழ் மக்களின் உணர்வுகளை விளங்கிக்கொள்ளாது சிங்கள, பௌத்த மேலாதிக்கத்துடன் செயற்படும் தனியார் வங்கியை வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தடை செய்ய வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிதி அமைச்சு மீதான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது தொடர்பில் இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூர்ந்து வங்கியில் நினைவுச்சுடர் ஏற்றியமைக்காக பிரபல தனியார் வங்கியின் ஊழியர்கள் இருவர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர்.

குறித்த வங்கியின் கிளிநொச்சி கிளையில் பணிபுரிந்த இருவரே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தின் காரணமாக உயிரிழந்த தமது தமிழ் உறவுகளுக்காக கடந்த 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் வடக்கு முதல்வரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து தீப்பந்தங்களை ஏற்றி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்நிலையில், உயிரிழந்த தமது உறவினர்களுக்காகவும், பொதுமக்களுக்காகவும் குறித்த ஊழியர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்த காரணத்தினாலேயே இவர்கள் இருவரும் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர், மேற்படி தனியார் வங்கி சிங்கள வங்கியா? தமிழர்களை ஏற்க மறுத்தால் வடக்கில் அப்படியொரு வங்கியே தேவையில்லை.

உயிரிழந்த உறவினர்களுக்கு கண்ணீர் விடுகின்ற உரிமை இல்லையெனில் ஜனாதிபதி மற்றும் அமைச்சர் மனோ கணேசன் வசமிருக்கும் நல்லிணக்க அமைச்சுக்களை மூடிவிடுங்கள் என சிறிதரன் எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோர விபத்தில் சிக்கி இளைஞன் உயிரிழப்பு!

## மூவர் வைத்தியசாலையில்



(கொழும்பு)
வீரவில பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை பார ஊர்தி ஒன்றுடன் மோதுண்டு குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் 3 பேர் பயணித்துள்ள போது விபத்து இடம்பெற்றுள்ளதுடன் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய திஸ்ஸமஹாராம - கொனகமுவ பிரதேசத்தினைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விபத்தினைத் தொடர்ந்து அப்பகுதிக்கு விரைந்த பிரதேச மக்கள், பாரவூர்தியின் சாரதியை தாக்கியுள்ளதுடன் சாரதி தெபரவேவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# இலங்கையின் கடல் வாழ் உயிரியல் நிபுணரான ஆஷா டி வோஸுக்கு விருது



(லண்டன்)
பிரிட்டிஷ் கவுன்சிலின் முதலாவது குளோபல் அலுமினி விருது (Global Alumni Awards) வழங்கலில் இலங்கையின் கடல் வாழ் உயிரியல் நிபுணரான ஆஷா டி வோஸ் தொழில்முறை சாதனை விருதை பெற்றுள்ளார்.

ஆஷா டி வோஸ் கடல் வாழ் பாலூட்டிகள் ஆராய்ச்சி சம்பந்தமாக முதுதத்துவ மாணி (PhD) பட்டம் பெற்ற முதலாவது இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஷா டி வோஸ், இறுதி 62 பேரில் இருந்து தெரிவு செய்யப்பட்டது மட்டுமன்றி, பிராந்திய வெற்றியாளர்கள் 21 பேரில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டு, ஐக்கிய இராச்சியத்தின் குளோபல் அலுமினி விருது பெறும் இறுதி மூன்று நபர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டார்.

ஐக்கிய இராச்சிய பல்கலைக்கழகங்களின் அனைத்து பழைய மாணவர்களும் மூன்று நாடுகளையும் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள நான்கு உயர் கல்வி நிறுவனங்களையும் பிரதிநிதித்துவம் செய்திருந்தனர்.

இலங்கையைச் சேர்ந்த ஆஷா டி வோஸ் கடல் சார் கல்வியியலாளர் மற்றும் வட இந்திய கடலில் நீலத்திமிங்கிலம் சம்பந்தமான ஆராய்ச்சியில் முன்னோடியாக அறியப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 2020 ஆம் ஆண்டிற்கு முன்னரே ஐக்கிய தேசியக்கட்சி அகற்றப்படும்

## மனச்சாட்சியின் படி அரசிலிருந்து விலகிய 16 பேர் அணி திட்டம்



(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியை அதிகாரத்தில் இருந்து நீக்கும் போராட்டம் 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மனச்சாட்சியின் படி தாம் அரசாங்கத்தில் இருந்து விலகியதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 16 பேர் கொண்ட குழு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், மக்கள் தெளிவூட்டல் தொடர் பேரணிகளை மேற்கொள்ளும் அந்த குழுவின் முதலாவது மக்கள் பேரணி மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

16பேர் கொண்ட குழு, ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சியில் இருந்து வெளியேற்றும் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடும் எனவும், 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் அதனை நிறைவேற்றும் எனவும் டிலான் பெரேரா தெரிவித்தார். (இ-7)

# பியகம-கடுவலை பாலம் வழமைக்குத் திரும்பியது



(கொழும்பு)
பியகம மற்றும் கடுவலை ஆகிய நகரங்களை இணைக்கும் பிரதான பாலம் வழமையான நிலைக்கு திரும்பியுள்ளதாக நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் அந்தப் பாலத்தால் பயணிப்பது அபாய நிலையை எதிர்கொண்டிருந்ததால் வாகனப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிமின் ஆலோசனைப்படி வீதிப் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் முப்படையினர் இணைந்து விரைவாக அந்தப் பாலத்தை திருத்தியமைத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை முதல் அப்பாலத்தினூடான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது. (இ-7)

# சிங்க லே போன்ற இனவாதப்பேய்கள் நாட்டில் தொடர்ந்தும் உலாவுகின்றன

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)
சிங்க லே போன்ற இனவாத சக்திகள் தொடர்ந்தும் இயங்கி வருவதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். சிங்க லே, தமிழ் லே, முஸ்லிம் லே போன்ற இனவாத பேய்கள் தொடர்ந்தும் நாட்டில் உள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், நாட்டின் அபிவிருத்திக்கு நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்கள, முஸ்லிம், இந்து மற்றும் பறங்கியர் ஆகிய இன மக்கள் ஒன்றாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள மங்கள சமரவீர இனவாத சக்திகள் தொடர்ந்தும் நாட்டில் இயங்கி வருவதாகவும் இவ்வாறான சக்திகளினால் நாட்டை பின்நோக்கி இழுத்துச் செல்ல முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சுற்றுலாப் பயணிகளைக் கவர ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

(கொழும்பு)
தென் மாகாணத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிக்க ஹொரணு சுற்றுலாப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் கீழ் மாகாணத்தில் உள்ள நீர்வீழ்ச்சிகள் அபிவிருத்தி செய்யப்படும். இந்த ஒவ்வொரு நீர் வீழ்ச்சியையும் அபிவிருத்தி செய்வதற்காக தென் மாகாண சபை ஐந்து மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளது. (இ-7)

# நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசு பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ அறிவுரை

(கொழும்பு)

நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்பில், அரசாங்கம் பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எம்.பி. அறிவுரை வழங்கியுள்ளார்.



சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட, விளையாட்டு வீரர் தனஞ்சயடி சில்வாவின் தந்தையின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தச் சென்ற மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு அறிவுரை வழங்கினார். போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சுதந்திரமாக செயற்படுகின்றனர்.

அவர்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்க வேண்டும். நாட்டு மக்களின் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

## தேசிய அரசைக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

### அமைச்சர்களுக்கு அமரவீர அழைப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தேசிய அரசாங்கத்தைத் தொடர்ந்தும் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.



விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

வலஸ்முல்ல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். பொறுப்பேற்கப்பட்ட. கடமைகளை கருத்திற்கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும் எனவும் மகிந்த அமரவீர அறிவுரை வழங்கினார். (இ-7)


## சந்நிதியான் அற்புதங்கள் பாகம் எட்டு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.அரியரத்தினம் எழுதிய சந்நிதியில் சித்தர்கள் மற்றும் சந்நிதியான் அற்புதங்கள் பாகம் எட்டு நூல் வெளியீடு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் செல்வச்சந்நிதி செல்லையா ஐயர்கலாசார மண்டபத்தில் செல்வச் சந்நிதி ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் பிரதம குரு சிவசண்முக ஐயர் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேலு ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## கலையரங்கத்திற்கு அடிக்கல் நாட்டல்



(கரணவாய்)

நவிண்டில் கலைமதி சனசமூக நிலையத்தில் விளையாட்டு கலையரங்கம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதற்கு கலாசார அமைச்சின் ஊடாக பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கலையரங்கத்திற்கான கல்லினை கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் நாட்டினார். (இ-60)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

புதிய சோனகதெரு ஜே/88 செந்தமிழ் சிறுவர் கழக நிர்வாகத் தெரிவுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆறுகால்மடம். அறிவொளி கலையரங்க முன்றலில்நடை பெறும். இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு இருபாலை கானான் தேவாலய நிர்வாகம், ஜே/88 முதியோர் சங்கம், அருட்சோதி, துஸ்யந்தன் (கொழும்பு) கதிர்காமநாதன் கபிலன் (ஆறுகால் மடம்) ஆகியோரின் நிதி உதவியுடன் அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்பாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் அலோசியஸ் நிறுவனத்திற்குச் சீல்

(கொழும்பு)

கொழும்பு 2 இல் அமைந்துள்ள பெர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவன அலுவலக வளாகத்திற்கு சீல் வைக்கப்பட்டது. கடந்த 24 ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு அமைய, விசாரணை அதிகாரிகளால் இந்த அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சோதனை நடத்தப்பட்டது.

இந்த சோதனைகளின் போது அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜெப்ரி ஜோசப் அலோசியஸ்க்கு நீதிமன்றம் அறிவித்தல் பிறப்பித்திருந்த நிலையில் அவரது முன்னிலையில் அந்த அலுவலகம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் போது ஆவணங்கள் இருக்கும் இடம் தமக்குத் தெரியாது என ஜெஃப்ரி ஜோசப் அலோசியஸ் தெரிவித்துள்ளார்.

அலுவலகம் அமைந்துள்ள வளாகத்திலுள்ள காப்பகத்தில் வைத்து ஆவணங்கள்பூட்டப்பட்டுள்ளதாகவும் அதன் சாவிகள் தன்னிடம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனை அடுத்து, விசாரணை அதிகாரிகளால் நிறுவன வளாகத்திற்கு சீல்வைக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணைமுறி விநியோகம் தொடர்பில் பெர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியல் மற்றும் அதன் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் கசுன் பலிசேன ஆகிய இருவரும் கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கர்ப்பிணி ஆசிரியைகளுக்கு புதிய ஆடை சுற்றுநிருபம் ரத்து

(கொழும்பு)

கர்ப்பிணி ஆசிரியைகளுக்கு புதிய ஆடையை அணிவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் கல்வியமைச்சு விடுத்த சுற்றுநிருபம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட புதிய சுற்றுநிருபமொன்றின் பிரகாரம் ஆசிரியைகள் கர்ப்பமாக இருக்கும் காலத்தில் கவுண் போன்ற ஆடையொன்றை அணிவதற்கு வாய்ப்பை வழங்கும் வகையில் சிபாரிசுகள் முன் வைக்கப்பட்டிருந்தன.

எனினும் கல்வியமைச்சின் சுற்றறிக்கையில் முன் வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் சிபார்சு செய்யப்பட்டுள்ள கவுணை அணிவதில் சில சிக்கல்கள் இருப்பதாக பிரதமருடனான சந்திப்பொன்றில் பெண் ஆசிரியைகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து முன்னைய சுற்றறிக்கையை உடனடியாக ரத்துச் செய்து கர்ப்பிணி ஆசிரியைகள் எந்தவொரு வசதியான ஆடையையும் அணியும் வகையில் அவர்களுக்கு அனுமதி வழங்கி புதிய சுற்றறிக்கையொன்றை வெளியிடுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கல்வி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுச்சந்தைகளில் தற்போது வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

குறிப்பாக சுன்னாகம், மருதனார்மடம், திருநெல்வேலி ஆகிய சந்தைகளில் கதலி வாழைப்பழம் கிலோ ரூ.10-20 விலையிலும், இதரைப்பழம் கிலோ ரூ 20-30 விலையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

கடந்த சில நாட்களாக பெய்த தொடர்மழை மற்றும் தென்னிலங்கைக்கான வாழைப்பழம் ஏற்றுமதி குறைவடைந்தமையும் இவ் விலைச்சரிவிற்கான காரணமாக இருக்கலாம் என விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த பல மாதங்களாக அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த தேங்காயின் விலை குறைவடைந்துள்ளமையால் நுகர்வோர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (இ-7-105)



# ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்
# இரதோற்சவ சிறப்ப



### அருளாசிச் செய்தி



சீரித்திரப் பெருமை மிக்க யாழ்ப்பாணம் ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு இன்று தேர்த் திருவிழா. அருளே வடிவான ஆனைமுகப் பெருமான் அழகிய இரதத்திலே ஆரோகணிக்கும் ஆனந்த அற்புதத் திருக்காட்சியை இன்று நீராவியடியிலே கண்டுகளிக்கலாம். வேரோடு வினை தீர்க்கும் நீராவி விநாய கர் தேரேறி வருகின்ற பக்தி பூர்வமான நிகழ்வு காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் இந்தக் கோயில் மஹோற் சவத்தில் கலந்து கொள்வது மகத்தான பலனைத் தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஐந்துகர ஆனைமுகன் திங்களணி சேகரரின் மைந்தனாக சிங்காரத்தேரேறி வந்து மங்காத வாழ்வளிக்கும் மாண்பு சொல்லுந் தரமன்று. இன்று தேர் மீது இவர்ந்து வழிபடும் அடியார்களின் வினை போக்கி அருள்புரிய திருவடி பணிந்து அருளாசி நல்கி வாழ்த்து கின்றோம். இந்த ஆலயத்தை நிர்வகிக்கும் முதலியார் வழிவந்த பெரு மக்கள் சீரோடுஞ் சிறப்போடும் நீண்டநாள் வாழ்ந்து நற்பணியாற்ற வேண்டுமென்று நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து ஆசி வழங்கி மகிழ்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீன குருமுதல்வர்.**

### ஆசிச்செய்தி



வீரகத்தி விநாயகரது தேர் தரிசனக்காட்சியை காணும் பேறுபெற்ற அடியவர்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன். இறைவனுடைய திருவருள் எம்மை தேடி வருகின்ற அற்புதத் திருநாள் தேர்த் திரு நாளாகும். இறைவனை இலகுவில் எம்மனதில் அகப்படுத்திக் கொள்ளக்கூடிய பக்திநாளாக அமைந்ததும் தேர்த் திருவிழாவாகும். இந்நாளில் தேர்வடம் பிடித்து இழுத்தல், பிரதட்டை அடித்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், பஜனை செய்தல் முதலான பக்தி ஆராதனைகளை செய்து ஆனைமுகனின் பரிபூரணமான திருவருளுக்கு பாத்திரமாவீர்களாக. தேர்த்திருநாளில் ஆலய அறங்காவலர்கள், தொண்டர்கள், உபயகாரர்கள், அடியவர்கள் அனைவருக்கும் நீராவி விநாயகரது திருவருள் அனுதினம் கிடைக்க ஆசீர்வதிக்கின்றேன்.

**சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்,**
**ஒருங்கிணைப்பாளர், வீணாகான குருபீடம்**



பொன்னரை ஞாணும் பூந்துகிலாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்

(விநாயகர் அகவல்)

இறைவனின் பாதம் குளிர்ந்து இருப்பதால் அது நம் கோபதாபங்களைத் தணிக்கிறது. மேலும் அப்பாதம் நறுமணம் பொருந்தியது. பாதத்தின் மென்மையை ஓரளவாவது பாதுகாக்க காலணி அணி கிறோம். குளிர் காலத்தில் உறைகளை அணிகிறோம். எண்ணெய் தடவுகிறோம்.


நம்முடைய இதயத்தின் மேன்மையை எப்படிப் பாதுகாப்பது?

செந்தாமரைச் செல்வனின் பூம்பாதத்தில் நம்மை அர்ப்பணித்து அவரிடம் அன்பு செலுத்தி அவனுடைய அம்சமான உயிர்களிடத்து அன்பு செலுத்தினால் நம் இதயம் மென்மை கெடாமல் இருக்கும். இறைவனின் செம்மையான பாதம் படப்பட நம் இதயமும் செம்மையடையும் மனத்தையுடையவன் மனிதன். மனிதன் எதையாவது எண்ணிக் கொண்டிருப்பவன். எண்ணங்களே கருத்துப் பொருளாகவும் செயலாகவும் தொழிற்படுகின்றன. இதை சமயவாதிகள் அத்துவா என்றனர். அத்துவா என்றால் வழி என்று பொருள்.

அது மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனாத்துவா, காலத்துவா, தத்துவாத்துவா என்று ஆறு ஆகும். சைவத்தின் இந்த ஆறும் சத்தியோசாதர், வாமதேவர், தத்புருஷர், அகோரர், ஈசானர் என்று ஐந்து முகமுடைய சதாசிவனைத் தலைவராகக் கொண்டு விளங்குகின் றனர். இந்த சதாசிவ பேதத்தையே மஹோற்சவமும் விளக்குகின்றது.

**ஆலய பிரதம குரு, சிவஸ்ரீசிவதர்ஷ குருக்கள்.**

### ஆசிச்செய்தி



முப்புரமாவது மும்மலகாரியம் என்பார் திருமூலர். தேவர்கள் முப்புரங்களாலும் தாம் அடைந்த துயர் நீங்க வேண்டி இறைவனிடம் சென்றபோது சிவபெருமானும் சூரிய சந்திரர்களைச் சில்லாகவும் நால்வேதங்களைக் குதிரைகளாகவும் சரம், அசரப் பொருட்களை பல்வேறு பாகங்களாகவும் கொண்டமைக்கப்பட்ட தேரிலே எழுந்தருளி முப்புரங்களையும் அழித்து, மும்மலங்களையும் ஒடுக்கிய வரலாற்றுத் தத்துவத்தைக் குறிப்பதே இரதோற்சவத்தின் (தேர்த்திருவிழா) அம்சமாகின்றது. யாழ்ப்பாணத்தின் வண்ணார் பண்ணை பகுதியிலுள்ள நீராவியடி ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் ஒல்லாந்தர் காலத்திற்குரிய பழைமை வாய்ந்ததாகக் காணப்படுவதோடு விநாயகரின் அருளும் ஆற்றலும் அளவு கடந்ததாகவே இப்பகுதி மக்களால் உணரப்படுகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த விநாயகப் பெருமான் இன்று அழகிய சித்திரத்தேரில் ஆரோகணித்து வருகின்ற காட்சி மனதிற்கும் கண்ணிற்கும் மகிழ்வளிப்பதோடு வழிபாட்டில் ஈடுபட்டுள்ள ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்கு அடிகோலும் கைங்கரியம் என்பது குறிப்பிடத்தக்கது. வடம் பிடித்தால் சுவர்க்கத்தில் இடம் பிடிக்கலாம் என்ற கூற்றுக்கு இணங்க வீரகத்தி விநாயகரை மனதில் இருத்தி ஆனந்தப் பெருவாழ்வு அடைவோமாக.

**இறைபணியில் ஸ்வாமி சிதாகாசானந்தா,**
**சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்**

### வாழ்த்துச் செய்தி



இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்து நகரத்தின் கண்ணாக விளங்கக் கூடிய நீராவியடிப் பகுதியில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா தினமன்று மும்மலங்களையும் அழித்து ஆன்ம ஈடேற்றத்திற்காக வீதியுலா வர இருக்கின்ற வீரகத்தி விநாயகரின் இரதோற்சவ நிகழ்வு நடைபெறும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வெய்துகிறேன்.

முன்னாளில் நீராவியடிப் பகுதி காடுகளும் வயல்களுமாக காட்சியளித்த காலத்தில் இந்தியாவிலிருந்து இப்பகுதிக்கு வந்த பூதர் எனப்படுபவர் திருமறைக்காட்டிலிருந்து ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானை தம்முடன் கொண்டு வந்து இப்பகுதியில் ஒரு சிறிய கொட்டிலமைத்து, அதில் பிரதிஷ்டை செய்து விநாயகரை வணங்கி வந்ததாக வரலாறு.

18ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலே இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வந்ததுடன், யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய புகழ்பெற்ற ஆலயங்களுள் ஒன்றாக விளங்கியமையும் இத்தருணத்தில் நினைவு கூரப்படலாம்.

வடபகுதியில் மிகப் பழைய ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயம் இன்றும் அதன் அழகு குன்றாது புதுப்பொலிவுடன் திராவிடக் கலையம்சங்களை உள்ளடக்கிய ஐந்து மாடக்கோபுரம் மற்றும் அழகிய வசந்த மண்டபமென அனைத்துக் கலையம்சங்களுடன் மிளிர்ந்து காட்சியளிக்கின்றது.

இவ்வழகிய ஆலயத்தின் இரதோற்சவ நிகழ்வின் போது வெளியிடப்படவிருக்கும் வாழ்த்துமலருக்கு எனது வாழ்த்துச் செய்தியையும் வழங்குவதுடன், ஸ்ரீவீரகத்தி விநாயகரின் அருள் விநாயகர் அடியார்கள் அனைவருக்கும் கிட்ட வேண்டும் என பிரார்த்தித்து எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர், வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி




இலங்கை மணித்தீவின் சிரம் எனப்பொலியும் யாழ்ப்பாணத்தில் நீராவியடி எனும் புண்ணிய பகுதியிலே வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் அள்ளிக் கொடுக்கும் வீரகத்தி விநாயகப் பெருமானின் வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். முன்னைய காலத்தில் திண்ணைக் கோயிலாக ஆரம்பித்து படிப்படியாக வளர்ச்சி கண்டு இன்று நித்திய , நைமித்திய கிரியைகளுடன் பெருங்கோவிலாக மிளிர்வது இறையருளோடு மக்கள் சேவையும் இணைந்ததன் பயனே ஆகும்.

ஆலயத்தின் சிறப்பம்சமாக பழைமைவாய்ந்த தீர்த்தக்கேணி மேற்கு வீதியிலே அமைந்திருப்பது ஆலயத்தின் தொன்மையினை எடுத்துக் காட்டுகின்றது. அதுமட்டுமல்லாது புதிதாக சித்திரத்தேர் அமைந்து இரதோற்சவத்திலே விநாயகப் பெருமான் வீதி உலா வருதல் மேலும் பெருமை சேர்ப்பதாகவே உள்ளது.

விநாயகப் பெருமானின் மாதாந்த, வருடாந்த உற்சவங்களையும் உபயங்களையும் செய்யும் அனைத்து மெய்யடியார்களுக்கும் ஆலயத்தின் நிர்வாக சபையினருக்கும் மற்றும் அடியார்கள் அனைவருக்கும் விநாயகப் பெருமானின் அருளாசி வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)**
**சிறுவர் ,விவகார இராஜாங்க அமைச்சர்,**
**யாழ்.கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு**
**இணைத்தலைவர்.**

### மகிமையோங்கட்டும்!



வருடந்தோறும் மிகவும் அற்புதமாக நிகழ்ந்து வருகின்ற ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவ நிகழ்வு இவ்வருடமும் சிறப்புற நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை மகிழ்வைத் தருகின்றது.

எமது மண்ணில் கடந்த சில வருடங்களாகக் காணப்படுகின்ற பல்வேறு சமூக குறைபாடுகள் எமது மக்களை பல்வேறு வழிகளிலும் பாதித்து வருவதாகவே உணரமுடிகின்றது. அதிகளவில் தற்கொலைக்கு முயல்கின்ற சமூகமாக எமது சமூகம் மாற்றப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகவே தொடர்கின்றது. இத்தகைய நிலையில், எமது மக்களுக்கு மன ஆறுதலைக் கொடுப்பதாகவே ஆலயங்கள் இருந்து வருவதையும் இங்கு சுட்டிக்காட்டுகின்ற அதேவேளை, எமது மக்களுக்கு சமூக வழிகாட்டியாகவும் இந்த ஆலயங்கள் மாற வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

அந்தவகையில், ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயமும் தனது பங்களிப்பினை வழங்கி, அதன் வரலாற்றில் அதன் சிறப்புகள் மேலும் மேலும் ஓங்க வேண்டும் என எதிர்பார்த்து, ஆலயத்தின் பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர் திருவாளர் வை.இரகுநாதமுதலியார் அவர்களது பணிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, ஆலயத்தின் இரதோற்சவ நிகழ்வு சிறப்புற வாழ்த்துகின்றேன்.

மக்கள் சேவையிலுள்ள,

**டக்ளஸ் தேவானந்தா, பா.உ.**
**செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி.**
**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்.**

### பிரார்த்தனைப் பாமாலை



கண்ணனாம் இராமன் தோஷம்
களைந்தருள் ஈயும் நாதன்
வண்ணையின் வடகிழக்கில்
வனப்புறு வாவி ஓரம்

விண்ணுயர் கோபுரம் ஓங்க
விளங்கிடும் சீர்மை கண்டு
திண்ணமாய் அருள்க என்றே
திருவடி போற்றுவோமே

பூதராம் புனிதர் வேண்ட
புகழ் நீராவி புகுந்தோன்
வேதாரண்ய தலம் விளங்கு
வீரகத்தி விநாயகப் பேரோன்
ஆதியாய ஆனைமுகத்து
அருளாளன் எமை காக்க
நாதச்சிலம்ப ஒலி செயவே
நயந்திட ஆடல் கொண்டோன்

நீராவி நகரில் சேனாதிராசர் தந்த
நிகரில் கலிவெண்பா பெற்ற நாதா
சீராக செல்லம்மாள் குமாரன் இன்று
சேவிக்க அருளும் செல்வ மூர்த்தி
தேரோடும் தெய்வக்கோபுர கோயில்
திகழும் அருட்கரத்து ஐங்கரத்தேவா
பாராய் கடைக்கண்ணால் எம்மை
பார்த்தருள் நன்கு பராபரனே


வேதராண்யத்தில் எழுந்தருளி, இராமபிரானின் வீரகத்தி தோஷம் நீக்கிய விநாயகப் பெருமான் வண்ணையின் வடகிழக்கே நீராவியடியில் கோபுரக் கோயில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி செய்கிறான். ஆறுமுகநாவலரின் ஆசிரியரான சேனாதிராச முதலியாரால் கலி வெண்பா பாடப் பெற்ற இப்பெருமானின் வைகாசிப் பெருவிழாவில் இன்று நிகழும் திருத்தேர் விழா சிறப்புறவும் நம் எல்லோருக்கும் வெற்றி விநாயகனின் திருவருள் பரிபூரணமாக சித்திக்கவும் அவன் திருவடிகளைப் பணிந்து கோயில் வரலாறு பேசும் இப்பிரார்த்தனைப் பாக்களைச் சமர்ப்பித்து, வாழ்த்துகின்றோம். பிரார்த்திக்கிறோம்.

**பிரம்மஸ்ரீ.தியாக. மயூரகிரிக்குருக்கள்,**
**ஆசிரியர், இந்துசாதனம்.**

அனுசரணை
KUDDYTHAMBY FAMILY
20 Frensham Close Southall, UK
0094778872828,
0094713833383
kuddythambyfamily@gmail.com

# கத்தி விநாயகர் ஆலய
# பு மலர் 28.05.2018





## வாழ்த்துச்செய்தி



வரலாற்றுச் சிறப்புடைய ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் திருக்கோயில் மஹோற்சவம் நடைபெற வுள்ளது. நமது வாழிடத் திருக்கோயிலிலே மஹோற் சவம் என்றால் அங்குள்ள மக்கள் மகிழ்ச்சியுடன் இறை வழிபாட்டிலே ஈடுபடுவார்கள். அங்கிருந்து பிற இடங்க ளில் வாழச் சென்றவர்கள் தம்முடைய ஊர் விநாயகப் பெருமானை ஆண்டு ஒருமுறையாவது சென்று தரிசிக்க வேண்டுமென்ற ஆவ லுடன் வந்து சேருவார்கள். திருக்கோயிலை அண்டி வாழும் மக்கள் கோயிலை அண்டியுள்ள இடங்களைத் தூய்மையாக வைப்பது மட்டு மன்றி தத்தம் வீடுகளையும் தூய்மையாகவும் அழகாகவும் வைப்ப தற்கு முயல்வர். வீரகத்தி விநாயகப் பெருமான் இவ்வாறான மங்க ளரமான மகிழ்வான நிலைகள் ஏற்பட திருவருள் பாலிக்கவேண்டும்.

இன்று இத்திருக்கோயிலின் பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பா ளர் திருவைத்திலிங்கம் இரகுநாதமுதலியார் அவர்கள் ஆண்டு தோறும் எம்பெருமானுடைய மஹோற்சவத்தை மிகச் சிறப்பாக நடத்தி நீராவி வீரகத்தி விநாயகரை வழிபடுவோர் எல்லோருக்கும் அப்பெருமா னின் திருவருள் கிட்டும்படி திருப்பணி ஆற்றுகிறார். ''நீராவிப் பூங்கோயில் வாழ்கின்ற'' விநாயகப்பெருமானுடைய திருவருளாலே இக் கோயில் பல நூற்றாண்டுகளாக இங்கு நிலவி வருகின்றது. அவன ருளாலே அவன் தாள் பணியும் மக்களும் திருக்கோயிற் பணியாளர் களும் கோயிற் கடமைகளை நன்கு ஆற்றிவருகின்றனர்.

வழக்கம்போல் இந்த ஆண்டும் இம்மாதம் 20 ஆம் திகதி மஹோற்சவம் தொடங்கி 28 ஆம் திகதி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேரேறி உலா வந்து தன்னுடைய வழிபாட்டாளர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். அவருடைய திருவருள் நம்முடைய மக்க ளையும் மண்ணையும் காத்து அமைதியும் அன்பும் இன்புறு வாழ்வும் அளிக்கவேண்டுமென இவ்வேளையில் வேண்டுகிறேன்.

''விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்''

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி அ.சண்முகதாஸ்**
**தகைசார் வாழ்நாள் பேராசிரியர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண நகரத்தினுள் சைவசமயப் பண் பாட்டின் சிறப்புக்கள் எல்லாம் நிறைந்ததாக நீராவியடி, நீராவி ஆகிய பெயர்களால் வழங்கப்படும் பகுதி அமைந் துள்ளது. அருளும் மகிமையும் மிகுந்த பல ஆலயங் களால் சூழப்பட்டு அவற்றின் மணியோசைகளால் முப்பொழுதும் நிறைவு பெற்று புனிதமடையும் பெரும் பேறுபெற்ற இடமே நீராவியடிப் பகுதி.

இப்பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் இரதோற்சவ நிகழ்வை முன்னிட்டு இந்த பிரார்த்தனைச் செய்தியை வழங்குவதால் நானும் விநாயகன் அருளைப் பெற்ற வனாகிறேன். நீராவியடிப் பகுதியின் சூழலுக்கு மேலும் பன்மடங்கு அருளும் மகிமையும் தெய்வீகச் செழுமையும் சேர்க்கும் இவ்வால யம் இருநூறு ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்தது என அறியமுடிகிறது.

இந்த ஆலயத்தில் இவ்வாண்டில் 20.05.2018ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மஹோற்சவம் 28.05.2018 திங்கட்கிழமை நடைபெறு கின்ற இரதோற்சவ நிகழ்வையடுத்து 29.05.2018 செவ்வாய்க்கி ழமை நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறுகிறது. இக் காலத்தி லும் ஏனைய காலங்களிலும் மக்கள் அனைவரும் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகரின் அருளாசிகளைப் பெற்று அறமும் நீதியும் தெய்வீக மகிழ்ச்சியும் மிக்க நல்வாழ்வு வாழப் பிரார்த்தி க்கிறேன்.

**றெஜினோல்ட் கூரே,**
**ஆளுநர், வடமாகாணம்.**

## வாழ்த்துச்செய்தி



யாழ்.நகரில் நீராவிப் பகுதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப்பெருமானின் இரத உற்சவத்திற்கு வாழ்த்துச்செய்தி வழங்க விநா யகப் பெருமானின் அருளாசி கிடைக்கப் பெற் றமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆலயம் இறைவன் குடியிருக்கும் இடம் மட்டுமல்ல எமது பண்பாடு வளர்க்கப்படுகின்ற இடமாகவும் திகழுகின்றது. மேலும் இறை யன்பை வளர்ப்பதற்கும் மக்களின் அன்றாட கடமைகள் சிறப்ப தற்கும் இவ் ஆலய வழிபாடு ஏதுவாக அமைகின்றது. அதனால் எமது ஆன்றோர் ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் ''கோயில் இல்லாத ஊரிலே குடியி ருக்க வேண்டாம்'' என்ற முதுமொழி எமது வாழ்வில் ஆலய த்தின் வழிபாட்டின் அவசியத்தை உயர்த்தி நிற்கின்றது.

இவ்வாறு அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தை சுற்றி வித் தியாசாலைகள், கல்லூரிகள், சைவபரிபாலன சபை போன்ற சமய பணிபுரியும் நிலையங்களையும் தன்னகத்தே கொண்டுள் ளதோடு கற்றறிந்த கல்விமான்கள், ஆசாரமிக்க புண்ணிய சீலர்கள், தருமநெறி தவறாத நீதிமான்களையும் தோற்றுவித்த பெருமை வண்ணார்பண்ணையின் வட கிழக்கில் அமைந்துள்ள ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெரு மானுக்கே உரியது.

இவ்வாறான சிறப்புகளை தன்னகத்தே உள்ளடக்கிய இவ் ஆலய மஹோற்சவம் 20.05.2018 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28.05.2018 ஆம் திகதி நடைபெறும் இரத உற்சவத்தையடுத்து 29.05.2018 செவ்வாய்க்கிழமை நடைபெறும் தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறுகின்றது.

இவ் உற்சவத்திற்கு சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவ ர்கள் முதல் இவ்வாலயத்தில் தொண்டுகள் செய்வதை பார்க்கும் போது ''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா'' என்ற தேவாரப்பாடலில் அப்பர் சுவாமிகள் இறை தொண்டின் தன் மையை விளக்கியுள்ளதை இவ் ஊர் மக்கள் செயலில் காட்டி யுள்ளமை சிறப்புக்குரியது.

எனவே மஹோற்சவ காலத்திலும் சிறப்புக்குரிய இரத உற்சவத்திலும் ஏனைய காலங்களிலும் மக்கள் அனைவரும் ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகரின் அருளாசிகளைப் பெற்று நல்வாழ்வு வாழ பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன்,**
**ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்.**

## வாழ்த்துச்செய்தி



பண்டைய புகழ் கொண்ட ஸ்ரீ ஜெய நீராவி வீர கத்தி விநாயகர் ஆலயம்

ஒரு ஊரின் சிறப்பு அவ்வூரில் உள்ள சைவ ஆலயங்கள், தேவாலயங்கள், வித்தியாலயங்களின் சிறப்பில் தங்கியுள்ளது. அதன்படி யாழ்ப்பாணம் வண் ணார்பண்ணை கிழக்கிறையின் நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயச் சிறப்பும் அதன் அருட்கடாட்சமும் பன்னெடும் காலமான வரலாறும் அதன் பரம்பரை பரிபாலனமும் மிகச் சிறந்ததாகவே இன்றும் நிலைத்திருக்கின்றது. இது எல்லாம் அவர் செயல் என்றே கூற வேண்டும். ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தீ விநாயகர் ஆலய மஹோற் சவம் சீராகவும் சிறப்பாகவும் நடைபெற்று நிறைவுபெற எனது நல்லாசியைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் திருவருள், திருப்பணி சிறக்க, மக்கள் நலம் பெற, நாட்டில் அமைதி, சமாதானம் உருவாக ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகனின் பாத கமலத்தினை வணங்கி அவன் அருளை வேண்டி நிற்கின்றேன்.

**கௌரவ.இம்மானுவல் ஆனல்ட், முதல்வர்,**
**யாழ்.மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## தேர்த்திருவிழா வாழ்த்துரை



திருவாரூர் தேர் அழகு சிறுவயதில் தேடலாய் மனதில். திருவாரூர் தியாகராஜப் பெருமானின் மிகப்பெரிய கட்டுத்தேரை இழுக்கும் பாக்கியமும் பெற்றிருந்தேன். முன்னர் இத்தேர்ப்பவனி வரப்பல நாட்கள் எடுக்கும். திருப்பல்லாண்டு பாடி சேந்தனார் சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் ஓடாது நின்ற திருத்தேரைத் தானாகவே ஓடச் செய்தார். அத்தேர் விழாவையும் கண்டுகளிக்கும் புண்ணியமும் எனக்கு- எங்களுக்கு!

வேண்டுவார் வேண்டுவதைக் கொடுப்பவர் அல்லவா!

மஹோற்சவம் நடைபெறும் காலம் வந்துவிட்டதை நீராவிப் பிள்ளையார் தாமாகவே எங்களுக்கு உணர்த்தினார். அவர் இட்ட பணியை அவர் வழிகாட்டலில் செய்து வருகின்றோம்.

செயலாவது யாதொன்றும் இல்லை தெய்வமே... எல்லாம் உன் செயலே என்று உணரப் பெற்ற அனுபவம்- ஆனந்தம் எங்களுக்கு

நீராவிப் பிள்ளையார் அடியவர்கள் பலர் உள்ளத்தில் தோன் றாத் துணையாக நின்று ஊக்கப்படுத்தி அருள் வழங்கி மஹோற்சவ விழாக்களை மிகச் சிறப்பாக நடத்துகின்றார்.

**வை.இரகுநாதமுதலியார்.**
**ஆலய பரம்பரை நம்பிக்கைப்பொறுப்பாளர்,**
**ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்.**

## யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் வாழ்த்துச்செய்தி




பழைமையும் பெருமையும் பொருந்திய சைவ சமயத்தின் முதற்கடவுள் விநாயகப் பெருமானின் புகழ் மிக்க ஆலயமான ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை சிறப்பாக நடத்தி வருவதற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமுதாயத்தில் சமய, சமூக விழுமியங்கள் அழிந்து போகாமல் பேணும் வகையில் பாரம்பரிய சம்பிரதாயங்களுடன் வருடாந்த மஹோற்சவங்களை நடத்தி வரும் இவ்வாலய பரிபாலன சபையின ருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, இவ்வாலய மஹோற்சவ ங்கள் வருடந்தோறும் சிறப்பாக நடைபெறுவதற்கு அருள் மிகு விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.த.ஜெயசீலன், ஆணையாளர்,**
**மாநகரசபை,யாழ்ப்பாணம்.**

## தேரிலேறி வரும் ஜெயஸ்ரீ நீராவி வீரகத்தி விநாயகனை கை தொழுவோம்...



வேழமுகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்து வரும்...

தமிழ்நாடு வேதாரணியத்திலிருந்து யாழ்ப்பா ணத் தில் செல்வம், செல்வாக்குடன் பெரும் நிலக்கிழா ராக வாழ்ந்த சிறாப்பர் குடும்பத்தினர் யாழ். நகர் நீராவியடியில் ஜெயஸ்ரீ நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தை நிறுவி அதன் அருகில் தீர்த்தக் கேணியை வெட்டுவித்தனர். ஆலயத்தின் மூன்று நேரப்பூசையும் கிரமமாக நடைபெற்று வந்தன.

கோவில் சிறியதாக இருந்தாலும் அது மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகிய சிறப்புக்கள் அமையப்பெற்றது. நீராவியடியின் மத்தியில் முதன்முதலில் அமைக்கப்பட்டிருந்தமையினால் ஜெயஸ்ரீ நீராவி வீரகத்தி விநாயகர் நீராவியடி வாழ் மக்களது குல தெய்வ மானார்.

மஹோற்சவத்தின் சிகரமாக திகழும் தேர்த்திருவிழாவானது இன்று ஜெயஸ்ரீ நீராவி வீரகத்தி விநாயகப் பெருமான் அழகிய தேரில் எழுந்தருளி வரும் கண்கொள்ளாக்காட்சியை அனைவரும் கண்டு விநாயகப் பெருமானின் அருளைப் பெற தேரில் வடம் பிடிப்போம். ஊர் கூடி தேர் இழுத்தல் சமய சமூக ஒற்றுமையை குறித்து நிற்கிறது.

அத்துடன் திருவிழாக்களிலே தேர்த் திருவிழா வானது முதன்மை பெறுகிறது. அருளே வடிவான அருள்மிகு விநாயக அடியார்களது இன்னல்கள் நீங்கி ஆனந்தவாழ்வு வழங்கி அருள்புரிய தேரேறி வருகிறார்.

மேலும் தமது பணிகளை திறம்படச் செய்து கொண்டிருக்கும் திரு.திருமதி இரகுநாத முதலியார் ஆலய நிர்வாகத்தினருக்கும் ஜெயஸ்ரீ நீராவி வீரகத்தி விநாயகரின் அருட்காட்சி என்றும் நிலைத் திருக்க எல்லாம்வல்ல விநாயகனை வேண்டுகின்றோம்.

**குட்டித்தம்பி குடும்பத்தினர் (லண்டன்)**

## செந்தமிழ்ச் சொல்லருவியின் பிரார்த்தனையுரை



ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் இன்று தேரேறி அருள்பாலிக்கின்றார். திருமறைக்காட்டில் உறைந்த எம்பெருமான் யாழ்ப்பாணம் நீராவியடியில் கோவில் கொண்டருளுவதாக ஆலய வரலாறு குறிப் பிடுகின்றது. விநாயகரை தொழுது தொடங்கும் காரியங்கள் அவ னருளால் சித்தி பெறுவது வழமை. முதல் வணக்கத்தை விநாயக ருக்கு என ஆக்கி அவனருளாலே அவன்தாள்பணியும் அன்பர்கள் காரிய சித்தியைக் காண்கிறார்கள். அழகிய தீர்த்தக் கேணியை நீர் சேமிப்பிடமாகக் கொண்டு ஆலயம் அமைத்த எம் முன்னவரின் சூழல் பற்றிய சிந்தனை வியக்கவைக்கிறது. ஆலயத்தின் பின்புறம் அமைந்த தீர்த்தக்கேணி நூற்றாண்டு பழைமை வாய்ந்ததாகும். தேர் உற்சவம் எமது வாழ்வைத் ''தேர்'' என்ற நிலையில் ஆராய்ந்து பார்ப்பதற்குரிய தூண்டலைத் தருகின்றது. நல்லவைகள் ஓங்கி அல்லவைகள் நீங்கி எம் வாழ்வு வளம் பெறவும் மண் மாண்புறவும் வீரகத்தி விநாயகர் அருள் புரிய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்,**
**தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்.**

## நீராவி விநாயகரே வேரோடு வினை களைய வருக!



யாழ்ப்பாணம் நீராவியடிப் பதி வளரும் விநா யகப் பெருமானுக்கு இன்று இரதோற்சவம். மஹோற் சவத்தில் இடம்பெறும் இரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். அந்த வகையில் இன்று யாழில் நிகழ் கின்ற அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்க இன்று தேரிலே ஆரோக ணித்து வருகிறார் ஜெயநீராவி வீரகத்தி விநாயகர்.

திருவும் கல்வியுஞ் சீரும் தழைக்கவும் கருணை மழை பொழியும் கணபதியாக இன்று சித்திரத்தேரேறி அற்புதப் பவனி வருகின்ற ஆனைமுகன் அனைத்து அடியார் பெருமக்க ளுக்கும் அருள்புரிய வேண்டுமென்று பொற்பாதம் பணிந்து வேரோடு வினை களைய வணங்கி வாழ்த்துகின்றோம்.

**கலாபூஷணம் சிவநெறிக் கலாநிதி**
**தெய்வத் தமிழ்ச்சுடர் இராசையா ஸ்ரீதரன்**

மலரமைப்பு:-பா.இராகுலன்.

# முன்னாள் இலங்கைத் தூதுவர்
# ஜாலிய விக்கிரமசூரியவுக்கு எதிராக அமெரிக்க நீதித் திணைக்களம் வழக்கு

(கொழும்பு)

அமெரிக்காவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவுக்கு எதிராக அமெரிக்க நீதித் திணைக்களம் பணச்சலவை குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரம் ஒன்றை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



எவ்.பி.ஐ. விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்படவுள்ளது.

ஜாலிய விக்கிரமசூரியவுக்கு எதிராக, பணச்சலவை குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்கு நீதிபதி ஒருவர் அனுமதியளித்துள்ளார் என்றும் அந்த வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஜாலிய விக்கிரமசூரிய வோஷிங்டன் இலங்கைத் தூதுவராக இருந்த போது, அளிக்கப்பட்ட இராஜதந்திர சிறப்புரிமையை இலங்கை வெளிவிவகார அமைச்சு விலக்கிக் கொண்டதை அடுத்து, இந்த சட்ட நடவடிக்கைக்கு வழி பிறந்துள்ளது.

அவருக்கு எதிரான வழக்கின் அடிப்படையில், இராஜதந்திர சிறப்புரிமையை நீக்குமாறு அமெரிக்க அதிகாரிகள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையிலேயே, இலங்கை வெளிவிவகார அமைச்சு அதனை நீக்கியுள்ளது.

எந்தவொரு இராஜதந்திரியினதும் இராஜதந்திர சிறப்புரிமையை எந்தவொரு நேரத்திலும் ஒரு அரசாங்கத்தினால் நீக்க முடியும்.

இதேவேளை, ஜாலிய விக்கிரமசூரிய அமெரிக்காவை விட்டு வெளியேறுவதற்கு அமெரிக்க அதிகாரிகள் தடைவிதித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீனாவின் உயரதிகாரி இலங்கையில்

(கொழும்பு)

சீனாவின் உயர்மட்ட அரச அதிகாரி ஒருவர் இலங்கையில் தற்போது பயணத்தை மேற்கொண்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் தேசிய சட்ட மன்றமான தேசிய மக்கள் காங்கிரஸின் வெளிவிவகாரக் குழு உதவித் தலைவரான கொங்குவான் என்ற உயர்மட்டப் பிரமுகரே இலங்கை வந்துள்ளார்.

இவர் இலங்கையில் பல்வேறு அரச தரப்பு பிரமுகர்களையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# இலங்கைக் கடலோரக் காவல்படை அதிகாரிகளுக்கு ஜப்பானில் பயிற்சி



(கொழும்பு)

இலங்கைக் கடலோரக் காவல்படைக்கு இரண்டு ரோந்துப் படகுகளை வழங்கியுள்ள ஜப்பான் அதில் பணியாற்றுவதற்கு எட்டு கடலோரக் காவல் படையினருக்குப் பயிற்சிகளை அளித்துள்ளது.

இலங்கையின் கடல் கண்காணிப்பு ஆற்றலைப் பலப்படுத்தும் நோக்கில் ஜப்பான், 30 மீற்றர் நீளமான இரண்டு ரோந்துப் படகுகளை அண்மையில் வழங்கியது.

இந்தப் படகுகளில் பணியாற்றவுள்ள எட்டு கடலோரக் காவல் படையினருக்கு ஜப்பானில் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

டோக்கியோவில் கடந்த 7ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# மியன்மார்-இலங்கை நட்பு சங்க விருது விழா



(கொழும்பு)

மியன்மார் மற்றும் இலங்கையின் நட்பு சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு - ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக சபாநாயகர் கரு ஜெயசூரிய கலந்துகொண்டார்.

இதன்போது மியன்மார், இலங்கை நட்பு சங்கத்தினால் நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், கேடயங்களும் வழங்கப்பட்டன. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நாம் சொல்வதைப் பிறர் கேட்க வேண்டுமா?

நான் சொன்னா யார் கேக்குறாங்க? என் வார்த்தைக்கு எங்கே மதிப்பிருக்கு? நான் கரடியாக் கத்தி என்ன புண்ணியம்? என்றெல்லாம் புலம்புகிறவர்களுக்கு இதோ பத்துக் கேள்விகள்.

1.உங்களுக்கு அதைச் சொல்ல உரிமையோ அதிகாரமோ உண்டா?

2.நீங்கள் சொல்வது நியாயம் என்பது உங்களுக்கு மட்டும் தோன்றாமல் மற்றவர்களுக்கும் தோன்ற இடமிருக்கிறதா?

3.சொல்லும் போது பொறுமையுடன் சொன்னீர்களா, அல்லது எரிச்சலூட்டும் வகையில் சொன்னீர்களா?

4.கேட்டுக்கொள்ள வேண்டியவர்கள் நல்ல மனநிலையில் இருந்தார்களா, அல்லது கோபமாகவோ வருத்தமாகவோ இருந்தார்களா?

5.பலரை வைத்துக்கொண்டு சொன்னீர்களா,அல்லது தனிமையில் சொன்னீர்களா?

6.சொன்ன போது நம் நன்மைக்குத்தான் சொல்கிறீர்கள் என்று அவர்கள் நம்ப இடம் இருந்ததா?

7.நான்கு வார்த்தை தட்டிக் கொடுத்துப் பேசி பாராட்டிச் சொன்னீர்களா அல்லது எல்லாமே உபதேசம் தானா?

8.அவர்களைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் உயர்ந்த எதிர்ப்பார்ப்புகளைச் சொன்னீர்களா அல்லது நான் சொல்வதைச் சொல்கிறேன் கேட்டால் கேட்டுக்கொள்; இல்லை எக்கேடோ கெட்டுப்போ என்கிற தொனியில் பேசி விட்டீர்களா?

9.நீங்கள் அப்படிச் சொன்னதற்கு அவர்கள் சும்மாயிருந்திருக்க மாட்டார்களே! பதிலுக்கு நம்மிடம் உள்ள குறைகளையும் அனுகுமுறைகளையும் சுட்டிக்காட்டியிருப்பார்களே அதற்கு நீங்கள் எப்படிப் பிரதிபலித்தீர்கள்?

10.சொல்லுவதை மிரட்டாமல் சொன்னீர்களா?

இவற்றுக்கெல்லாம் நம்மிடம் சாதகமான பதில்கள் வராதவரை நாம் சொல்பவற்றை நாலுகால் பிராணி கூடக் கேட்டுக்கொள்ளாது!

**லேனா தமிழ்வாணன்**

# சர்வதேச நாடுகளின் உதவிகளுக்கு இலங்கை நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்கும் நடவடிக்கைக்கு உதவிகளை (நிதி உள்ளிட்ட) வழங்கிய சர்வதேச நாடுகள், அமைப்புகளுக்கு நன்றி தெரிவிப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் சீரற்ற வானிலையால் மண்சரிவு, வெள்ளம் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால் இதுவரை 21 பேர் உயிரிழந்துள்ளதோடு, ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு உதவிகளை வழங்கியிருந்தன.

இது தொடர்பாக, வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, நிதி உதவிகளை வழங்க விரும்புவோருக்காக, தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தினால் அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)




தமிழ்நாடு, தூத்துக்குடி மாவட்ட மக்களின் சூழலியல் நீதிக்கான (ஸ்டெர்லைட் ஆலை மூடல்) போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும் இதன்போது உயிரிழந்த தமிழ் மக்களுக்கு நீதி கோரியும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து தரிப்பிடம் முன்பு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்கள், கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா, ஐ.சிவசாந்தன்)

## தனியார் வங்கியில் தீ



(கொழும்பு)

களுபோவில பிரதேசத்தில் தனியார் வங்கி ஒன்றில் நேற்று அதிகாலை தீ பரவியுள்ளது.

இதில் வங்கியின் முன்பாகம் மற்றும் A.T.M இயந்திரம் சேதமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4.10 மணியளவில் தீ பரவியுள்ளதுடன், கல்கிஸை நகர சபையின் தீயணைப்பு பிரிவு அதிகாரிகள் மற்றும் கொஹுவல பொலிஸ் அதிகாரிகள் தீயணைப்பு நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

தீ பரவலுக்கான காரணம் இதுவரையில் அறியப்படவில்லை. (இ-7)



வேலணை நேதாஜி சனசமூக நிலையத்தில் முதியோர் விழாவும் முதியோர் கௌரவிப்பும் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக எஸ்.பி.சாமி கலந்து கொண்டார்.

## தமிழகத்தை நோக்கி மத்தி சதி தீட்டுகிறது

### திருமாவளவன் காட்டம்

(சென்னை)

தமிழகத்தை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் மோடி தலைமையிலான மத்திய அரசாங்கம் பல்வேறு சதித்திட்டங்களை வகுத்துவருவதாக, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சென்னை, விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பா.ஜ.க. மத்திய அரசில் ஆட்சியமைத்து நேற்று முன்தினத்துடன் நான்கு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில், அக்கட்சியின் ஆட்சிக்காலம் தொடர்பில் பேசிய திருமாவளவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்திலும் கூட மத்திய அரசின் உடன்பாடுள்ளது என்பதற்கு பல சான்றுகளை கூறமுடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் பா.ஜ.கவின் இதுவரையிலான ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் போராட்டங்களோ அதிகம் இடம் பிடித்துள்ளதாகவும் தமிழகத்தை அழிக்கும் நோக்குடனேயே மத்திய அரசு செயற்பட்டது எனவும் அவர் கடுமையாக சாடினார். (7)

## லொறி மோதி பாதசாரி பலி

(கொழும்பு)

கொடதெனியாவ, பல்லேகம பகுதியில் ஏற்பட்ட விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

லொறி ஒன்றை பின்நோக்கிச் செலுத்திய போது பாதசாரி ஒருவர் மீது மோதி குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொடதெனியாவ பகுதியை சேர்ந்த 70 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் லொறியின் சாரதியை கைது செய்துள்ளதுடன் குறித்த நபரை மினுவாங்கொட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளனர். (இ-7)

## முகாமைத்துவ பீட பீடாதிபதியாக கலாநிதி குணபாலன் மீண்டும் தெரிவு

(கொழும்பு)



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவபீட பீடாதிபதியாக இரண்டாவது தடவையாக கலாநிதி செ.குணபாலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட பீடாதிபதிக்கான தெரிவு இடம்பெற்றபோது கலாநிதி குணபாலனை எதிர்த்து போட்டியிட்டவர்களை விட 19 மேலதிக வாக்குகள் பெற்று இரண்டாவது தடவையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது உயர்தரக் கல்வியை யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியிலும் தொழில் நிர்வாக மாணியை யாழ்.பல்கலைக்கழகத்திலும் முதுமாணி கற்கையை களனி பல்கலைக்கழகத்திலும் கலாநிதிப் பட்ட கற்கையை இந்தியாவிலும் கற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தரம் ஒன்றிற்கு மாணவர்களை இணைக்க விண்ணப்பிக்கவும்

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களை இணைத்துக்கொள்ளும் சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரன தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் ஜூன் மாதம் முதல் தரம் ஒன்றிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சுற்று நிருபத்தில், 2018 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தை விட சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.வடக்கு பிரதேச செயலகம் இணைந்து நடத்திய தெய்வீக கிராம நிகழ்வு நேற்று முன்தினம் காலை இளவாலை வசந்தபுர வசந்த முருகன் ஆலய முன்றலில் நடைபெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சண்முகராசா சிவசிறி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் ,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி.ஹேமமலோஜினி குமர மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் உட்பட பிரதேச செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், இளவாலை பிரதேச மக்கள், அறநெறி பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-இளவாலை செய்தியாளர்)

# வைகாசி விசாகம் இன்று

பன்னிரண்டு மாதங்களில் வைசிகாசி மாதமாவது பல சிறப்புக்கள் உடையதாகும். வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில் வருகின்ற பௌர்ணமி தினமே வைகாசி விசாகம். ஆன்மீக வைபவங்களிலெல்லாம் தலையாயதாக வைகாசி மாதத்தில் விளங்குவது வைகாசி விசாகத்திருநாளாகும். இது முருகப்பெருமான் அவதரித்த நன்நாள். விசாக வேந்தனாம் முருகப்பெருமான் அவதரித்த இத்தினத்தினம் எல்லாமுருகன் தலங்களிலும் மிகச்சிறப்பாக கொண்டப்படுகின்றது. இந்தநாளில் சூரியபகவான் முருகனை வழிபடுவதாகவும் இதே நாளில் பக்தர்கள் விரதமிருந்து முருகப் பெருமானை வழிபட்டால் புத்திரபாக்கியம் கிட்டும் என்பது ஐதீகம் ஒரு முறை சிவபெருமான் தனது ஐந்து முகங்களான ஈசானம், தத்புருஷம், அபிகாரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்பவற்றுடன் அதோ முகம் என்ற ஆறாவது முகத்துடன் தோன்றினார். அந்த ஆறு முகங்களின் நெற்றிக்கண்ணிலிருந்தும் தோன்றிய ஆறு பொறிகள் உமையாளன்னையின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய பொறிகளுடன் இணைந்து பெரும் பிழம்பாய் உருவானது. இந்தப் பிழம்பிலிருந்து வெளிப்பட்ட வெப்பத்தினை தாள முடியாமல் அக்னி தேவனும் வாயுதேவனும் அதனை சாவனம் என்கின்ற இமயப்பொய்கையில் கொண்டு சேர்த்தனர். அப்பெய்கையில் ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகளாக உருவெடுத்தன. இந்த ஆறு குழந்தைகளும் கார்த்திகைப் பெண்களினால் பாலூட்டி, சீராட்டி வளர்க்கப்பட்டனர். பின்னர் உமையம்மை அந்த ஆறு குழந்தைகளையும் அரவணைக்க ஆறு முகங்களுடனும் பன்னிரண்டு கைகளுடனும் ஆறுமுகன் அவதரித்தான். விசாக நட்சத்திரத்தில் முருகன் தோன்றிய அந் நன்நாளே வைகாசி விசாகத் திருநாளாக இன்று அனைத்து இந்துக் கோயில்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆறு குழந்தைகளாகப் பிறந்த முருகனை சீராட்டி, பாலூட்டி,தாலாட்டி வளர்த்த காரணத்தினால் ஆறு பெண்களையும் கார்த்திகை நட்சத்திரமாகத் திகழும் படியாக முருகன் அருள்புரிந்தார். சரவணப் பொய்கையிலே முருகன் தோன்றியதால் சரவணன் என்கின்ற சிறப்புப் பெயரினைப் பெற்றான். சச்சிதானந்த வடிவானவன் முருகன். எனவே முருகனை அன்னை தந்தையுடன் கூடிய வடிவினனாக சோமஸ் கந்தவடிவில்வணங்குவது தான் சாலச்சிறந்தது என்கின்றனர். தன்னை நாடி ஓடி வந்து தங்கள் குறைகளைக் கூறும் பக்தர்களை முருகன் ஒரு போதும் கைவிட மாட்டார். எப்படியாகினும் தன்னை நாடி வந்தவர்களை காப்பதற்காக முருகப் பெருமான் நிகழ்த்திய அற்புதங்களை எழுத்தாலே அடக்க முடியாது. காலங்கள் கடந்து விட்ட போதிலும் தற்போதைய கலியுக காலத்திலே மாற்றங்கள் பல நிகழ்ந்து விட்ட போதிலும் தனது வற்றாத கருணையினால் பக்தர்களின் தீராத குறைகளைப் போக்கி அவர்களை உய்விப் பவன் முருகன். குறிப்பாக முருகனை நினைத்து கந்தசஷ்டி ஆறு நாட்களும் விரதமிருந்து அவனருள் பெறும் பக்தர்கள் எண்ணிலடங்கார். அருணகிரிநாதரை ரட்சித்து திருப்புகழைப் பாடவைத்த முருகன், ஔவைப்பாட்டிக்கு சுட்ட பழம் கொடுத்து அருளிய முத்தமிழ்காவலன் விசாக வேந்தனாகிய ஆறு முகக் கடவுளின் பிறந்த நாளே வைகாசி விசாகம் என வழ ங்கப்படுகின்றது.



இன்று இலங்கைத் திருநாட்டின் வடபகுதியில் உள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் மிகச் சிறப்பாக பொங்கல் வழிபாடுகள் நடைபெறுகின்றன. உலகத்து உயிர்கள் யாவும் இனிதே உய்யும் பொருட்டு லோகநாயகனே திருவிளையாடல் புரிந்து குழந்தையான தினமே வைகாசி விசாகம் இதன் பொருட்டே இது சைவப் பெருமக்களுக்கு மிகச் சிறந்த நான் நாளாகவிளங்குகின்றது. எனவே சோமாஸ்கந் தனாக அம்மையப்பருடன் வைகாசி விசாக நன்நாளில்முருகப்பெருமானை வழிபடுவது மிகுந்த மனநிறைவை அளிக்கக்கூடியதாக இருக்கும், வைகாசி விசாகத் திருநாளாகிய இன்று ஆறுமுகக் கடவுளைப் போற்றி சகல சௌபாக்கியங்களையும் அவனருளால் பெற்று வைகாசி விசாகத்தில் தாமும் முறைப்படி விரதமிருந்து முருகனின் திருவருளைப் பெறுவோமாக.

**கந்தையா கனகசபை**
**சண்டிலிப்பாய்**

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

எண் 1 (சூரியன்)
(ஆளும் வேந்தர்கள்)

முதலாம் எண் (ஒன்றாம் எண்) என்பது சூரியனைக் குறிக்கின்றது. சூரியக் குடும்பத்தின் பால்வீதி மண்டலத்தில் இயங்கும் அனைத்துக் கோள்களும் சூரியனை மையமாகக் கொண்டே சுழற்சியை மேற்கொண்டுள்ளன. ஒளி, வெப்பம், உயிர்ப்பு அனைத்துமே சூரியனின் செயல் பாட்டால் நமக்குக் கிடைக்கின்றது. முதலாம் எண் ஆதிக்கத்தில் பிறந்த 1,10,19,28 திகதிகளில் பிறந்தவர்கள் எந்த ஒரு மாதமாக இருந்தாலும் சூரிய ஆதிக்கத்தைக் கொண்டு இயங்குவார்கள்.

உலக ஜீவராசிகள் உயிர் வாழ சூரியனின் பங்களிப்பு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததோ அத்தகையபங்களிப்பு இந்த சூரிய ஆதிக்கத்தவரால் சமுதாயத்திற்குக் கிடைக்கும். எல்லா நாடுகளுக்கும் எல்லா காலத்திற்கும் மனித சமுதாயத்திற்கு இவர்களின் பங்களிப்பு மிகமுக்கியமானதாகவே இருக்கும். தங்களுடைய ஆளுமை குணத்தால் உலகிலுள்ள அனைத்து முக்கிய பொறுப்பு, தொழில் துறைகளில் தலைமை ஏற்று வழி நடத்துபவர்கள் இவர்கள்தான். உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் ஆட்சிபீட அரியாசனத்தில் அரசாட்சி செய்பவர்கள் இவர்கள்தான். மிகப் பிரகாசமாக ஒளிரும் சூரியனைப் போலவே ஒளிர்விடும் மூளை பலமிக்கவர்கள்.

புத்திசாலிகள், சாமர்த்தியம் நிறைந்த இவர்கள் சுய முயற்சியால் தலைமை வகித்து அனைவரின் பேராதரவுடன் மிகப்பெரிய பொறுப்புடன் நாட்டையும் கட்டிக்காக்கும் வல்லமையுடன் வெற்றிநடை போடக் கூடிய வல்லமையுடையவர்கள். சிறந்த, கம்பீரமான தோற்றத்துடன், பிரகாசமான முகபாவனைகளுடன், பிரபல்யமாக வாழவே ஆசைப் படுவார்கள்.

சுயகௌரவம் அதிகம் பார்ப்பார்கள். சிறந்த நிர்வாகத்திறன் படைத்தவர்கள். அனைத்து விதமான சகல சுகபோகங்களையும் குறைவில்லாமல் அனுபவிக்க கூடியவர்கள்.



அதற்காக எவ்வளவு செலவு ஆனாலும் கவலைப்பட மாட்டார்கள். பலபேரைக் கட்டிக்காக்கும் சிறந்த நிர்வாகம் தெரிந்தவர்கள். தன்னிடத்திலுள்ள நுணுக்கமான அறிவைப் பயன்படுத்தி சரியான நேரத்தில் செயலாக்கி விவேகமான செயலால் தடையில்லா வெற்றிகளைத் தொடர்ந்து பெறுவார்கள். செயலில் இறங்கும் முன்பு நன்கு சிந்தித்துப்பின் பொறுமையுடன் களமிறங்குவார்கள். செயலைத் தொடங்கிய பின்னர் அதிலிருந்து பின்வாங்கும் எண்ணமிருக்காது.

பிறருடைய எதிர்ப்புகளைக் கண்டு சிறிதும் அச்சம் கொள்ள மாட்டார்கள். துணிச்சல் மிகுந்த இவர்கள் எதையும் தைரியமாக எதிர் கொண்டு வெற்றிநடை போடுவார்கள்.

**விநாயகராமன்**

போடும் திட்டங்களை உட னுக்குடன் செயல்வடிவாக்கி விடுவார்கள். பிறருக்குத் தீங்கு செய்வது, வீண் வம்புகளை உருவாக்கி மற்றவர்களைத் துன்புறுத்துவது, வஞ்சகச் செயல்கள், பொய்பேசுதல், முன்னுக்குப்பின் முரணாகப் பேசுதல் போன்ற கெட்ட குணங்கள் இல்லாதவர்கள். எதிரிகளை சுலபமாக வெல்லும் சாமர்த்திய சாலிகள். தொழில் மற்றும் உத்தியோகத்தில் நீதி, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டப்பாடு என்று நடந்து கொள்வார்கள். சுறுசுறுப்புடன் செயலாற்றி அனைவரது கவனத்தையும் ஈர்ப்பவர்கள்.

பலருடைய பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெறுவார்கள். முதலாம் எண்ணுக்கு உட்பட்டவர்கள் மிகவும் நேர்மையானவர்கள். எந்தச் சூழ்நிலையிலும் மற்றவர்களுக்குத் துரோகம் செய்யமாட்டார்கள். அப்படித் துரோகம் செய்ய நேர்ந்தால் இவர்களின் மனம் அத்துரோகத்தையே ஓயாது நினைத்து வருந்தி இறுதியில் தங்களது துரோகத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டுவிடுவார்கள். மற்றவர்களின் தன்னம்பிக்கையும் ஊக்கமும் இவர்களால் வளர்க்கப்படுகிறது. எக்காரியத்தில் ஈடுபட்டாலும் நுணுக்கமாக செயற்பட்டு வெற்றி காண்பவர்கள். மனத்தில் தோன்றுவதை அப்படியே சொல்லி விட்டு மற்றவர்களின் வசைபாடுதலை வாங்கிக் கொள்வார்கள். இவர்கள் நட்பானாலும் பகையானாலும் வெளிப்படையாகக் காட்டிக் கொள்வார்கள்.

சுதந்திரமான உணர்ச்சிகளுக்குச் சொந்தக்காரர்கள் இவர்களே. யாருக்கும் கட்டுப்பட்டு நடக்க மாட்டார்கள். தமது மனதிற்குள் எண்ணியத்தைச் சட்டென்று செய்துவிடுவார்கள். மற்றவர்களை எடை போட்ட பின்னர்தான் அவர்களுடன் பழகுவார்கள். நேர்மையான வழியிலேயே பணம் சம்பாதிப்பார்கள்.

(தொடரும்)

# ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் குறைக்க ஆதரவில்லை

## சுதந்திரக்கட்சி திட்டவட்டம்

(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்திற்கான 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்க்ளை மேலும் குறைக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்காது என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்று முதலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே குரல் கொடுத்தது.

தற்போதைய ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தில் போதுமான அளவு அதிகாரங்களை குறைத்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முற்றாக ஒழித்து விட்டு, அந்த அதிகாரங்களை யாருக்கு பெற்றுக் கொடுக்க போகிறது என்பது பற்றிய தெளிவில்லை எனவும் இசுறு தேவப்பிரிய மேலும் தெரிவித்தார். (இ-7)


## சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசு 4 கோடி வழங்கியுள்ளது

(கொழும்பு)

முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக திடீர் அனர்த்த நிலையை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்ததாக இடர் முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனர்த்தத்தை எதிர்கொள்ளும் வகையில் கடந்த 21 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரையான இரண்டு வார காலப் பகுதி அனர்த்த வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.



சீரற்ற காலநிலையினால் சேதமடைந்த வீடுகள், மற்றும் வர்த்தக நிலையங்களை சீர் செய்வதற்காக பத்தாயிரம் ரூபாய் முற்பணமாக வழங்கப்படவுள்ளது.

இதற்காக நான்கு கோடி ரூபாய் நிதியை அரசாங்கம் வழங்கியிருப்பதாகவும் இடர் முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)



வடமராட்சி இமையாணன் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க காரியாலயத்தில் நேற்று கண்பரிசோதனையும் மருத்துவ முகாமும் நடைபெற்றது. இதில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுதோஸ்குமார் தலைமையிலான மருத்துவக் குழுவினர் பங்கேற்றனர். அதிகளவு பொதுமக்கள் இதில் கலந்து கொண்டு பலனடைந்தனர். (படங்கள்: மகாலிங்கம்)

## 7 சிறுவர்கள் உயிரிழப்பு

## கல்வி நடவடிக்கைகளை நிறுத்த கல்வி அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

தென் மாகாணத்தில் பரவி வரும் இன்புளுவன்ஸா வைரஸ் காய்ச்சல் காரணமாக மேலதிக நேர வகுப்புக்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை 2 வாரங்களுக்கு நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் நலன் கருதியே இந்தக்கோரிக்கையினை முன் வைப்பதாக தென் மாகாண கல்வி அமைச்சர் சந்திம ராசபுத்ர தெரிவித்துள்ளார்.

மேலும், இதுவரையில் இந்த தொற்றால் ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் அதேவேளை இது வரை 7 சிறுவர்கள் உயிரிழந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1425

Search for people, places and things | Nagendram Home

### சுமித்

எவ்வளவுதான் விட்டுக் கொடுத்து உண்மையாக வாழ்ந்தாலும்



ஒரு சிலர் எமது பாசத்தை புரிந்து கொள்வதில்லை

### மனிஷா

மற்றவர்களுக்கான நடிக்காமல் எனக்குப் பிடித்த மாதிரி வாழ்கிறேன்



அதற்குப் பெயர் திமிரு என்றால் எனக்கு அந்த திமிருதான் பிடிக்கும்...!

### மம்தா

மனைவி தாயாகப் போகின்றாள் என்ற செய்தியைக் கேட்டதும்



மனைவிக்கும் சேர்த்து தகப்பனாகிறவன்தான் உண்மையான கணவன்!

### சுப்ரியா

அம்மா தரும் சாப்பாட்டை பாராட்டத் தயங்காதிர்கள்



சிலருக்கு அம்மா இல்லை... சிலருக்கு சாப்பாடே இல்லை

### சுமதி

உண்மை அன்போடு இருக்கின்ற எந்த உறவும் தானாக உடைவதில்லை...



யாரோ ஒரு மூன்றாவது நபரால்தான் உடைக்கப்படுகின்றது...!

### சுக்ரன்




நீ கோடி கோடியாக சம்பாதித்தாலும் பெற்றதாயை அநாதை இல்லத்தில் சேர்த்தால் நீ உண்ணும் உணவு உணவல்ல அவர்களின் சாபம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# தூத்துக்குடி சம்பவத்தை மூடி மறைக்கவே ஜெயலலிதா பேசிய ஒலிப்பதிவு வெளியீடு

## ஸ்டாலின் குற்றச்சாட்டு



(சென்னை)

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவத்தை மூடிமறைக்கவே சிகிச்சையின்போது ஜெயலலிதா பேசிய ஒலிப்பதிவு வெளியிடப்பட்டுள்ளதாக மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார்.

தி.மு.க. செயல் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு,

**கேள்வி:-** மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஒலிப்பதிவு ஒன்று விசாரணை ஆணையத்தில் கொடுக்கப்பட்டு இருக்கிறதே?.

**பதில்:-** இந்த ஆட்சியாளர்கள் தூத்துக்குடியில் 13 பேரை சுட்டுத் தள்ளி, என்கவுண்ட்டர் செய்திருக்கிறார்கள். அதனால் மக்களிடத்தில் இந்த ஆட்சி மீது இன்னும் அதிகமான வெறுப்பு ஏற்பட்டு, இந்த ஆட்சி எப்போது ஒழியும் என்ற உணர்வோடு இருக்கின்ற நிலையில், மக்களை திசை திருப்பும் நோக்கத்துடன், ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகம்விசாரணை ஆணையத்தை பயன்படுத்துகிறார்கள் என்ற எண்ணம் வந்திருக்கிறது.

இவ்வளவு நாள் இல்லாமல் நேற்று (அதாவது நேற்று முன்தினம்) சிகிச்சையின் போது ஜெயலலிதா பேசிய ஒலிப்பதிவு வெளியிடப்பட்டுள்ளது. இந்த நேரம் இது வெளியிடப்பட்டதற்கு தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தை மூடி மறைக்க எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகத்தான் தோன்றுகிறது.

**கேள்வி:-** தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு தொடர்பாக, ஏற்கனவே டான்சி வழக்கில் ஆதரவாக செயற்பட்ட, ஓய்வு பெற்ற நீதிபதி அருணா தலைமையில்விசாரணை ஆணையகம் போட்டு இருக்கிறார்களே?

**பதில்:-** ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையகம் அமைக்கப்பட்டு இருப்பதே, இதை முழுமையாக மூடி மறைக்க வேண்டும், எந்த உண்மையும் வெளி வந்துவிடக்கூடாது, என்பதற்காக திட்டமிட்டு அமைத்திருக்கிறார்கள். நியாயமாக, விசாரணை ஆணையகம் அமைக்க வேண்டிய அவசியமே இல்லை. காரணம், ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் எடப்பாடி பழனிச்சாமி ஏற்கனவே, வன்முறையை தூண்டியதால் தற்காப்புக்காக இந்த முறையை கையாண்டதாக தெளிவாக சொல்லிவிட்டார். முதலமைச்சரே விசாரணை நடத்தி, தீர்ப்பு சொல்வது போல, அவரே சொல்லிவிட்டார். எனவே, விசாரணை நடத்த வேண்டிய அவசியமே இல்லை, இது ஒரு கபட நாடகம் மட்டுமே.

**கேள்வி:-** பிரதமர் பதவியேற்று 4 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில், 13 பேர் கொல்லப்பட்டதற்கு அனுதாபம் கூட தெரிவிக்கவில்லையே?.

**பதில்:-** இதுதான் அவருடைய மிகப்பெரிய சாதனை. தமிழ்நாடு இந்தியாவில் தான் இருக்கிறது. இங்கு இருக்கின்ற ஆட்சியாளர்கள் என்கவுண்ட்டர் நடத்தி, 13 பேரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். ஆனால், இது குறித்து 4 ஆண்டுகளாக மிகப்பெரிய பிரதமர் பொறுப்பில் இருக்கக்கூடிய மோடி அனுதாபம் கூட தெரிவிக்காமல் இருப்பதுதான் அவரது சாதனை.

**கேள்வி:-** முன்னாள் டி.ஜி.பி. அலெக்சாண்டர் துப்பாக்கிச்சூடு நடப்பதற்கு ஒருநாள் முன்பாக சென்று பல்வேறு ஏற்பாடுகளை செய்ததாக கூறப்படும் நிலையில், துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்டது யார் என்று கூட அரசு தெரிவிக்கவில்லையே?

**பதில்:-** அந்த ஸ்டெர்லைட் நிறுவனத்திடம் யார் மாமூல் வாங்கிக் கொண்டிருக்கிறாரோ, அவர்தான் துப்பாக்கிச்சூடு நடத்த உத்தர விட்டது. அதனால் தான் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் ஆகியோரை அங்கிருந்து மாற்றி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்தோம்.

ஆனால், அவர்கள் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல், பணியில் இருந்து இடைநீக்கம் கூட செய்யாமல், காத்திருக்கும் பட்டியலில் கூட வைக்காமல் உள்ளனர். அந்த பொலிஸ் கண்காணிப்பாளருக்கு விருது கொடுப்பது போல, பதவி உயர்வு கொடுப்பது போல, சென்னைக்கு மாற்றி இருப்பதில் இருந்தே நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

**கேள்வி:-** தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் நேற்று முன்தினம் ஆலையை மூட படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவித்து இருக்கிறாரே?

**பதில்:-** அமைச்சரவை கூடி ஒரு கொள்கை முடிவு எடுத்தால் மட்டுமே இதற்கு ஒரு தீர்வுகாண முடியும். அதைத்தான் தூத்துக்குடி மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழக மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

**கேள்வி:-** பா.ஜ.கவுக்கு ஸ்டெர்லைட் நிறுவனத்திடம் இருந்து நிதியுதவி வந்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளதே?

**பதில்:-** இது ஒன்றும் புதிதல்ல. இதுபோன்று பல இடங்களில் இருந்து நிதி வந்து கொண்டிருக்கிறது. தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் இருந்து நிதி கிடைத்ததால் தான் பிரதமர் மோடி இதுபற்றி வாய்திறக்காமல் இருக்கிறார் என்ற சந்தேகம் மக்களிடம் ஏற்பட்டு இருக்கிறது. இவ்வாறு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். (7)

# தூத்துக்குடி படுகொலையைக் கண்டித்து பொதுமக்கள் தொடர் போராட்டம்

## தமிழக முதல்வர் பழனிச்சாமி வீடு முற்றுகை



(சென்னை)

தூத்துக்குடி படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியின் வீட்டை முற்றுகையிட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

சென்னை கிரீன்வேஸ் பகுதியில், புரட்சிகர இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சினைப்பர் துப்பாக்கியைக் கொண்டு 13 பேரை எடப்பாடி அரசாங்கம் சுட்டுக்கொன்றுள்ளதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன் 'மக்களைச் சுட்டுக்கொன்ற எடப்பாடி பழனிச்சாமி பதவி விலக வேண்டும்' என்றும் அவர்கள் கோஷங்களையும் எழுப்பினர்.

அண்மையில் தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் தமிழக பொலிஸார் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர். அதில் 13 பேர் உயிரிழந்தனர். இதற்கு முதலமைச்சர் தலைமையிலான அரசே காரணமென தமிழகம் முழுவதும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாகவே இந்தப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (7)

# தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு குறித்த தமிழக அரசின் அறிக்கை மீது உள்துறை அமைச்சு கேள்வி எழுப்பும்

## பா.ஜனதா தலைவர் அமித்ஷா உறுதி



(புதுடில்லி)

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் குறித்து தமிழக அரசு அளித்த அறிக்கையின் மீது மத்திய உள்துறை அமைச்சு கேள்வி எழுப்பும் என்று, பா.ஜனதா தலைவர் அமித்ஷா தெரிவித்தார். மத்தியில் உள்ள பா.ஜனதா ஆட்சியின் 4 ஆண்டுகால செயற்பாடுகள் குறித்து அக்கட்சியின் தேசிய தலைவர் அமித்ஷா டில்லியிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது காவிரி பிரச்சினை, தூத்துக்குடி சம்பவம் குறித்து அவரிடம் சில கேள்விகள் எழுப்பப்பட்டன.

அந்த கேள்விகளுக்கு பதில் அளித்து அமித்ஷா தெரிவித்ததாவது.

காவிரி பிரச்சினை தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றின் உத்தரவுப்படி மத்திய அரசு 'ஸ்கீம்' (செயல் திட்டம்) தொடர்பாக அறிக்கை அளிக்க வேண்டிய நேரத்தில் கர்நாடகத்தில் தேர்தல் நடந்து கொண்டிருந்தது. காவிரி பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்தும் ஒன்றாக அறிக்கை அளிக்கவில்லை. கர்நாடகத்தில் அப்போது காங்கிரஸ் ஆட்சி. இதனால் அந்த மாநிலமும் உடனடியாக அறிக்கை அளிக்கவில்லை. எனவேதான் காவிரி விவகாரத்தில் தாமதம் ஏற்பட்டது. இந்த தாமதத்துக்கு கர்நாடக அரசே காரணம்.

தூத்துக்குடியை பொறுத்தவரை அங்கு துப்பாக்கி சூடு நடந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. இதை உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் கண்டித்து இருந்தார். பிரதமர் மோடியும் மிகவும் வேதனைப்பட்டார். சட்டம்-ஒழுங்கு மாநில அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினை ஆகும்.

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் குறித்து உள்துறை அமைச்சு தமிழக அரசிடம் அறிக்கை கேட்டது. அதன்படி தமிழக அரசு அறிக்கை அளித்து இருக்கிறது. அந்த அறிக்கையின் மீது, உள்துறை அமைச்சு கேள்வி எழுப்பும்.

இவ்வாறு அமித்ஷா தெரிவித்தார்.

மேலும், 'தமிழக அரசியலில் பா.ஜனதா என்ன நிலை எடுக்கப்போகிறது?' என்று கேட்டதற்கு, 'அதை ஒலிபெருக்கியில் சொல்ல முடியாது' என்று அமித்ஷா பதிலளித்தார். (7)

# ஸ்டெர்லைட் வேண்டுமா? வேண்டாமா? நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த வேண்டும்

## எதிர்ப்பு இயக்கம் வலியுறுத்து



(தூத்துக்குடி)

ஸ்டெர்லைட்ஆலை வேண்டுமா?, வேண்டாமா? என்பது குறித்து தூத்துக்குடி மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்என்று ஸ்டெர்லைட் எதிர்ப்பு இயக்கம் வலியுறுத்தி உள்ளது.

ஸ்டெர்லைட் எதிர்ப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் தமிழ் மாந்தன் நேற்று முன்தினம் மாலை தூத்துக்குடியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, அவர் தெரிவித்ததாவது,

தூத்துக்குடியில் கடந்த 22ஆம் திகதி நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தை அரசு திட்டமிட்டு நடத்தி உள்ளது. இதற்காகவே தூத்துக்குடியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த தடை உத்தரவை திரும்ப பெற வேண்டும். பதற்றமான சூழல் என்று பல இடங்களில் பொலிஸாரை நிறுத்தி வைத்து மக்களை துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும்.

துப்பாக்கி சூடு சம்பவத்தை விசாரிப்பதற்காக தமிழக அரசு, ஒரு நபர் கமிஷன் என்ற பெயரில் ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் நியமனத்தை திரும்ப பெற வேண்டும். அதற்கு மாற்றாக ஓய்வுபெற்ற நீதிபதிகள் சந்துரு, பரந்தாமன் ஆகியோரில் ஒருவரை நியமித்து விசாரணை நடத்த வேண்டும்.

துப்பாக்கி சூட்டில் இறந்தவர்களின் உடல்களை பிரேத பரிசோதனை செய்து உறவினர்களிடம் ஒப்படைக்க அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதற்கு மாற்றாக ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தில் இறந்தவர்களின் லட்சியமான ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடிவிட்டு, இறந்தவர்களின் உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இந்த துப்பாக்கி சூடு சம்பவத்திற்கு காரணமான தமிழக அரசு ஆட்சி பொறுப்பில் இருந்து விலக வேண்டும். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது கொலை குற்றத்திற்கான சதித்திட்டம் தீட்டியதாக வழக்குப்பதிவு செய்ய வேண்டும்.

ஸ்டெர்லைட் ஆலைக்கு குடிநீர் விநியோகம், மின்சாரம் துண்டிக்கப்படும் என்றும் ஸ்டெர்லைட் ஆலை இயங்கவில்லை என்றும் தமிழக அரசு அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். மறுபக்கம் மக்களின் விருப்பத்தோடு ஸ்டெர்லைட் ஆலையை தொடர்ந்து நடத்த விரும்புகிறோம். நீதிமன்றத்தில் இருந்தும், தமிழக அரசிடம் இருந்தும் அனுமதி கிடைத்தவுடன் மீண்டும் ஆலையை தொடங்குவோம் என்று வேதாந்தா நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

எனவே அரசும், ஆலை நிர்வாகமும் மக்களின் விருப்பம் என்னவென்று அறிய வேண்டும். அதாவது ஆலை தொடர்ந்து இயங்க வேண்டுமா?, மூடப்பட வேண்டுமா? என்பது குறித்து தூத்துக்குடி மக்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும்என்று தமிழக அரசை வலியுறுத்துகிறோம் எனத் தெரிவித்தார்.(7)

# வெளிநாடு

## கிம்ஜாங்- ட்ரம்ப் சந்திப்பு திட்டமிட்டபடி நடக்கும்

### தென்கொரிய ஜனாதிபதி நம்பிக்கை



(சியோல்)

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் - அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இடையிலான சந்திப்பு திட்டமிட்டபடி நடைபெறும்என தென்கொரியா ஜனாதிபதி மூன் ஜே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அணு ஆயுத விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் பகிரங்க மோதல் வெடித்தது. வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் கடந்த மார்ச் மாதம் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டு திரும்பிய நிலையில் இனி அணு ஆயுதங்கள் இல்லாத மண்டலமாக கொரிய தீபகற்பம் இருக்கும் என்று உறுதியளித்தார்.

இதன்பிறகு அமெரிக்காவுடன், வடகொரியா சமாதான போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியது. இரு நாடுகளும் நெருங்கி வரும் சூழலும் காணப்பட்டது.

இதைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆகியோர் ஜூன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூர் நகரில் சந்தித்து பேச முடிவு செய்யப்பட்டது.

ஆனால் கடந்த வியாழக்கிழமை ட்ரம்ப் இந்த சந்திப்பை திடீரென இரத்து செய்தார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், "உங்களை சிங்கப்பூரில் சந்திக்க ஆவலுடன்காத்திருந்தேன். ஆனால் உங்களது அண்மைய அறிக்கையில் கடும் கோபமும், வெளிப்படையான விரோத போக்கும் வெளிப்பட்டு இருப்பதால் தற்போதைய சந்திப்பு பொருத்தமானதாக இருக்காது" என்று தெரிவித்தார்.

அமெரிக்காவின் வேண்டுகோளைத் தொடர்ந்து தனது நாட்டின் அணு ஆயுத சோதனைக் கூடத்தை வடகொரியா முற்றிலுமாக தகர்த்த நிலையில் ட்ரம்ப் இவ்வாறு அறிவித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

எனினும், கிம் ஜாங் உன் அமெரிக்காவுடன் நடத்தவிருந்த பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்ள விரும்பவில்லை. "உங்களிடம் எப்போதும், எந்த வடிவத்திலும் பேச்சுவார்த்தை நடத்த வடகொரியா தயாராக இருக்கிறது" என்று கூறி கிம் ஜாங் உன் ஒருபடி கீழே இறங்கி வந்தார்.

அவருடைய வேண்டுகோளைத் தொடர்ந்து தென் கொரியா ட்ரம்ப்-கிம் ஜாங் உன் சந்திப்பை நடத்துவதற்கான முயற்சியை தொடர்ந்து மேற்கொண்டது.

தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தை கூட்டி இப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு முக்கிய முடிவுகளை எடுத்தார்.

இதையடுத்து, அமெரிக்க மற்றும் வடகொரிய நாடுகளின் உயர்மட்ட தூதரக அதிகாரிகள் இது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். திட்டமிட்டபடி சந்திப்பை நடத்துவதற்கான் முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள இரு தரப்பினும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் திடீரென மனமாற்றம் அடைந்தார். கிம் ஜாங் உன்னை திட்டமிட்டவாறு சந்தித்துப் பேச அவர் தற்போது முடிவு செய்துள்ளார்.

இதுபற்றி அவர் தனது டுவிட்டர் பதிவில், "கிம் ஜாங் உன்னை சந்திப்பது தொடர்பாக தொடர்ந்து ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகிறது.

எனவே ஜூன் 12 ஆம் திகதி திட்டமிட்டபடி எங்களது சந்திப்பு நடைபெற வாய்ப்புள்ளது. தேவைப்படும் பட்சத்தில் இந்த திகதிக்கு பின்னரும் கூட சந்திப்பை தள்ளி வைத்துக் கொள்ளலாம்" என்று கூறி இருந்தார்.

ட்ரம்ப் தனது டுவிட்டர் பதிவை வெளியிடும் முன்பாக தென்கொரியா ஜனாதிபதி மூன் ஜே இன்னும் ஒரு பதிவை வெளியிட்டார்.

அதில், பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான சூழல் மீண்டும் உருவாகி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று குறிப்பிட்டு இருந்தார்.

இதற்கிடையே, வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் நேற்று முன்தினம் தென்கொரியா ஜனாதிபதி மூன் ஜே-வை இரகசியமாக சந்தித்துப் பேசியதாக தெரியவந்துள்ளது. (7)

## வடகொரிய ஜனாதிபதியுடனான சந்திப்பை திட்டமிட்டபடி நடத்தத் தீர்மானம்

### அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் திடீர் மனமாற்றம்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வடகொரிய விவகாரத்தில் திடீரென்று மனமாற்றம் அடைந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வடகொரிய விவகாரத்தில் திடீரென்று மனமாற்றம் அடைந்தார். அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை அவர் திட்டமிட்டபடி சந்தித்து பேச முடிவு செய்து உள்ளார்.

அணு ஆயுத விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுக்கும், வடகொரியாவுக்கும் பகிரங்க மோதல் வெடித்தது. வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் கடந்த மார்ச் மாதம் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டு திரும்பிய நிலையில் இனி அணு ஆயுதங்கள் இல்லாத மண்டலமாக கொரிய தீபகற்பம் இருக்கும் என்று உறுதியளித்தார். இதன்பிறகு அமெரிக்காவுடன், வடகொரியா சமாதான போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியது. இரு நாடுகளும் நெருங்கி வரும் சூழலும் காணப்பட்டது.

இதைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை அடுத்த மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூர் நகரில் சந்தித்து பேச முடிவு செய்யப்பட்டது. ஆனால் கடந்த வியாழக்கிழமை ட்ரம்ப் இந்த சந்திப்பை திடீரென இரத்து செய்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "உங்களை சிங்கப்பூரில் சந்திக்க ஆவலுடன் காத்திருந்தேன். ஆனால் உங்களது அண்மைய அறிக்கையில் கடும் கோபமும், வெளிப்படையான விரோத போக்கும் வெளிப்பட்டு இருப்பதால் தற்போதைய சந்திப்பு பொருத்தமானதாக இருக்காது" என்று குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் வேண்டுகோளைத் தொடர்ந்து தனது நாட்டின் அணு ஆயுத சோதனைக் கூடத்தை வடகொரியா முற்றிலுமாக தகர்த்த நிலையில் ட்ரம்ப் இவ்வாறு அறிவித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

என்றபோதிலும், கிம் ஜாங் உன் அமெரிக்காவுடன் நடத்தவிருந்த பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்ள விரும்பவில்லை. "உங்களிடம் எப்போதும், எந்த வடிவத்திலும் பேச்சுவார்த்தை நடத்த வடகொரியா தயாராக இருக்கிறது" என்று கூறி கிம் ஜாங் உன் ஒரு படி கீழே இறங்கி வந்தார்.

அவருடைய வேண்டுகோளைத் தொடர்ந்து தென் கொரியா ட்ரம்ப்-கிம் ஜாங் உன் சந்திப்பை நடத்துவதற்கான முயற்சியை தொடர்ந்து மேற்கொண்டது. தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் கடந்த வியாழக்கிழமை உயர் நிலை ஆலோசனைக் கூட்டத்தை கூட்டி இப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு முக்கிய முடிவுகளை எடுத்தார்.

இதையடுத்து அமெரிக்க மற்றும் தென்கொரிய நாடுகளின் உயர்மட்ட தூதரக அதிகாரிகள் இது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

அப்போது திட்டமிட்டப்படி சந்திப்பை நடத்துவதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள இரு தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. (7)

## லொறி மற்றும் உழவு இயந்திரத்துடன் பேருந்து மோதி விபத்து; 48 பேர் பரிதாபமாகப் பலி!



(கம்போலா)

உகண்டாவின் வடக்கு பகுதியில் பேருந்து ஒன்று உழவு இயந்திரம் மற்றும் லொறியில் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளானதில் 16 குழந்தைகள் உட்பட 48 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

உகண்டாவில் வீதிப் போக்குவரத்து மிகவும் அபாயகரமானதாகும். அங்கு 2015 முதல் 2017ஆம் ஆண்டு வரையில் நடந்த வீதி விபத்துகளில் 9,500க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், அந்நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள கிர்யாடோங்கோ என்னும் பகுதியில் பேருந்து ஒன்று 30க்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது. அப்போது வீதியில் எதிரே உழவியந்திரம் ஒன்று விளக்கு இல்லாமல் வந்துள்ளது. இரவு நேரம் என்பதால் இருட்டில் அந்த உழவியந்திரத்துடன் பேருந்து மோதியுள்ளது.

அதோடு பின்னே பீர போத்தல்கள் ஏற்றி வந்த லொறி மீது அந்த பேருந்து மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 16 குழந்தைகள் உட்பட 48 பேர் மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் பலர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (7)

## ஏமனில் புயல் தாக்கம் இந்தியர் உட்பட 5பேர் பலி

(டுபாய்)

ஏமனில் சொகோட்ரா தீவை மெகுனு என்ற புயல் தாக்கியது. இதில் இந்தியர் உட்பட 5 பேர் பலியாகினர். மேலும் 40 பேரை காணவில்லை.

ஏமனில் சொகோட்ரா தீவை நேற்று முன்தினம் மெகுனு என்ற புயல் தாக்கியது.

இந்த தீவு தெற்கு ஏமனுக்கும், ஆபிரிக்காக் கண்டத்துக்கும் இடையே அமைந்துள்ளது.



புயல் கரையை கடக்கும் போது பயங்கரமாக காற்று வீசியது. பலத்த மழையும் கொட்டியது.

இதனால் சொகோட்ரா தீவில் உள்ள கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின.


கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. படகுகள் மூழ்கின. சொகோட்ரா தீவு பகுதியில் தகவல் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

புயல் தாக்குதலுக்கு 5 பேர் பலியாகினர். அவர்களில் ஒருவர் இந்தியர். மேலும் 40 பேரை காணவில்லை. அவர்கள் ஏமன், இந்தியா மற்றும் சூடான் நாடுகளை சேர்ந்தவர்கள் ஆவர்.

புயல் தாக்கியுள்ள சொகோட்ரா தீவில் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (7)




# அதிசய பூசணிக்காய்



(26.05.2018 தொடர்ச்சி...)

கத்தியால் அதை வெட்டினார். உள்ளிருந்து அழகான ஆடைகள், விலை உயர்ந்த மணிகள் கொட்டின.

அதற்குள் அவரது குழந்தைகள் ஜன்னலோரம் இருந்த மூன்றாவது பூசணிக்காயையும் கொண்டு வந்து கொடுக்க. நல்லதம்பி அதை வெட்டினார். அதற்குள் இருந்து பொற்காசுகள் கொட்டின. அதன் பிறகு அவரும் மனைவியும் குழந்தைகளும் நல்ல உணவு உண்டனர். விலை உயர்ந்த ஆடைகளை அணிந்தனர். மிகப் பெரிய வீடு ஒன்றைக் கட்டத் தொடங்கினார்கள். பெரிய பள்ளியில் படிக்க அவரது குழந்தைகள் சென்றார்கள். நல்லதம்பி தன்னைப் போல் ஊரில் கஷ்டப்பட்டவர்கள் அனைவருக்கும் உதவி செய்யத் தொடங்கினார்.

உழவர் சில நாட்களில் பெருஞ் செல்வனானதையும், தன்னை விட பெரும் புகழ் பெற்றதையும் அறிந்தார் பண்ணையார். உழவரின் வீட்டிற்கு வந்த அவர்,

டேய்! நல்லதம்பி! உனக்கு எங்கிருந்து இவ்வளவு செல்வம் கிடைத்தது? உண்மையைச் சொல்" என்று கேட்டார்.

அவரும் நடந்ததை எல்லாம் அப்படியே சொன்னார்.

பண்ணையார் தன் மாளிகைக்கு வந்தார் . தன்னை விட நல்லதம்பி பெரிய பணக்காரன் ஆனதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பொறாமை குணம் படைத்த அவர் எப்படியாவது மேலும் செல்வம் சேர்க்க வேண்டுமென்று நினைத்தார்.

வீட்டின் மேல் பகுதியில் குருவிக் கூடு ஒன்றை அவரே செய்தார். குருவிகள் அவரும் அதில் தங்கும் என்று எதிர்பார்த்தார். அவர் எண்ணம் ஈடேறியது. ஒரு குருவி வந்து அந்தக் கூட்டில் தங்கியது. நான்கு முட்டைகள் இட்டது. நான்கு குஞ்சுகள் வெளியே வந்தன.

பாம்பு வரவே இல்லை.

பொறுமை இழந்த அவர் ஊரில் இருந்த பாம்பாட்டியிடம் சொல்லி, பெரிய கருநாகபாம்பை வீட்டில் கொண்டு வந்து குருவிக் கூட்டிற்கு அருகில் விட்டார், அந்த பாம்போ பசியில் இருந்ததால் ஓடி போய் 3 குஞ்சுகளை சாப்பிட்டு, ஏப்பம் விட்டது.

"அய்யோ, நான் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்றாகிவிட்டதே என்று ஒரு பெரிய கம்புடன் குருவிக்கூட்டை நெருங்கினார். பாம்பை அடித்து நொறுக்கி வெளியே போட்டார். மீதி இருந்த ஒரு குஞ்சை காப்பாற்றியது போல் நடித்தார். வேளை தவறாமல் உணவு அளித்தார்.

சில நாட்களில் தாய் குருவியும், ஒரு குஞ்சும் கூட்டை விட்டு வெளியேறியது. "மூன்று விதைகளுடன் குருவி மீண்டும் வரும். அரசனை விட செல்வன் ஆவேன்" என்ற எண்ணத்தில் காத்திருந்தார் அவர்.

அவர் எதிர்பார்த்தபடியே கதவைத் தட்டியது குருவி.

அவரிடம் மூன்று விதைகளைத் தந்தது. "ஒன்றை வீட்டின் பின்புறம் நடு. இரண்டாவதை வீட்டின் முன்புறம் நடு. மூன்றாவதைக் கிணற்றோரம் நடு" என்று சொல்லி விட்டுப் பறந்து சென்றது.

எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்ந்தார் அவர்.

மூன்று தானியங்களையும் நட்டார். மறுநாளே மூன்று பெரிய பூசணிக் காய்கள் காய்த்து இருந்தன.

தோட்டத்தில் இருந்த பூசணிக்காயை வீட்டுக்குள் கொண்டு வந்தார்.

அதை வெட்டினார். அதற்குள் இருந்து எண்ணற்ற பூச்சிகள் வெளிவந்தன. அவர் வயலில் விளைந்திருந்த பயிர்களை எல்லாம் ஒரு நொடிக்குள் தின்று விட்டு மறைந்தன. வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டார் அவர்.

முன்புறத்தில் இருந்த இரண்டாவது பூசணிக்காயை வெட்டினார். அதற்குள் இருந்து தீ வெளிப்பட்டது அது அந்த மாளிகையை ஒரு நொடிக்குள் சாம்பல் ஆக்கியது. இத்தனை நடந்தும் அந்த பண்ணையார் திருந்தவில்லை.

அய்யோ எல்லாமே போய் விட்டதே, மூன்றாவது பூசணியிலாவது செல்வங்கள் இருக்கும் என்று எண்ணிய பண்ணையார்,

அதை வெட்ட, அதிலிருந்து கிளம்பிய பெரிய பூதம் அவரை தூக்கிக் கொண்டு பறந்தது. அதை அறிந்ததும் எல்லோரும் கொடிய பண்ணையார் ஒழிந்தார் என்று மகிழ்ந்தனர்.

பணம், பணம் என்று பேராசையால் ஏழை மக்களுக்கு துன்பம் உண்டாக்கிய பண்ணையார் இறந்து போன பின்பு, நல்லதம்பி ஊர் மக்களுக்கு நிறைய உதவிகள் செய்தார், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் கட்டிக் கொடுத்தார். அவரும் அவரது குடும்பத்தாரும் நல்ல பெயர் பெற்று விளங்கினார்கள்.

(முற்றும்)




- 1503-இசுக்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது. இது 10 ஆண்டுகளில் முறிந்தது.
- 1588-30,000 பேர்களுடன் ஸ்பானிய ஆர்மாடா எனப்படும் 130 எசுப்பானியக் கப்பல்கள் பிரித்தானியக் கடற்படையினருடன் மோதும் பொருட்டு ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனில் இருந்து ஆரம்பித்தன.
- 1737-வீனஸ் கோள் மேர்க்குரி கோளின் முன்னால் கடந்ததை ஜோன் பேவிஸ் என்ற வானியலாளர் அவதானித்தார்.
- 1905-சுசிமா என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் உருசியக் கடற்படையின் பால்ட்டிக் பிரிவு சப்பானியர்களால் அழிக்கப்பட்டது.
- 1815-சிங்கள-முஸ்லிம் கலவரம், 1915: இலங்கையின் கண்டியில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரம் ஆரம்பித்து ஜூன் 5 இல் முடிவுக்கு வந்தது.
- 1940-இரண்டாம் உலகப் போர்: பெல்ஜியம் செருமனியிடம் சரணடைந்தது.
- 1942-இரண்டாம் உலகப் போர்: நாசிகள் தமது சகாவான ரைன்ஹார்ட் ஹைட்ரிக் படுகொலை செய்யபட்டமைக்குப் பதிலடியாக செக்கோசிலவாக்கியாவில் 1800 பேரைப் படுகொலை செய்தனர்.
- 1958-இலங்கை இனக் கலவரம், 1958: இலங்கையின் ஆளுநர் சேர் ஒலிவர் குணதிலக்கா அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.
- 1964-பாலஸ்தீன விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- 1974-வட அயர்லாந்தில் அதிகாரப் பரவலாக்கம் குறித்த சன்னிங்டேல் உடன்பாடு முறிந்தது.
- 1987-மேற்கு செருமனியைச் சேர்ந்த 19-வயது மத்தாயஸ் றஸ்ட் சிறிய ரக விமானம் ஒன்றில் மொஸ்கோவில் செஞ்சதுக்கத்தில் தரையிறங்கினார். உடனடியாகக் கைது செய்யப்பட்ட இவர் 1988 ஒகஸ்ட் 13 இல் விடுவிக்கப்பட்டார்.
- 1998-பாகிஸ்தான் ஐந்து அணுவாயுதச் சோதனைகளை நிகழ்த்தியது. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சில நாடுகள் பாகிஸ்தானுக்கெதிராக பொருளாதாரத் தடைகளை அறிவித்தன.

### பிறப்புகள்

- 1865-மைசூர் வாசுதேவாச்சாரியார், கர்நாடக இசைப் பாடகர் (இ. 1961)
- 1883-வினாயக் தாமோதர் சாவர்க்கர், இந்தியக் கவிஞர், அரசியல்வாதி (இ. 1966)
- 1895-உருடோல்ப் மின்கோவ்சுகி, செருமானிய-அமெரிக்க வானியலாளர் (இ. 1976)
- 1908-இயான் பிளெமிங், ஆங்கிலேய ஊடகவியலாளர், எழுத்தாளர், ஜேம்சு பாண்டை உருவாக்கியவர் (இ. 1964)
- 1930-பிராங்க் டிரேக், அமெரிக்க வானியலாளர்
- 1946-சச்சிதானந்தம், இந்தியக் கவிஞர்
- 1969-ராப் ஃபோர்ட், கனடிய அரசியல்வாதி (இ. 2016)

### சிறப்பு நாள்

- குடியரசு நாள் (அசர்பைஜான், ஆர்மீனியா)
- கொடி நாள் (பிலிப்பைன்ஸ்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 95 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 80 | 140 | 70 |
| தக்காளி | 200 | 200 | 160 | 130 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 100 | 120 | 80 | 60 | 120 | 80 |
| கரட் | 200 | 250 | 200 | 80 | 300 | 120 |
| பூசணி | 40 | 20 | 40 | 20 | 40 | 40 |
| புடோல் | 120 | 100 | 80 | 60 | 120 | 100 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 170 | 130 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 85 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 200 | 180 | 140 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 60 | 160 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 | 60 | 100 | 60 |
| பயற்றங்காய் | 140 | 160 | 140 | 140 | 120 | 200 |
| லீக்ஸ் | 200 | 300 | 220 | 220 | 280 | 180 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 40 | 100 | 80 |
| கறிமிளகாய் | 140 | 200 | 160 | 60 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 | 180 | 200 | 250 |
| போஞ்சி | 250 | 300 | 200 | — | 240 | 220 |
| கத்தரித்தம்புள்ள | 80 | 60 | — | — | 80 | 110 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 40 | 30 | 50 | 50 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 200 | 250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 65 | 30-60 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 160 | — | 160 | 180 |
| வெங்காயப்பூ | 250 | 400 | 240 | — | 320 | 220 |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 40 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 10 | 30 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | — | — | 80 | 100 |

கோமாதா எங்கள் குல மாதா
குலமாதர் நலன் காக்கும் குலமாதா
புவி வாழ்வில் அருள் பொங்கும் திருமாதா
~ கவியரசு கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பசுவதைக்கு எதிரான போராட்டம் பரவலாக இடம்பெற வேண்டும்

பசுவதைக்கு எதிராகத் தென்மராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம், உண்ணாவிரதம் என்பன தமிழர் தாயகம் எங்கும் பரவலாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஈழத்தை சிவபூமி என்று போற்றியவர் திருமூலநாயனார். தென்னாடுடைய சிவன் உறைகின்ற இடம் ஈழமாக இருப்பதனால்தான் ஈழத்தை சிவபூமி என்றனர்.

இவ்வாறான புண்ணியபூமியில் பசுவதை என்ற பேச்சுக்கே இடமிருக்கக்கூடாது. இருந்தும் இந்து சமயத்தில் இருக்கக்கூடிய பலயீனங்கள் அந்தச் சமயத்துக்கு எதிராக என்ன நடந்தாலும் அதுகண்டு பேசாமல் இருத்தல் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டது.

எனினும் இப்போது பசுவதைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அகிம்சைவழிப் போராட்டங்கள் கண்டு மனம் மகிழ்வடைகிறது.

பசுவை கோமாதா என்று போற்றுகின்ற பண்பாட்டைக் கொண்டவர்கள் தமிழர்கள்.

பசு என்பது பெற்ற தாய்க்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுகின்ற தாய்.

மனுநீதி கண்ட சோழ மன்னனின் அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியை கன்றை இழந்த பசுவொன்று தன் கொம்பினால் இழுத்து அடித்தபோது;

அந்தத் தகவலை மன்னனுக்குக் கூறிய மந்திரி,

*... தளர்வுறும் இத்தாய் வந்து விளைந்த இத்தன்மை* என்றார்.

பசுவை தாய் என்று கூறுகின்ற சேக்கிழாரின் பாங்கு அற்புதமானது.

இந்த உலகில் ஐந்தறிவு படைத்த உயிரினத்தில் தன் கன்றுக்காக கண்ணீர் விட்டு அழுகின்ற தாய்மை பசுவிடம் மட்டுமே உண்டு.

புற்றரையில் கட்டி நிற்கின்ற பசு, துள்ளிக் குதிக்கும் தன் கன்றைப் பார்த்து இதயத்தால் ஏங்கி, எக்கிக் கொள்வதை பலரும் பார்த்திருப்பர். இந்தத் தாய்மையின் நெகிழ்வை வேறெங்கும் பார்க்க முடியாது.

தவிர, தன் கன்றுக்காக மடியில் சுரந்த பாலை, மனிதர்கள் நாம் கறவை செய்யும் போது, தன் தாய்மையின் இயல்பினால் கன்றுக்கென ஒரு பகுதிப் பாலை தன்னுள் ஒழித்துக் கொள்ளும் ஆற்றலையும் பசு கொண்டுள்ளது.

ஆக, வழிபாட்டுக்குரிய கோமாதாவை இந்த உலகம் முழுவதும் வணங்கித் தொழ வேண்டும்.

பசுவைத் தெய்வமாகப் போற்றுகின்றவர்கள் அகவாழ்விலும் புற வாழ்விலும் புண்ணியம் செய்கின்றவர்களாவர்.

ஒரு பசுவைக் கொல்வது ஒரு தாயைக் கொல்வதற்கு ஒப்பானது. எனவே இலங்கை முழுமையிலும் பசுவதை தடுக்கப்பட வேண்டும். அதற்கு முன்னேற்பாடாக தமிழர் தாயகத்தில் பசுவதையைத் தடுக்கும் பொருட்டு மாட்டிறைச்சிக்கடைகளை முழுமையாக இல்லாமல் செய்யும் ஒழுங்குகளை மேற்கொள்வது அவசியம்.

இதனைச் செய்வதற்காக, அகிம்சை வழிப் போராட்டங்கள் பரவலாக இடம்பெறுவது கட்டாயமானதாகும்.

பசுவதை நிறுத்தப்படும்போது எங்கள் இலங்கைத் திருநாடு பசுவதையின் பாவத்தில் இருந்து விமோசனம் அடைந்து கொள்ளும். கூடவே சாந்தியும் சமாதானமும் நிலைத்து சுபீட்சம் ஏற்படவும் வாய்ப்பு உருவாகும்.

# வடக்கில் விகாரைகள் அமைப்பதை விக்னேஸ்வரன் தடுக்க முடியாது - மைத்திரி

எந்த சமயமும் தீமையானவற்றை போதிப்பதில்லை.

ஆனால் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் வடக்கில் விகாரைகளை அமைக்கக் கூடாது எனத் தெரிவித்து வருவதாக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் மைத்திரி குணரத்ன தெரி வித்தார்.

சுகாதார மற்றும் பொருளாதார, செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் நிரோதா எனும் செயற்றிட்டத்தின் அறிமுக நிகழ்வு ஹற்றன் இலங்கை திறந்த பல்கலைக்கழக கிளைக் கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர இவ்வாறு தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "இவர்களின் நோக்கம் தமிழ் மக்களையும் சிங் கள மக்களையும் பிளவு படுத்துவதே. எந்த ஒரு சமயமாவது மக்களுக்கு தீமையானவற்றை போதிக்கவில்லை.

அது பௌத்தம் என்றாலும் சரி இந்து சமயம் என்றாலும் சரி இஸ்லாம் சமயம் என்றாலும் சரி எல்லா சமயங்களும் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கே போதிக்கின்றன.

அப்படி என்றால் ஏன் நாம் சமயத்தால் வேறுபட வேண்டும். இன்று சுமார் 3500 குடும்பங்கள்தான் காலியில் வாழ்கின்றனர். ஆனால் அங்கு நுழையும் போதே ஒரு இந்துக் கோயில் தான் இருக்கின்றது.

அதனை எவராவது உடைக்க முற்படுகிறார்களா? மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி மக்களைப் பிரிவினை செய்வதற்காகவே அரசியல்வாதிகள் நினைக்கின்றார்கள்.

அவ்வாறு செய்தால் தான் அவர்களுக்கு நாடாளுமன்றம் செல்லலாம். அதற்காக அவர்கள் மக்களை அடிமைகளாகவும் ஏழைகளாகவும் வைத்திருக்கின்றார்கள்.

சமயங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களைப் பிளவுபடுத்த நினைத்தால் அதற்கு ஒருபோதும் நாங்கள இடமளிக்கமாட்டோம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (மு)

## தூத்துக்குடி படுகொலை குறித்து யாழில் நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினரின் ஏற்பாட்டில் இயற்கை விரோத பெரு முதலாளியப் போக்கும் தூத்துக்குடிப் படுகொலைகளும் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை போயா தினத்தன்று பி.ப 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

ச.தனுஜன் தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் பிரதான கருத்துரையை தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் மூத்த இடதுசாரிச் சிந்தனையாளருமான க. தணிகாசலம் ஆற்றவுள்ளார்.

இக்கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். அரசியல், சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய, ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-7)

## துப்பாக்கியுடன் இருவர் கைது

ஹோமாகம - முல்லேகம பிரதேசத்தில் துப்பாக்கி ஒன்றுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களிடமிருந்து ஓர் கைத்துப்பாக்கியும் 760 மில்லி கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

அதுருகிரிய பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 23 மற்றும் 36 வயதான நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**அகங்காரத்தை அழிக்கும் வழிகள் என்ன?**

இந்த மனிதவுடல் இறைவனுக்குச் சேவை செய்வதற்காக இருப்பதாகும். தீய எண்ணங்களை யெல்லாம் விட்டொழித்து தூய மனதுடன் முடிந்தவரையில் இறைவனுக்குத் தொண்டுசெய்து வாழ்க்கை இன்பங்களை பெறுவது என்பதைத் தான் நாம் மனித ஜென்மத்தில் செய்யவேண்டும். அகங்காரம் கொண்டுள்ள மனது தீய எண்ணங்களால் ஆட்கொள்ளப்படும். அத்தகைய மனங்களால் இறைவனோடு தொடர்பு நிற்க இயலாது. நன்மையும் தீமையும் ஒன்றுடன் ஒன்று இணைந்து நிற்க இயலாது.

அவை இருளும் ஒளியும் போன்றதாகும். இருள் நீங்கினால்தான் வெளிச்சம் கிடைக்கும். அதேபோல் அகங்காரத்தை ஒழித்தால்தான் அறிவு உண்டாகும். அறிவு என்பது வெளிச்சமாகும். அறிவு மனதில் படிந்துள்ள இருளை அகற்றுகிறது. இருள் நீங்கினால் பரம ஜோதி கிடைக்கும்.

(தொடரும்)

## 500 பாலங்களை அமைக்க தீர்மானம்

(கொழும்பு)

500 கிராமிய பாலங்களை நிர்மாணிப்பதற்காக ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து நாட்டு கம்பனிகளுடனான ஒப்பந்தங்கள் இரண்டில் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு கைச்சாத்திட்டுள்ளது.

இத்திட்டத்திற்கமைய இங்கிலாந்து நிறுவனம் 250 பாலங்களை நிர்மாணிக்கவென 50 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களையும் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனம் 50 மில்லியன் யூரோக்களையும் வழங்கவுள்ளது.

இதனால் அடிப்படை வசதிகள் குறைந்த கிராமங்களில் அமைந்துள்ள பாலங்கள் புனர்நிர்மாணம் செய்தல் அல்லது மீள நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில சிதம்பரபுரம், கற்குளம், ஆசிகுளம், ஆச்சிபுரம், எல்லப்பர் மருதங்குளம், கூமரசங்குளம், குடாகச்ச கொடிய, மகா மயிலங்குளம், துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## திருவிளையாடல்



இயக்க மண்டலத்திலுள்ள எல்லாவற்றையும் சூழ்ந்தழுத்திக் கொண்டிருக்கும் தூய இறைவெளிதான் இருப்பு மண்டலம். தூய வெளியெனும் பிரம்ம நிலை தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் பேராற்றலால், எந்த ஒன்றையும், மற்ற ஒன்றிலிருந்து பிரிந்து போகாமல், சூழ்ந்தழுத்திக் கொண்டிருக்கின்றது. ஆயினும், ஒவ்வொரு நுண்ணணுவும் தனது தற்சுழற்சி விரைவாலும், யோகான் எனும் நுண்ணணுவின் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் எனும் காந்த தன்மாற்ற அலைகளாலும் நுண்ணணுக்களிடையே குறிப்பிட்ட அளவில் தொலைவு அமைந்திருக்கின்றது. அது காக்கவும் படுகின்றது.

எனவே, நுண்ணணுவானாலும் சரி, அண்டங்கள் ஆயினும் சரி, அவற்றில் எழுந்து இயங்கும் அலையின் அழுத்தத்திற்கு மேலாக எதுவும் விலகிப் போகாமல் காப்பது சூழ்ந்தழுத்தும் அனைத்தியக்க அருட்பேராற்றலே. அதே போன்று எந்த நுண்ணணுவோ, அண்டங்களோ - அவற்றிலிருந்து வெளியாகும் அலைகளின் தள்ளும் ஆற்றலுக்கு மேல் விலகவும் முடியாது. இந்த நியதி தான் வான்காந்த ஆற்றலின் விளைவு.

மேலும், நுண்ணணுக்களாகிய யோகான்கள் இடையிலும், கோள்களின் இடையிலும், கோள்களின் உட்புறம் உள்ள இறைவெளியிலும் கணக்கிட முடியாத அளவில் யோகான் நுண்ணணுக்கள் தோன்றிக் கொண்டேயும், அவை தன்மாற்றங்களை அடைந்து கொண்டேயும் இருக்கும் விந்தைகளே வான்காந்தம் எனும் மறைபொருள் பேரியக்க மண்டலத்தில் ஆற்றும் திருவிளையாடல்கள். இயற்கையின் இயல்பாக நடைபெறும் தெய்வீக நிகழ்ச்சிகளைத் திருவிளையாடல் என்று வழங்குகிறோம்.

# வடமாகாண விளையாட்டு விழாவில் முதல் நாளில் நான்கு சாதனைகள் முறியடிப்பு



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வடமாகாண மாவட்டங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 26 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகியது.

ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும், வீர, வீராங்கனைகளுக்கிடையில் தடகள மற்றும் மைதான நிகழ்வுகள் நடைபெற்றன.


26 ஆம் திகதி நடைபெற்ற போட்டிகளில், முன்னைய ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்டிருந்த நான்கு சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

ஆண்களுக்கான உயரம் பாய்தலில் மன்னாரைச் சேர்ந்த பி. நவீன்ராஜ் 1.91 மீற்றர் உயரம் பாய்ந்து, ஏற்கனவே இருந்த சாதனையை 1.88 மீற்றர் உயரம் என்ற சாதனையை தகர்த்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.யதுர்சனும், அதே உயரத்தைத் தாண்டி சாதனையுடன் இரண்டாமிடத்தைப் பெற்றார்.

ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டலில், மன்னாரைச் சேர்ந்த ஏ.அபிக்சன் 56.5 செக்கன்களில் தாண்டி முன்னர் இருந்த 57.70 செக்கன்கள் என்ற சாதனையை தகர்த்து, புதிய சாதனை நிலைநாட்டினார்.

ஆண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் மன்னார் மாவட்ட அஞ்சலோட்ட அணி, 43.7 செக்கன்களில் ஓடி முடித்து, முன்னர் இருந்த 44.10 என்ற சாதனையை தகர்த்தது.

அதேபோல்பெண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் மன்னார் மாவட்ட அஞ்சலோட்ட அணி, 53.4 செக்கன்களில் ஓடி, முன்னர் இருந்த 54.30 செக்கன்கள் என்ற சாதனையை தகர்த்தனர்.



முதல் நாளில் நடைபெற்று முடிந்த போட்டிகள்

ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் - வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கிந்துசன் முதலிடத்தையும், யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஜெயந்தன் இரண்டாமிடத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எல்.தவகரன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான முப்பாய்தல் - யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.டெனீஸன் முதலிடத்தையும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கோகுலன் இரண்டாமிடத்தையும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ஜேசுதாஸன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான தட்டெறிதல் - வவு னியா மாவட்டத் தைச் சேர்ந்த ஆர். தர்சிகா முதலிடத் தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெ.சர்மிளா முதலிடத்தையும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.சுஜீபா மூன்றா மிடத்தையும் பெற் றனர்.

ஆண்களுக்கான குண்டெறிதல் - மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.எம்.றெஜினோல்ட் சூசை முதலிடத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வி.விதுர்சன் இரண்டாமிடத்தையும், வவுனியாவைச் சேர்ந்த சி.ஜெனோஜன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம் - முதல் மூன்று இடங்களையும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முறையே எஸ்.ஹேமா, எஸ்.விதுசா மற்றும் எஸ்.டிலக்ஸனா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்

பெண்களுக்கான நீளம் பாய தல் - கிளிநொச்சியைச் சேர்ந்த ரி.பவித்திரா முதலிடத்தையும், வவுனியாவைச் சேர்ந்த டி.பவித்திரா இரண்டாமிடத்தையும், மன்னாரைச் சேர்ந்த ஜே.அபிசா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான உயரம் பாய்தல் - மன்னாரைச் சேர்ந்த பி.நவீன்ராஜ் 1.91 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனையுடன் தங்கப் பதக்கம் பெற்றார். இரண்டாமிட த்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.யதுர்சனும், மூன்றாமிடத்தை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சரத்பாபுவும் பெற்றுக் கொண்டார்.

பெண்களுக்கான உயரம் பாய்தல் - கிளிநொச்சியை சேர்ந்த ரி.பவித்திரா முதலிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே. நிரோசினி இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.ஹெரீனா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான குண்டெறிதல் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெ.சர்மிளா முதலிடத்தையும், வவுனியாவைச் சேர்ந்த ஆர். தர்சிகா இரண்டாமிடத்தையும், அதே மாவட்டத்தைச் சேர்ந்த என்.ரிசாந்தினி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் - மன்னாரைச் சேர்ந்த ஏ.அபிக்சன் புதிய சாதனையுடன் முதலிடத்தைப் பெற்றார். முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ்.விதுசன் இரண்டாமிடத்தையும், மன்னாரைச் சேர்ந்த என். நாசாத்கன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் - கிளிநொச்சியைச் சேர்ந்த யு.குயின்ஸி முதலிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என்.சிவானுஜா இர்ண்டா மிடத்தையும், மன்னாரைச் சேர்ந்த ஏ.அனற்மேரி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

200 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டம் - மன்னாரைச் சேர்ந்த எம்.பிறேம்தாஸ் முதலிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ரி.விதுசன் இரண்டாமிடத்தையும், மன்னாரைச் சேர்ந்த ஜே.எஸ்.ராஜன் பெர்ணான்டோ மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

200 மீற்றர் பெண்களுக்கான ஓட்டம் - மன்னாரைச் சேர்ந்த ஏ.சௌமியா பெர்னாண்டோ முதலிடத்தையும், மன்னாரைச் சேர்ந்த ஜே.அபிசா இரண்டாமிடத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.மேரி தர்சிகா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான ஈட்டி எறிதல் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். செந்தூரன் முதலிடத்தையும், வவுனியாவைச் சேர்ந்த எம்.சஜீவன் இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்.நீகன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டம் - முல்லைத்தீவைச் சேர்ந்த ஆர்.கெவின் முதலிடத்தையும், மன்னாரைச் சேர்ந்த என். கிளாஸ்ரன் மசறிங் இரண்டாமிடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.சியாந்த் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டம் - கிளிநொச்சியைச் சேர்ந்த ரி.டன்சிகா முதலிடத்தையும், முல்லைத்தீவைச் சேர்ந்த எஸ். டிலக்சனா இரண்டாமிடத்தையும், மன்னாரைச் சேர்ந்த கே.விழியரசி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் மன்னார் மாவட்ட அஞ்சலோட்ட அணி, 43.7 செக்கன்களில் ஓடி புதிய சாதனையுடன் முதலிடத்தையும், முல்லைத்தீவு மாவட்ட அணி இரண்டாமிடத்தையும், கிளிநொச்சி மாவட்ட அணி மூன்றா மிடத்தையும் பெற்றன.

பெண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் மன்னார் மாவட்ட அஞ்சலோட்ட அணி முதலிடத்தையும், யாழ்ப்பாண மாவட்ட அஞ்சலோட்ட அணி இரண்டாமிடத்தையும், கிளிநொச்சி மாவட்ட அஞ்சலோட்ட அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (5-26)

# சூதாட்டம் நடைபெற்றதா? விசாரணைக்கு ஐ.சி.சி. பணிப்பு

இலங்கையின் காலி மைதான பராமரிப்பாளர்கள் இலஞ்சம் பெற்றுக் கொண்டு, ஆடுகளத்தை மாற்றியமைக்க ஒப்புக் கொண்டதாக ஒரு பிரபல தனியார் தொலைக் காட்சி வெளியிட்டுள்ள ஆவணப் படத்தில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஐ.சி.சி. முடிவெடுத்துள்ளது. இதுகுறித்து ஐ.சி.சி. வெளியிட்டுள்ள அறிக்கையில், ஊழல் குற்றச்சாட்டு குறித்து உரிய விசாரணை நடத்தப்படும். குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டால் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். உறுப்பு நாடுகளின் ஊழல் தடுப்பு அமைப்புகளுடன் இணைந்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது என கூறியுள்ளது.

கடந்த 2016இல் அவுஸ்திரேலியா - இலங்கை அணிகள் மோதிய 2வது டெஸ்ட் போட்டி காலியில் நடைபெற்றது. அப்போது மைதான பராமரிப்பாளர்களுக்கு லஞ்சமாக ஒரு பெரிய தொகை, ஸ்பாட் பிக்ஸிங் செய்யும் கும்பலால் வழங்கப்பட்டிருப்பதாக அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளது. அந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 106 ஓட்டங்களிலும், 2 ஆவது இன்னிங்ஸில் 183 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தது. அப்போட்டியில் இலங்கை அணி 229 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் இந்தியா - இலங்கை அணிகள் இடையில் 2016 ஆம் ஆண்டு காலி மைதானத்தில் நடந்த போட்டி குறித்தும் விசாரிக்கப்பட உள்ளது.

இது குறித்து விரிவான அறிக்கை வெளியிடப்படும் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (ஞ)

# மிகச் சிறந்த சுழல்பந்து வீச்சாளர் ரசித்கானை பாராட்டிய சச்சின்



ஆப்கானிஸ்தானை சேர்ந்த சுழற்பந்து வீரர் ரஷீத் கான். ஐ.பி.எல். போட்டியில் ஐதராபாத் அணிக்காக ஆடி வருகிறார். அவர் இதுவரை 21 விக்கெட் கைப்பற்றினார்.

இந்த நிலையில் ரஷீத் கான் 20 ஓவரில் உலகின் சிறந்த சுழற்பந்து வீரர் என்று கிரிக்கெட் ஜாம்பவான் டெண்டுல்கர் பாராட்டியுள்ளார். இது தொடர்பாக டுவிட்டரில் அவர் கூறியதாவது,

19 வயதான ரஷீத்கான் சிறந்த சுழற்பந்து வீரர் என்று எப்போதும் நினைப்பேன். ஆனால் 20 ஓவர் போட்டிகளில் அவர் தான் உலகின் தலை சிறந்த சுழற்பந்து வீரர் என்று சொல்வதில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை. அவரிடம் துடுப்பாட்ட திறமையும் இருக்கிறது கவனித்துக் கொள்ளவும். இவ்வாறு டெண்டுல்கர் கூறியுள்ளார். (ஞ)

விக்ரோறியன்ஸ் விளையாட்டு கழகத்தின் வி.பி.எல். துடுப்பாட்ட போட்டி நேற்றைய தினம் கோலாகலமாக ஆரம்பமானது. லீக் முறையிலான இப்போட்டியில் மூன்று அணிகள் பங்கேற்கின்றன. விக்ரோறியன்ஸ் ரைகஸ், விக்ரோறியன்ஸ் சலேன்ஜஸ், விக்ரோறியன்ஸ் ஈகிள்ஸ் ஆகிய அணிகள் உள்ளடங்கி உள்ளன. சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டு கழகத்தின் வருடாந்தம் நடைபெறும் இப்போட்டியில் சென்ற வருடம் விக்ரோறியன்ஸ் ரைகேஸ் சம்பியன் ஆனது குறிப்பிடத்தக்கது. (க)



## ஜே.வி.பி முன்வைத்த...

கள் குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி முன்வைத்துள்ள யோசனைகள் புதிய அரசமைப்பு உருவாக்கல் தொடர்பான இடைக்கால அறிக்கையை கருத்தில் எடுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஜே.வி.பியின் யோசனைகள் சாதகமானவை. அரசமைப்பின் 19-வது திருத்தத்தின் மூலம் சாதிக்க முடியாதவற்றை இந்த யோசனைகளால் சாதிக்க முடிகின்றன. 2015 ஜனவரி 8-ம் திகதி மக்கள் வெளியிட்ட எதிர்பார்ப்பை 19 ஆவது திருத்தத்தின் மூலம் பூர்த்தி செய்ய முடியவில்லை, அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இல்லாமையே இதற்கு காரணம்.

இதேவேளை நான் பிரதிநிதித்துவம் செய்யும் இடதுசாரி அணியினர் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதையே இன்னமும் விரும்புகின்றனர். 20-வது திருத்தத்தின் மூலம் ஜே.வி.பியால் மாத்திரம் தனியாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்க முடியாது. இரு முக்கிய கட்சிகளும் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை இருபதாவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கத்தின் பிரதானி என்ற அந்தஸ்தை ஜனாதிபதி இழந்து விடுவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், சிறைக் கைதிகளுக்கு விடுதலை வழங்கும் அதிகாரமும் ஜனாதிபதியிடமிருந்து நீக்கப்படுகின்றது.

இதன்படி, ஜனாதிபதி பொதுத் தேர்தலினால் தெரிவு செய்யப்படாமல், பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படுவார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடுடையவராக மாறுகின்றார். புதிய பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு நான்கு வாரங்களுக்குள் பெரும்பான்மை வாக்குகளினால் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவு இடம்பெறும். இதற்காக இரகசிய வாக்கெடுப்பும் பயன்படுத்த முடியும்.

20ஆவது திருத்தத்தின்படி, பிரதமரின் ஆலோசனையின் படி, அமைச்சரவையை அமைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

பாராளுமன்ற கூட்டத்தொடரை முடித்து வைக்கும் அதிகாரம், பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் என்பன ஜனாதிபதியிடமிருந்து நீக்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் அரசியல் கட்சியில் எந்தப் பொறுப்பையும் வகிக்காதவராகவும், எந்தவொரு அரசியல் கட்சியிலும் உறுப்புரிமை பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

வெளிநாட்டு தூதுவர்கள், உயர் ஸ்தானிகள் நியமனத்தின் போதும் வெளிநாட்டு தூதுக் குழுக்கள் அமைக்கும் போதும் பிரதமரினால் அமைக்கப்படும் அமைச்சரவையின் ஆலோசனைப்படி அமைய வேண்டும்.

பாராளுமன்றத்தில் அதிகமான ஆசனங்களைப் பெற்ற கட்சியிலிருந்தே பிரதமர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (மு)

## கிளிநொச்சியில்...

நேற்று பிற்பகல் கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக விசேட அதிரடிப் படைப்பிரிவின் கிளிநொச்சி பொறுப்பதிகாரி விஜயரத்ன தலைமையிலான குழுவினர் குறித்த பகுதியை சுற்றிவளைப்பு செய்த பொழுதே சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் 1.6 கிலோகிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கிளிநொச்சியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நபர் என அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்

மேலும் சான்றுப்பொருட்களும் சந்தேகநபரும் நாளை கிளிநொச்சிப் பொலிஸார் ஊடாக கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். (மு-3'12,15)

## மழையுடனான காலநிலை தொடர்ந்தும் நீடிக்கும்

(கொழும்பு)

நாட்டின் தென்மேற்கு பகுதியில் காணப்படும் மழையுடனான காலநிலை நீடிக்கக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக திணைக்களம் நேற்று காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில், நாடு முழுவதும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசுமென எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல், தென், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

வட மாகாணத்தில் காலை வேளையிலும் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரகமுவ, மேல், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திணைக்களம் தெரிவித்துள்ளது. (மு)

## மாடுகளை ஏற்றிச்செல்ல முற்பட்ட இருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, சந்தனமடுஆறு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மூன்று மாடுகளை ஏற்றிச் செல்ல முற்பட்ட இருவரை ஏறாவூர்ப் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக் கிழமை கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து மாடுகளையும் அதனை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்திய சிறிய ரக வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த மாடுகள் இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்டமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஏறாவூர்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (மு)

## ஏழாலை கண்ணகையின் விசாகப் பொங்கல்

(ஏழாலை)

அருள்மிகு ஏழாலை கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தின் வைகாசி விசாகப் பொங்கல் பெருவிழா இன்று திங்கட்கிழமை இரவு இடம் பெற இருக்கின்றது. இரவு 7.30 தொடக்கம் 9.30 மணிவரை அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை கலாசார நிகழ்வுகள் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து 9.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகமும் வட மாகாணத்தின் முன்னணி நாடகக் கலைஞர்களும் இணைந்து வழங்கும் கலாபூசணம் வே.சிதம்பரநாதன் அண்ணாவியார் இயற்றிய சத்தியவான் சாவித்திரி என்னும் முப்பரிமாண புராண சிந்துநடைக் காவியமும் நடைபெற இருப்பதாக தேவஸ்தான சபை அறிவித்துள்ளது. (மு-72)

## வாக்குறுதியை மீறினாரா ரணில்?

# மன்னார் மாவட்ட செயலராக மீண்டும் பெரும்பான்மை இனத்தவர்

(மன்னார்)

மன்னார் மாவட்டச் செயலராக மீண்டும் சிங்களவர் ஒருவரையே நியமிக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கும் தமிழர்களை மாவட்டச் செயலர்களாக நியமிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலும் அதனை மீறி சிங்களவர் ஒருவரே மன்னார் மாவட்டத்தின் மாவட்டச் செயலராகத் தற்போது சிபார்சு செய்யப்பட்டுள்ளார். இதுதவிர, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் கிளிநொச்சி மாவட்டச் செயலராகவும், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் அமைச்சு ஒன்றின் செயலாளராகவும் நியமிக்கப்பட பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (மு)

# சீரற்ற காலநிலையால் உயிரிழப்பு 21 ஆக உயர்வு

## 5 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நீடிக்கும் சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23ஆக அதிகரித்துள்ளது. அத்தோடு, ஒரு இலட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையின் பிரகாரம், கம்பஹா மாவட்டத்தில் 11,897 குடும்பங்களைச் சேர்ந்த 47 ஆயிரத்து 349 பேரும், புத்தளத்தில் 10 ஆயிரத்து 48 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 17 பேரும், இரத்தினபுரியில் 8,850 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 475 பேரும், கொழும்பில் 4779 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 885 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், களுத்துறையில் 6147 பேரும், கேகாலையில் 5723 பேரும், காலியில் 1954 பேரும், நுவரெலியாவில் 1719 பேரும், கண்டியில் 1543 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மொத்தமாக 43 ஆயிரத்து 604 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 228 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 23 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 118 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள இடர் முகாமைத்துவ மத்திய நிலையம், 5,073 வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நுவரெலியா, இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை மற்றும் காலி முதலான ஐந்து மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் தொடர்ந்தும் அமுலாவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

# அரசிலிருந்து வெளியேறிய 16 பேரால் கூட்டு எதிரணிக்குள் முறுகல்நிலை-மகிந்த சமரசம்!

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 பேருடனும் இணைந்து அரசியல் நடத்துவதாக இருந்தால் அவர்களது அரசியல் போக்கினைத் தெளிவாக முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும் என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பதிரன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

16 பேரும் பொதுஜன பெரமுனவுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஓரிரு நாட்களில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என அறிவிக்க முனைவது பிரச்சினைக்குரிய ஒன்றாகும்.

யாருடனாவது இணைந்து இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் என்ற பொதுவான கொள்கையில் நாம் செயற்படுகின்றோம் என்பதே உண்மை. ஆனால் அதற்கு அப்பால் சென்று எம்மிடையே குழப்பத்தை ஏற்படுத்தி, எம்மிடையே பிரிவினையை உருவாக்க யாருக்கும் இடமளிக்க முடியாது.

இவ்வாறான ஒரு நிலைப்பாட்டில் தான் அரசாங்கத்திலிருந்து விலகிய 16 பேரும் செயற்படுகின்றார்களா? என்ற சந்தேகம் எமக்குள் எழுந்துள்ளது. அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருக்கின்றனர். ஒருவர் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன எனவும், மற்றொருவர் கோத்தபாய ராஜபக்ஷ என்கிறார்.

மேலும் இன்னுமொருவர் சமல் ராஜபக்ஷ தான் ஜனாதிபதி வேட்பாளர் எனக் கூறுகின்றார். இந்த அறிவிப்புக்கள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (மு)

# மைத்திரி அரசாங்கம் அதிகளவு கடன்களை வெளிநாடுகளிலிருந்து பெற்றுள்ளது-ஹெகலிய

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பெற்ற வெளிநாட்டு கடன்களை மீள் செலுத்துவதாக கூறிய தேசிய அரசாங்கமே தற்போது கடந்த கால அரசாங்கத்தினை விட அதிகளவான கடன்களை வெளிநாடுகளிலிருந்து பெற்றுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் 'இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த அரசாங்கத்தின் கடன்களை மீள் செலுத்தி நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதாக கூறிய தேசிய அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் பொது மக்கள் தொடர்ந்தும் பொருளாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கடந்த அரசாங்கம் வெளிநாட்டு கடன்களை பெற்றிருந்தாலும் பல துறைகளிலும் அபிவிருத்தி நிர்மாணப்பணிகளை முன்னெடுத்தது. இந் நிலையில் கடந்த அரசாங்கத்தினை விட தேசிய அரசாங்கமே 2015 தொடக்கம் 2018 வரையிலான காலப்பகுதியில் அதிக வெளிநாட்டு கடன்களை பெற்றுள்ளது.

எனவே முறையற்ற நிர்வாகத்தினை மேற்கொண்டு வரும் தேசிய அரசாங்கமானது தமது குறைகளை மறைப்பதற்காக தொடர்ந்தும் கடந்த அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி வருகின்றது என்றார். (மு)

## அடுத்த மாதம்...

ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் நடாத்துவதற்கு கூட்டு எதிர்க் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஆரம்ப கட்டமாக தெற்கிலிருந்து கொழும்பு வரை பாத யாத்திரையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் நுகேகொடையில் பாரிய எதிர்ப்புக் கூட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த மாதம் முதல் திங்கட்கிழமையும் வெள்ளிக்கிழமையும் நாடு முழுவதும் 200 நகரங்களில் பாரிய ஆர்ப்பாட்டங்களை தொடராக நடாத்தவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு)

## துப்பாக்கிச் சூட்...

இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற 58 வயதான கே.கந்தையா என தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தூத்துக்குடி சிலோன் காலனியில் தனது குடும்பத்தினருடன் வசித்துவந்துள்ளார்.

இவர் ஸ்டெர்லைட் ஆலைஎதிர்ப்பு போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்ததுடன், தனி மனித உரிமை செயற்பாட்டாளராகவும் செயற்பட்டுவந்துள்ளார்.

தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தகைமை அடிப்படையில்தொழில் வழங்குவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

எனினும், கந்தையாவின் மகன் மன வளர்ச்சி குன்றியவர் என்பதனால் அவரது பாதுகாவலர் ஒருவருக்கு தொழில் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (மு)

## 79,80களில் இலங்கையுடனான உறவுகள்...

காணப்பட்ட உறவுகள் குறித்த கோப்புகளும் உள்ளடங்குவதாக பிரிஜ (PTI) செய்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய பொது ஆவணங்கள் சட்டத்தின்படி, அரச திணைக்களங்கள், வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ள போதிலும், இந்த ஆவணங்கள் பாதுகாக்கத் தேவையற்றவை என பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய செயலகம் தெரிவித்திருந்தது.

இலங்கை தொடர்பிலான 195 கோப்புகள் அழிக்கப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ள அந்தச் செயலகம், குறித்த கோப்புகள் 1978க்கும் 1980க்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரியது எனவும் குறிப்பிட்டுள்ளது.

எனினும் அந்த கோப்புகள் எங்கு? யாரால்? எப்படி அழிக்கப்பட்டன என்பது தொடர்பிலான தகவல்களை வெளியிடப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில், இலங்கை - இந்திய உறவுகள் 1979 மற்றும் 1980 என தலைப்பிடப்பட்ட இரண்டு கோப்புகளும் அழிக்கப்பட்ட கோப்புகளில் உள்ளடங்குமென பிரிஜ செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலைகொண்டிருந்த, இந்திய அமைதிகாக்கும் படைகளின் செயற்பாடுகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர (அந்த சந்தர்ப்பத்தில்) தொடர்பிலான தகவல்களை அறிந்து கொள்வதற்கும், குறித்த கோப்புகள் ஆதாரமாக காணப்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (மு)

## மீனவர்...

யாழ்.நாவாந்துறை வடக்குப் பகுதியைச் சேர்ந்த படகு உரிமையாளரான தோனிஸ் மல்கன் (வயது 44) என்பவர் செபமாலை அலெக்ஸ் மற்றும் ரூபன் ஆகியோருடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை (26) மதியம் மீன்பிடிக்க செல்வதாக கூறி குறிகட்டுவான் பகுதிக்கு சென்றுள்ளனர்.

அங்கிருந்து ஒரு படகில் சென்ற மூவரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வரை வீடு திரும்பவில்லை. நேற்று காலை 8 மணியளவில் தோனிஸ் மல்கன் தனது மனைவிக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு நடுக்கடலில் திசை தெரியாது நிற்பதாகவும், இந்த தகவலை நயினாதீவு கடற்படையினருக்கு அறிவிக்குமாறு தெரிவித்துள்ளார். அதன்பின்னர் தோனிஸ் மல்கனின் தொலைபேசி செயலிழந்து இருந்துள்ளது.

இந்த நிலையில் தோனிஸ் மல்கனின் மனைவி நேற்று ஞாயிற்றுக்கிழமை (27) யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம், யாழ்ப்பாணம் பொலிஸார் கடற்படையின் உதவியுடன் தேடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும், யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (மு)

## அபிவிருத்தி...

மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார். அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

அதனையடுத்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ள பிரதமர் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி, காணி விடுவிப்பு என்பன தொடர்பாக கலந்துரையாடவுள்ளார்.

படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தி வடக்கில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் பிரதமரின் இவ்விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. (மு)

## சில அரசியல்...

அவர் இதனை கூறியுள்ளார். மேலும் கூறுகையில்,

புதிய முறையில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டு நடந்து முடிந்துள்ளது. மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அது நடக்குமா, நடக்காதா என்பது தெரியாது.

இந்த தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் சிலர் 2020ஆம் ஆண்டு தேர்தலை பற்றி பேசுகின்றனர். எனினும் 2019ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிவுகளை வெளியிட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்பவற்றுடன் நாங்கள் பொதுத் தேர்தலையும் நடத்துமாறு கோருகிறோம்.

எங்களிடம் 54 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். நாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கும் போது 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ள கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

16 பேர் இருக்கும் கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கியதுடன் 6 பேர் உள்ள கட்சிக்கு எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவியை வழங்கியுள்ளனர்.

இவர்கள் அரசாங்கத்தை நடத்தி செல்ல தொடர்ந்தும் உதவி வழங்கி வருகின்றனர். இவர்கள் அனைவரும் ஆளும் கட்சியினர் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (மு)

## இலங்கை...

ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இராமேஸ்வரத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 160க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் எல்லை தாண்டியதாக கூறி இலங்கை அரசு பறிமுதல் செய்துள்ளது.

எனவே அவற்றை மீட்க அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், 61 நாட்கள் தடைகாலத்திற்கு பின் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல கூடிய தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக எதிர்கட்சிகள் ஒற்றை கருத்துடன் செயல்பட்டு வருகிறோம். தமிழக அரசு மத்திய அரசுக்கு வெறும் கடிதங்கள் மட்டும் எழுதினால் போதாது.

அதே போன்று மத்திய அரசு இலங்கை அரசுடன் மீனவர்கள் பிரச்சினைக்கு கண்டிப்புடன் பேச வேண்டும்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையின் பிரச்சினை இல்லாமல் மீன்பிடிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (மு)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-2657)
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

வேலைவாய்ப்புக்கள்
இலவச விசா

| | | |
|---|---|---|
| கட்டார் | தொழில்நுட்பவியலாளர் மின்னியல், இயந்திரவியல், சிவில், மின்னிறுப்பாக்கி, குழாய்பொருத்துநர் | 94,600/- |
| டுபாய் ஓமான் பா.ஃரேன் | தாதியர், பராமரிப்பாளர், பல் மருத்துவ தாதியர், மருந்துவ தாதி, உதவியாளர் | 115,000/- தொடக்கம் 192,000/- |
| கட்டார் | மோட்டார் சைக்கிள், பாக்கி, பஸ் டிரைவர், Nissan கம்பனி பணியாளர் | 49,200/- தொடக்கம் 82,000/- |
| சவுதி அல்மராய் | விற்பனை உதவியாளர், டிரைவர், மெக்கானிக், வெல்டர், பிளம்பர், A/C தொழில்நுட்பவியலாளர் தொழிலாளர்கள் | 46,200/- தொடக்கம் 73,800/- + கமிஷன் |
| குவைத் | ஹோட்டல் பணியாளர்கள் Dish Washer, Waiter, Manager, Kitchen Helper, Commi, Chef | 67,990/- தொடக்கம் 287,650/- + சேவைக் கட்டணம் |

குறிப்பு பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம்
விபரங்களுக்கு 0777324004, 0773616798
SIKARAM ACADEMY FAST TRACK to CAREERS
221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.: 021-222 00 11
TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd., 90, First Floor, Chatham Street, Colombo 1
(C-2723)

வடமாகாண ஆசிரியர் தெரிவுப் பரீட்சை
விசேட இறுதிக் கருத்தரங்கு
நாளை செவ்வாய் (29.05.2018)
சனி (02.06.2018)
ஞாயிறு (03.06.2018)
காலை 09.30-02.30
விரிவுரையாளர் த.த
0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)
(A-2739)

விசேட கருத்தரங்கு
ஆசிரியர் சேவை போட்டிப்பரீட்சை
29.05.2018 செவ்வாய் 09am - 02pm, 02.06.2018 சனி 9am-02pm
P.கமல்தாசன் - SLPS
எதிர்பார்க்கை விடயங்கள்
நாவலர் கல்வி நிறுவனம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 469 6695 விரைவில் SLEAS
(C-2738)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(4208)

உயர்தர வணிகக்கல்வி தொடர் கருத்தரங்கு
A/L 2018
ஆரம்பம் :-30.05.2018 புதன்கிழமை முதல் பிரதி திங்கள்,செவ்வாய்
நேரம் :-02.00-05.00Pm
குறிப்பு:-
• வெளி மாணவர்களும் பங்கு கொள்ளலாம்.
• அனுமதி வழங்கப்படுகின்றது.
T.S.ரிஷி BBA(Hons), HRM(Spl) P.G.D.E
D.M.I
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(4216)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

உடனடி வேலைவாய்ப்பு
★ யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எதிரில் SINGER காட்சியறைக்கு அருகில் உள்ள ஆரோக்கியமான இரசாயன கலப்பற்ற உணவகம் மற்றும் உடனடி பழரச விற்பனை நிலையத்திற்கு காலை 06.00 மணிக்கு முன்னர் காலை உணவு தயாரிப்பதற்கு பகுதிநேர/முழுநேர சமையல்காரர் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்). தங்குமிட வசதியும் உள்ளது.
தொடர்பு:-077 0780240
572, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(4220)
நேர்முகம்: 28.05.2018. 3pm-6pm

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
☛ ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
☛ கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
☛ பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
☛ நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
(C-2726)
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576 | சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576 | கிளிநொச்சியில் - இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு கிளிநொச்சி (தம்ரோ காட்சி அருகில்) 076 443 1576 | 021 222 3536


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.